ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் — ரூ. 3—0<br>6-மாத சந்தா ,, — ,, 1--12<br>வெளி நாட்டிற்கு ,, — ,, 5—0 | ஞாயிறுதோறும் வெளிவரும். | வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.<br>கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 ச்கு ரூ. 2.<br>நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 8. ஈரோடு, ஆங்கிரஸ-ஹு ஐப்பசி-மீ 21-உ (6—11—1932) மலர் 28.

## நீங்கள் விரும்புவதென்ன?

### அறிவுள்ளவர்களாகவும், மூட நம்பிக்கையற்றவர்களாயும், வாழ விரும்புகிறீர்களா?

அர்த்தமற்ற ஓர்வார்த்தையை நம்பி ஏமாந்து, காலத்தை வீணாக்கி, செல்வத்தையழித்து சிதைந்து சோம்பேரிகளாய், வறியராய், வாழ விரும்புகிறீர்களா? இல்லையெனில் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி.எல்., எழுதிய "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நூலை இன்றே வாங்கிபாருங்கள். உண்மைதெரியும், அஞ்ஞானம் தெளியும், சந்தேகம்தீரும், கடவுளைப்பற்றிய அர்த்தமற்ற பயமும், சந்தேகமும் நீங்கும். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழி முந்தியதா, முட்டை முந்தியதா? என்ற சந்தேகங்களுக்குத் தகுந்த விடைகளுடன் 80-பக்கங்களுக்கு மேற்கொண்டது விலை 4-அணா,

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவும்.

கிடைக்குமிடம்:— மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

உங்கள்

## கண்ணேயும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

## பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

## செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லே. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லே. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

**"Sri" Works**

**Beadon St. Calcutta.**


## சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலுபி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.


## குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413

Calcutta- (k)



# இதுதானே தேவை!

இல்லற சுகத்தை யடையச்செய்ய ஏதுவான தாதுபுஷ்டியை அளிக்கும் மாத்திரை.

இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று எண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்துகொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதை திருப்தி பண்ணும் மாண்பு வாய்ந்த தென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்!

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, வீரியக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, சோகம் துவளல், இளைப்பு, தாகம் முதலியவைகளை நீக்கி வீரிய விருத்தி, போகசக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளைகொடுக்கும். குளிகை 20 ரூ. 2—0—0. (தபால் சார்ஜ் வேறு)

**மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S.I.**



## Goshaye office pillss.

## கோஷாயி ஆபீஸ் மாத்திரை



Dr. T.K.V. Chalam.

——::——

சுகானந்த சடலத்தில் தன், பகுத்தறிவை அறிந்து அரிவாகிய அருள் ஜோதியை தெரிசித்து ஆனந்தமனுபவிக்க, அல்லலற்ற சிவ ராஜயோகம் சாதித்து வருவோர்களுக்கும், முடிவுபெற்ற காரியங்களில் மனதை புகுத்தி சதா சஞ்சலம் அனுபவித்துவரும் இல்லற வாசிகளுக்கும் (ஆனந்த அருள் நீருக்கும் அழுகை கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம்போல்) மூலாக்கினி தகித்து வருவதினால் வாத, பித்த, அய்யமென்னும் சிலேத்துமமும், காலாக்கிரம ஆகார தவக்கத்தினால் முாணுகி, பித்தமதிகரித்த வெட்டையும், வாய்வும், உரவாகியது முதல், மலபந்தம், மலச்சிக்கல், மலம்தீய்தல், அன்னதுவேஷம், அசதி, இடுப்புவலி, மார்நோய், சூலை, கீல்வாய்வு, தாதுநஷ்டம், முதலியவை ஜெனிப்பது மலபந்த முள்ளோர்களின் அனுபவ சித்தி.

மேல்கண்ட உபாதையுளளோர்கள் இரவு போஜனத்துக்குப்பின் ஒரு மாத்திரையை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து ஒன்றிரண்டாய் மென்று ஜலம்விட்டு கொப்பளித்து (கொப்பளித்து) சாப்பிட்டால் வாய்வுகளை கலைத்து வெளியாக்கி மலம் தாராளமாய் கழிக்கும். சுவரம், தைலஸ்நானம் முதலிய யாவும் வழக்கம்போல் நடத்திக்கொள்ளலாம். ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணம் பெறக்கூடிய **கோஷாயி ஆபீஸ் மாத்திரை** 51 கொண்ட சீசா 1-க்கு 1—10—0; 101 கொண்ட மாத்திரை சீசா 1-க்கு ரூ. 3—0—0 வி. பி. பேக்கிங் சார்ஜ் வேறு. சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டார்கள் ஆர்டருடன் ரூ. 1—12—0 சேர்த்து மணியார்டர் செய்யவும்.

*Proprietor. T. K.* வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.


## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.


## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.


## ரூ. 2-14-0 க்கு 6-பாட்டல்

ஒட்டோ வாங்குபவர்களுக்கு 3-கடியாரங்களும், 1-பவுண்டன் பேனாவும், 94-சாமான்களும் இனம்.



நமதுபுகழ்பெற்ற "ஒட்டோ மோட்டியா" ஒரே தடவையில் 6 பாட்டல் வாங்குபவர்களுக்கு 3 கடியாரங்களும், 1 ரயில்வேடைம்டம்மி பாக்கெட் கடிகாரமும், 5 வருஷம் உத்திரவாதமுள்ள நல்ல யந்திரங்களுள்ள'பி'டைம்பீஸ் 1-ம், கோல்ட்கில்ட் டம்மி ரிஸ்ட் வாட்ச் 1-ம், அழகான 14Kt தங்க நிப் பவுண்டன் பேனா 1-ம், மோதிரம் 1-ம், 94 படங்களும் இனம் கொடுக்கப்படும்.

பாக்கிங் தபால் செலவு வேறு.

The Indian National Stores
17. Joy mitter St.. Calcutta.


தேசாபிமானம் நாளைக்கு,
இன்றைக்கு சோற்றுக்கு.

# "சமதர்ம முரசு"

## மக்களுக்காக மதங்களா? அன்றி மதங்களுக்காக மக்களா?

## தொழிலாளிக்கு மதக்கட்டுப்பாடு ஏன் வேண்டியதில்லை!

### கடவுள் பக்தியும், மத நம்பிக்கையும் பசியைத்தணிக்குமா?

(தோழர். A. இரத்தினசபாபதி)

(11)

ஆதியில் மனிதன் எவ்வகை நாகரீக உணர்ச்சியுமின்றி "கண்டதே காட்சி கொண்டதே கோலம்"மென்று நடந்து வந்த காலத்தின் பின் மக்கள் தங்களுக்குள் சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அவற்றை அனுசரித்து வாழத் தொடங்கிய காலத்திற்றான் "மதம்" என்னும் சொல் மனித சமூகத்தினிடை இடம் பெறலாயிற்று. மனிதர்கள் தாங்கள் எல்லோரும் சுகமாகவும்; கட்டுப்பாடாகவும் வாழ்வதற்காக ஏற்படுத்திக்கொண்ட கட்டுப்பாடுகளே— சட்டதிட்டங்களே—கொள்கைகளே, இவற்றின் தொகுதியே "மதம்" என்னும் பெயர் பெறலாயிற்று.

"மனிதர்கள் சுகமாக வாழ்வதற்காக மனிதர்களால் வகுக்கப்பட்டிருக்கும் கொள்கைகளே மதங்கள்" என்ற மட்டில் இன்றைய மதங்களிருக்குமாயின் அவற்றிடம் சமதர்மவாதிக்குத் தண்டா இல்லை. ஆனால் "மதங்கள் எல்லாம் கடவுளால் உண்டாக்கப்பட்டவைகள் மக்களுக்காக மதங்களல்ல; ஆனால் மதங்களுக்காகத்தான் மக்கள் இருக்கிறார்கள்" என்று கூறுகிற இடத்தில்தான் சமதர்மவாதியின் தீட்சண்யமான, வாள் வீச்சு விழுகிறது.

ஏனெனில் "மக்களுக்காக மதங்கள், எனக்கொள்ளுவோமாயின் காலத்திற்குகந்த மாதிரியில் மனிதனின் சுக வாழ்விற்கொத்த திட்டத்தில் அம்மதக்கோட்பாடுகளை மனிதன் மாற்றிக்கொள்ள இடமிருக்கிறது. ஆனால் "மதங்களெல்லாம் ஆண்டவனால் அருளப்பட்டவை" எனக்கொள்வோமானால், கால சக்கரத்தில் என்ன மாறுதலேற்பட்டாலுஞ்சரி, அவற்றால் மனிதன் எவ்வாறு பாதிக்கப்பட்டாலுஞ்சரி, அந்த மதக்கோட்பாடுகளை மயிரிழையும் பிறழ விடாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறது. இங்குதான் சமதர்மவாதிக்கு மதங்களுடன் மடிபிடி சண்டை இடம் பெருகிறது.

அன்று உலகில் உள்ள மக்கள் மதங்களுக்கு தத்தமது மதங்களில் அபிமானமும் மரியாதையும் அடக்கமும் வைத்தே வந்தனர். ஆனால் இன்று மதக்கட்டுப்பாடென்பவைகள் உடைத்தெரியப்பட்டு வருவதை உலகெங்கும் நடைபெற்றுவரும் தலைகீழ்ப்புரட்சியின் விபரங்களால் அறியலாம்.

### ஏன்?

மதமே கதியெனவும், மதத்திற்கடங்கி நடப்பதே வாழ்க்கையின் இன்பமெல்லாம் எனவும், மதகுருவே கடவுளெனவும் நம்பி இருந்த ரஷியநாட்டில் தற்சமயம் மதமும் அதன் ஆதிக்கமும் படாதபாடு படுகின்றன. இன்று கோவில் ஆராதனைகளும், பாதிரிகளும், பாபமன்னிப்புகளும் அந்நாட்டில் காணப்படவில்லை! ஏன்? பெண்கள் முகமூடியணிந்துகொண்டு அடுக்களைகளிலும், அந்தப்புறங்களிலும் அடைபட்டுக்கிடப்பதுதான் மதக்கட்டளை, பெண்கள் கல்விகற்பதும் ஆடவர்களுடன் சம சுதந்திரம் அனுபவிப்பதும் ஆண்டவனின் கட்டளைக்கு மாறானவை; புருடனே தெய்வமென்றெண்ணி அவன் எத்தனை பெண்களைக்கட்டிக்கொண்ட போதிலும் அத்தனை பேரும் அவன் பாதத்தையே நம்பிக்கொண்டிருப்பது மதத்தின் கட்டளை; என நம்பி வந்த "துருக்கி" நாட்டில் தற்சமயம் முகமூடிகள் ஓடிஒழிந்தன; பெண்டிர் தங்கள் சுதந்திர உரிமையை உணர்கின்றனர். தக்க கல்வி பெருகின்றனர்; ஆடவருடன் உத்தியோகம் வகிக்கின்றனர். விவாக உரிமையும் பெற்றிருக்கின்றனர். சுகமான வாழ்க்கை நடத்துகின்றனர். இவ்விதம் பெண்கள் நடக்கலாகாதெனத் தடைப்படுத்தி வைத்திருந்த மதக் கோட்பாடுகளும் ஆண்டவனின் அருள் வாக்குகளும் அவர்களுக்கெதிர் நிற்கமாட்டாமல் ஓடிஒளிந்து முக்காடிட்டு புர்க்கா அணிந்து மூலையில் குந்திவிட்டன என்?

என் இந்த மாறுதல்களெல்லாம்? மக்கள் என் இந்த மதக்கோட்பாடுகளை அசட்டை செய்தனர்? அவற்றிடம் மக்களுக்கிருந்த பயம் எங்கே போயிற்று?—ஆ! இங்குதான் வெளிப்படுகிறது வெளிச்சம்!

காலச்சக்கரத்தின் மாறுதலால் மனிதனது வாழ்க்கை முறையும் மாறிக்கொண்டே வருகிறது. இது இயற்கை! உதகமண்டலம், நீலகிரி, கொடைக்கானல் முதலிய குளிர்ந்த இடங்களில் போர்த்துக்கொள்ள உதவும் கம்பளம், கர்நூல், கடப்பை முதலிய உஷ்ணப் பிரதேசங்களில் உதவுமோ?

நீங்கள் மூன்று வயதுக் குழந்தையாயிருக்கையில் உங்கள் தகப்பனார் உங்களுக்குத் தைத்துக்கொடுத்த அழகிய, சிறிய பட்டுச்சட்டையை நீங்கள் அப்போது நேசித்தீர்கள், உங்களுக்கு அது பிரியமானதுதான். ஆனால் அதே சிறிய சட்டையை இருபது வருடங்களுக்குப் பிறகு இருபத்து மூன்று வயதடைந்திருக்கும் நீங்கள் தரித்துக்கொள்ள முடியுமா? முடியாதெனில் ஏன் முடியாது?

அந்தச்சட்டை மிகவும் சிறியது, நீங்கள் சிறு குழந்தையாயிருந்தபோது அது சரியாயிருந்தது. ஆனால் இப்போது நீங்கள் பெரியவர்களாய் வளர்ந்துவிட்டீர்கள். உங்களது ஒரு கைகூட அச்சட்டையினுள் நுழைவது கஷ்டமாக இருக்கிறது. எனவே அதைத்தூர எறிந்துவிட்டு தற்போதைய உங்கள் உடம்புக்குச் சரியான அளவுடைய ஓர் சட்டையைத்தைத்துப் போட்டுக்கொள்வது தான் அறிவுடைமையாகும். அஃதே போன்று இந்தமதக்கோட்பாடுகள் ஓர் காலத்தில் பொருந்தமானதாயிருக்கலாம்! ஆனால் மனிதனின் இன்றைய வாழ்க்கை முறைக்கு அது ஒத்துவரவில்லை. ஆகவே சிறுபிராயத்துச்சட்டையை ஒதுக்கிப் புதிது தைத்துப்போட்டுக்கொள்வது போல் தற்காலத்திற்கு வாழ்க்கைக்குப் பொருந்திய முற்போக்கைக்கிசைந்த கொள்கைகளைக்கடைப்பிடிக்கவேண்டியதைத்தவிர வேறு மார்க்கமென்னவிருக்கிறது அப்படியில்லாமல், இக்காலத்திலும் பழைய கோட்பாடுகளையே என் கடைப்பிடிக்கக்கூடாது? கடைப்பிடித்தாலென்ன ஆகும்? என மதபக்தர்கள் கேட்கின்றனர்.

என்? நீங்கள்தான் யோசித்துப் பாருங்களேன்!—நீங்கள் மூன்று வயதுக்குழந்தையாயிருக்கையில் போட்டுக்கொண்ட அதே சட்டையை முப்பது வயதான பிறகும் நீங்கள் என்போட்டுக்கொள்ளக்கூடாது? போட்டுக்கொண்டால் என்ன ஆகும்?

அவ்வாறே சிறிய சட்டையில் உங்கள் உடம்பு நுழையாத சட்டையை பலவந்தப்படுத்தி உங்கள் உடம்பில் அச்சட்டையை அணிய முயற்சித்தால் அந்தச்சிறிய சட்டை டார்டாராகக் கிழிந்துபோகிறது! வேறென்ன செய்யும்? இதே கதைதான் இன்று உலகில் நடைபெறுகிறது! மனிதன் முன்னேற விரும்புகிறான். அவனது லட்சியங்கள் பெரியவையாகிவிட்டன. அப்பொழுது அவன் தரித்திருந்த பழைய "மதம்" என்னும் சட்டை சிறியதாகப் போய்விட்டது. இப்பொழுது அவனது பெரிய லட்சியத்திற்குத் தக்கபடி பெரிய கொள்கை—பெரிய சட்டை (மதம்) வேண்டியதிருக்கிறது. அதைத்தெரிந்து கடைப்பிடிப்பதைவிட்டு பழைமை, மதம், கோட்பாடு, என்னும் பழைய சிறிய சட்டைகளை மனிதன் போட்டுக்கொள்ள முயற்சிக்கையில் அந்த மதங்கள் என்னும் சட்டைகள் தாமாகவே சுக்குசுக்கலாய் கிழிய ஆரம்பிக்கின்றன. ஏன்? மனிதன் வளர்ந்து விட்டான். அதாவது மனிதனது லட்சியங்கள் வளர்ந்துவிட்டன. பழைய சிறிய, மதக்கோட்பாடுகள் என்னும் சட்டைகள் இவனுக்குப்போதவில்லை. அதனால்தான் சிறிய சட்டைக்குள் பெரிய உடம்பை நுழைக்கும்போது உண்டாகும் நிலைமை இக்காலத்தில் முன்னேற்றமடைந்து வரும்தேசங்களில் காணப்படுகின்றன! எனவே இதில் நாம் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

நாம் கூறுகிறபடி, மதங்கள் "இவ்வுலகில் மனிதன் சுகமாக வாழ்வதற்கான கொள்கைகளின் தொகுதி" என்ற மட்டிலிருந்தால் இத்தகைத் தண்டாவே ஏற்பட இடமில்லை. ஆனால் இருக்கும் இரகசியம் என்ன? மதங்களெல்லாம் கடவுள்களாலும், கடவுள்களது திருத்தூதர்களாலும், கடவுள்களது திரு அவதாரங்களாலுமே உண்டாக்கப் பட்டவையாயும், மனிதனின், —பரலோக வாழ்க்கைக்கு சாலோப, சாமீப, சாரூப, சாயுஜ்ய பதவிக்கு வழிகாட்டு பவையாயும், கருதப்படுவதால்தான் அவஸ்தையடைகின்றன!

"இவ்வுலக வாழ்க்கையில் நீ ஒருவிதமான சுகமும் அடையாவிட்டாலும், மதக்கோட்பாடுகளை அனுசரித்து நடந்தால், உனக்குப்பரலோகத்தில் பரமசுக பாக்கியம் கிடைக்கும்" என்று மதங்கள் உறுதிகூறுகின்றன. ஆகையினால் தான் மனிதன் இவ்வுலகில் எப்பாடுபட்டுக்கொண்டேனும் மதக்கட்டுப்பாட்டைக்கடைப்பிடித்து மோட்சலோகத்தின் சாவியைப் பெறவேண்டுமென்று குறுகிய மண்டைகள் எண்ணமிடுகின்றன.

இந்த இடத்தில்தான், சமதர்மவாதியின் கூர்மையான கத்தி மதத்தின் மண்டையில் விழுகிறது! ஏனெனில் சமதர்மவாதி பரலோகத்தைப் பற்றியும், அங்கு கட்டில் மெத்தைகளுடனும், கால் பிடிக்கவும் கை பிடிக்கவும் தேவதாசிகளுடனும் பசி, பிணி, மூப்பு, துன்பம், சாக்காடு என்பனவை யல்லாமல் கற்பகத்தருவினடியில் படுத்திருப்பதைப்பற்றியும் எண்ண மிடுவதில்லை. அப்படி எண்ணமிட சமதர்மவாதிக்கு நேரமுமில்லை.

ஏனெனில் அவன் கனவுகள் அந்தப்பரலோகத்தையும், இந்த சுகபோகங்களையும் சொப்பனத்திலும் காண்கிறதில்லை. காணவில்லை. ஆனால் சம

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# அறிவியக்கத் தோழர்களுக்கோர் அறிவுரை.

அறிவியக்கத்தின் முழு நோக்கமும் ஜனங்களுக்குள் விஞ்ஞான மனப்பான்மையை உண்டாக்கவேண்டுமென்பதே. அறிவியக்கத்தை ஆதரிக்கிறவர்களாக இருக்கும் ஒவ்வொருவரும் பிறருக்கு எடுத்துச்சொல்லவேண்டியவராதலால்தான் விஞ்ஞான அறிவுடையவராயும், மூடப்பழக்க வழக்கங்களை அகற்றியவராயும் இருக்கவேண்டுமென்பது சொல்லாமலே அமையும். அவ்வாறன்றி அறிவியக்கத்தை ஆதரிக்கின்றவராகச் சொல்லிக்கொள்ளுகிற ஒருவர் தனது தினசரி வாழ்க்கையிலும், பழக்க வழக்கங்களிலும் அறிவியக்கத்தாரல்லாதவர்களைப் போலவே நடந்துகொண்டால் நமக்கும் பிறர்க்கும் வித்யாசந்தான் என்ன? மற்றவர்கள் நம்மைத் தூற்றமாட்டார்களா?

ஆகையினால் அறிவியக்கத்தாரான நாம் நம் வாழ்க்கையில் அறிவியக்கத்தாரல்லாத மற்றவர்களைப் போல் மூடப்பழக்கவழக்கங்களில் ஈடுபடாதிருக்கவேண்டியது முதற்கடமையாகும். இவ்வியக்கத்தினைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொல்வழி நிற்க வேண்டுவது அவசியமாகலின், அவர்கள் ஒரு மதத்தையும் சேர்ந்தவர்களாய் இருக்கக்கூடாது. இந்த இயக்கத்தில் பற்றுடையவன் என்று கூறுகின்ற ஒருவன், வேறு எந்த மதத்தையாவது தான் சேர்ந்தவன் என்று சொல்லிக்கொண்டால் அவன் போலியேயன்றி உண்மையானவன் அல்ல. ஜாதி மத பேதத்தைக் காட்டுவதற்கு அறிகுறியாகவுள்ள விபூதியோ, நாமமோ, பொட்டோ அன்றிச் சிலுவைபடையாளமோ போட்டுக்கொள்ளும் எவனும் இவ்வியக்கத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ளயோக்கியதையற்றவனுவன். கோவில் உற்சவங்களுக்குப் போகிறவர்களும், விரதங்கள் அனுஷ்டிக்கிறவர்களும் அறிவியக்கத்தவர் என்று சொல்லிக்கொள்வது வீண் டம்பமேயாகும். நம்மைச் சுற்றியுள்ள ஜனசமூகம் மிகவும் பிற்போக்கானதும் குருட்டுப்பழக்க வழக்கங்களும் உடையதாதலால் இதனை எதிர்த்து அறிவியக்கக் கொள்கைகளைப்பரப்ப முற்படுகிறவர்களும் சாதனையிற்காட்ட வேண்டியவர்களாயும், சுத்த வீரராயும், அஞ்சா நெஞ்சினராயும் இருக்கவேண்டியதவசியம்.

சீர்திருத்தக்காரர்களாகிய நம் இயக்கத்தார் தாங்கள் சொல்லுவதைச் செய்ய முற்படுவதற்கு மிகப்பலமான எதிர்ப்பு உண்டாகி நமக்கு ஆபத்து வரும்போலிருந்தால் அப்பொழுதும் நாமாக விட்டுக்கொடுக்காமல் அவர்களாய் நமமை துன்புறுத்தி இணங்க வைத்ததாகவாவது இருக்கவேண்டும். எந்தக்கூட்டத்தாரையும் விட நம்மிடம் குற்றம் கண்டுபிடிக்க விரும்புகின்றவர்களும், நம்மைத்தூற்றத் தயாராக விருக்கிறவர்களும் அதிகமாதலால் நம் போதனைக்கேற்ற சாதனை நம்மிடத்திருக்கவேண்டியதவசியம்.

உதாரணமாக நாம் சொல்வழி நிற்கின்றவர்களானால் முதலாவதாக நாம் ஜனசமூகத்தையே கெடுத்து மக்களின் அறிவை இருட்டாக்கி ஆளகினைக்கும் ஜனசமூக விரோதிகளான, பிரயோஜனமற்ற கூட்டத்தாரான மதகுருக்களுக்கு அரைக்காசும் கொடுக்கக்கூடாது.

நம்மில் எவரும் நேராகவாவது அல்லது மதசம்பந்தமான திருவிழாக்கள் மூலமாகவாவது நம் செம்புச் சல்லிகளில் ஒன்றுகூட மதகுருக்களுக்குப் போகும்படியாக விட்டுவிடக்கூடாது. பூணூல் அணிதல் திதி திவசங்கள் செய்தல், கலியாணம், கருமாதி முதலியவைகள் செய்தல் இவைகளால் ஜனசமூகத் துரோகிகளான மதகுருக்கள் தின்று கொழுக்க ஏதுவாக இருப்பதால் இத்தியாதி சடங்குகளை நாம் அறவே ஒழித்தல் வேண்டும். மனமொத்த இருவர் சடங்கு சாரமாய்க்கலியாணம் செய்யாது, சேர்ந்து வாழ்வதைச்சட்டம் அனுமதிக்கவில்லை என்று அஞ்சுவீர்களாயின் மணங்களையெல்லாம் ரிஜிஸ்தர் செய்துகொண்டாற் போதுமானது.

நாம் நம்மை அறிவியக்கத்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு மற்றவர்களுக்கு உணர்ச்சியூட்ட வெளிக்கிளம்புமுன் நம்முடைய வாழ்க்கையில் நம் கொள்கைகளைச் செய்து காட்ட வேண்டும். கல்வியறிவுடையவராகக் கருதப்படும் நம் நாட்டவர்களுக்குள் ஒரு பெருங் குறைபாடுள்ளது. அதாவது அவர்கள் பிசகு செய்தாலும் தீங்குவராத பிசகைச் செய்யவேண்டும் என்று கொள்வதே. உதாரணமாக, நாஸ்திகவாதி ஒருவனைப்பார்த்து அவர்கள் சொல்வது என்னவென்றால்:—“நீர் கடவுள் இல்லை என்கிறீர் நாங்கள் உண்டென்கிறோம். நீர் சொல்லுகிறது உண்மையாகவேயிருந்து கடவுளில்லாமற் போனால் அதனால் எங்களுக்கு ஒரு தீங்கும் விளையாது. ஆனால் இல்லையெனும் நீங்கள் தண்டிக்கப்படுவீர்கள். ஆகையால் நாங்கள் செய்வது நல்லது” என்கிறார்கள். தங்கள் அறிவிற்கெட்டாததும், விஞ்ஞானஆராய்ச்சிக்கு ஒத்திராததுமான ஒன்றை தங்கள் கோழைத்தனத்தால் உண்டெனச்சாதித்து அவசரமாய் டிராம் வண்டிகளிற் செல்லும் போதுங்கூட மரத்தடிகளிற் காணப்படும்ஒவ்வொரு கல்லின் முன்னும் இருகரங்குவிக்கும் பெரியார்களைக் கண்டு நாம் பரிதபிக்கத்தான் வேண்டியிருக்கிறது. (இவ்வாறு செய்வதால் தாங்கள் ஒரு நலனும் அடையாவிட்டாலும், இனி வரும்உலகொன்றுண்டு அதில் குபேர சம்பத்தடைவோம் என்று எண்ணுகிறார் போலும். பாவம்! இலவு காத்த கிளிகள்)

இவ்விதம் படித்த அறிவிலிகள் இனிவரும் உலகைச் சுதந்தரிக்கும் ஆசையால் ஈடுபடும் மூடப்பழக்க வழக்கங்களுக்கும் வீண் பண விரயங்களுக்கும் கணக்கில்லை.

ஜெர்மன் தேசத்து அறிஞர் ஒருவர் நம் நாட்டுக் கல்லூரி மாணவர்களும் படித்தவர்களும் தாங்கள் நெற்றிகளில் காட்டுமிராண்டிகள் போல் வர்ணங்கள் தடவிக்கொள்வதையும் பூணூல் அணிவதையும் படிக்கும் அறைகளில் மண் பொம்மைகள் வைத்து மலர் சாற்றுவதையும் கண்டு எள்ளி நகையாடினர். அவருக்கு மத நம்பிக்கையுடைய எந்த நாட்டிலும் இவ்வித மூடப்பழக்க வழக்கங்கள் உண்டென்றும், ஜெர்மனியிலும் மூடப்பழக்க வழக்கங்கள உண்டென்று நாம் சுலபமாய் பதில்சொல்லக்கூடுமாயினும், நம்நாடு மூடப்பழக்க வழக்கத்தில் முதற் பிரைஸ் வாங்குவதால் நமக்கு ஈடு ஒருவரையும் சொல்ல முடியாது வாய் பொத்திக்கொண்டிருக்க நேர்ந்தது.

காரண காரியத்தை ஆராய்ந்து பார்க்காது “பழமையைப் போற்றி வாழ்” என்ற மனப்பான்மை நம் ஜனசமூகத்தில் மிகுந்திருப்பதாலும், படித்தவர்களும் இவ்வித மனப்பான்மையேயுடையவர்களாய் குருட்டுப் பழக்க வழக்கங்களுக்கு சப்பைக்கட்டுக்கட்டவே தங்கள் அறிவை உபயோகிப்பதாலும் நம்நாடு இவ்விதமிருக்கின்றது.

நாம் தாட்சண்யப்பட்டுக்கொண்டு அறிவியக்க ஸ்தாபனம் ஒன்றுக்குப் பொருளுதவி செய்வது போல், ஓர் மகம்மதிய மசூதிக்கும், ஓர் ஹிந்துக் கோவிலுக்கும் அல்லது கிறிஸ்தவச் சர்ச்சுக்கும் பொருளுதவி செய்யக்கூடாது. இந்த ஸ்தாபனத்தில் எந்த ஒன்றை ஆதரிப்பது என்ற முடிவிற்கு வருதலும், முடிவு கட்டிய பின் அந்த ஒன்றையே ஆதரித்தலுமே நம் கடன். அப்படியல்லாவிட்டால் சும்மாவிருந்தாலும் இருக்கலாமேயன்றி “ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால்” என்பது போல் “அறிவியக்கம்” “மதம்” என்னும் ஒன்றிற்கொன்று எதிரிடையான இரண்டு ஸ்தாபனங்களையும் ஆதரிக்கலாகாது.

கடைசியாகத் தீண்டாதார் ஆலயப்பிரவேசம் என்னும் விஷயத்தை எடுத்துக்கொள்வோம். இதில் அறிவியக்கத்தாரான நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டும். தாழ்த்தப்பட்டார் ஒன்றுபடுவதாய் இருந்தால் சமபந்தி, கலப்பு மணம் இவைகளேயன்றி ஒன்றுமற்ற கோவிலிற்குப் போவதையும் மூடப்பழக்க வழக்கங்களையும் வளர்க்கும் மதப்பிரசினையையும் நன்கு கண்டிக்க வேண்டும். கோயில், தேச மக்கள் யாவருக்கும் சொந்தம் என்ற முறையில், ஒரு வகுப்பாருக்கு இடங்கொடாமல் எல்லோரும் அனுமதிக்கப்படவேண்டும் என்பதை நாம் ஆதரித்தாலும், இறுதியில்கோயிலில்ஒன்றுமில்லை, உங்களை ஒன்று படுத்தக் கோவில் வேண்டும்; உடனிருந்துண்ணலும், கலப்புமணங்களும் அவசியமில்லை என்று கூறும் மாளவியா, மகா ஆத்துமாக்களைக் கண்டு மயங்காதீர்கள் என்றே அறிவுறுத்தல் வேண்டும். “ஹரி ஜனங்கள்” என்று நம் சகோதரர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பெயர் அவர்களை மதத்துட் புகுத்தி அடிமைகளாக்குவதால், அப்பெயரிட்ட நோக்கத்தின் சூழ்ச்சியை அவர்களுக்கு எடுத்துக் காட்டவும் அறிவியக்கம் பின்னிடலாகாது. நம் உணர்ச்சியை வெறும் பேச்சிலும், மேடையளவிலும் நிறுத்தாது செய்கையில் காட்ட முற்படவேண்டும்.

## சேலம் சுயமரியாதைச் சங்கம்

சேலம் சுயமரியாதைச்சங்கத்தினுதரவில் நேற்று ஒரு பொதுக்கூட்டம் தோழர் ஏ. சித்தையா அவர்களின் தலைமையில் கூடியது. மதமும் மக்களது மூடநம்பிக்கையும் “என்னும் விஷயத்தைப்பற்றி தோழர்களான, ஜலகண்டாபுரம் எஸ். ராமநாதன், ஆர். நடேஸன், எஸ். சி. கந்தசாமி, முதலியவர்கள் பேசினுர்கள். தலைவர் முடிவுரைக்குப்பின், அடியிற்கண்டஅனுதாபத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டு கூட்டம் கலைந்தது.

சுயமரியாதை யியக்கத்தில் அதிதீவிர உழைப்பாளியும் வாலிபரும், திருச்செங்கோடு சுயமரியாதை வாலிபர் சங்கத்தலைவருமான தோழர் ஏ. பி. குமாரசாமி அவர்கள் தமது இளம் வயதில் அகாலமரணமடைந்தது பற்றி இக்கூட்டம் பெரிதும் வருந்துகிறது. அவருடைய பிரிவாற்றுமையால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறது— எனஒருநிருபர்

## புதிய விலாசம்.

திருச்சி தோழர்களான ராம சுப்பிரமணியம் நீலாவதி அம்மையார் அவர்கள் புதிய விலாசம் கீழ்க்கண்டவாறு என்பதை நண்பர்கள் அறியுமாறு தெரிவிக்கிறார்கள்.

புதிய விலாசம்:—
ராம சுப்பிரமணியம்,
எஸ். நீலாவதி அம்மையார்
41, திப்ரான் தொட்டித்தெரு,
திருச்சி,

# ஜப்பானின் முற்போக்கு!

## கைத்தொழிலின் பெருமை!

(திருமதி ஆர். அன்னபூரணி)

உலகின் பிரிவுகளாகும்* ஐம் பெருங் கண்டங்களில் அமைந்து கிடக்கும் பல்வேறு தேயங்களில் கிழக்கே ஆசியாக்கண்டத்திலுள்ள மிகச் சிறிய தேசம் ஜப்பானாகும்! உலகப்படத்தைப் (Map) பார்ப்போமானால் மிகச்சிறிய துண்டாகவும், பல தீவுகள் சேர்ந்த ஒரு தேசமாகவும் தென்படுவது ஜப்பானேயாகும்!

நமது இந்தியாவைப்போன்றே ஜப்பானிலும் சுமார் 50 வருஷங்களுக்கு முன், பல மூடப்பழக்க வழக்கங்கள் வேரூன்றிப் போய் கிடந்தன! பெண்களையும் அவர்கள் அடிமைகளாகவும், அறிவற்றவர்களாகவுமே மதித்துவந்தார்கள். அவர்களது தேசத்தின் ஜனத்தொகையோ மிகமிக சொற்பமாகும்!

ஆனால் இஞ்ஞான்று ஜப்பானின் முற்போக்கை நோக்குங்கால், ஆச்சரியமும், ஆனந்தமுமே மேலிடுகிறது! அவர்கள் தேசத்தில் கைத்தொழில் ஆச்சரியப்படத்தக்க விதமாய் அபிவிர்த்தியடைந்து வருகிறது. அவர்கள் பெண்களோ வீரப்பெண்களாக வாழ்ந்து தேச நன்மைக்கான எல்லாத்துறைகளிலும் ஆண்களோடு சமத்துவமாக, ஸ்தானம் வகித்து உழைக்கின்றனர். கல்வி அபிவிர்த்தியும் மிக அதிகம்! அலட்சிய புத்தியென்பதையும் சோம்பித்திரிவதென்பதையும் ஜப்பானிடத்தில் காண்பதரிது!

இவர்களின் இத்தகைய அபார முற்போக்குக்குக் காரணமென்னவென்றாராய்தல் நம்போன்ற பிற்போக்கான தேசத்தவர்களின் நீங்காக் கடனேயாகும்!

ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் அத்தேச மக்களிடையே (ஆண், பெண் உள்பட) சமத்துவமும், சகோதரத்துவமும், உண்மையும், உறுதியும், ஊக்கமும், ஒற்றுமையும் பொங்கித்ததும்ப வேண்டியதே வேண்டற்பாலதான சாதனங்கள் என்னும் மறுக்கொணா உண்மையை ஜப்பானியர் நன்குணர்ந்தனர்! உணர்ந்ததுமே அத்துறையில் முனைந்து நின்று செயலாற்றாமல் பழமைக்குப் பாதகம் வந்து விடுமே! முன்னோர் வாக்கு முறிந்து விடுமே! கடவுள் கட்டளை செத்து மடிந்து விடுமே! சாமிகளெல்லாம் ஓடி ஒளிந்து விடுமே யென்ற மௌடீகமும், கண்மூடித்தனமுமான சோம்பேறிப்பல்லவியைப் பாடிக்கொண்டிருக்கும் நம் நாட்டவரைப் போலில்லாமல், தம் தேசத்தின் முற்போக்குக்கு இன்றியமையாதன எனப் புலப்பட்ட உண்மைகள் எவையோ, அவற்றிற்காக தீவிரமாக உழைத்து அதிசீக்கிரமாக முன்னேற்றத்துறையில் வெற்றியடைந்தவர்கள் ஜப்பானியர்களே!

ஜப்பான் நாட்டினர் கைத்தொழிலைக் கண்ணெனப் போற்றி வளர்க்கின்றனர். எந்த ஒரு சிறு அற்ப பொருளையும் அவர்கள் அலட்சியஞ் செய்து ஒதுக்குவதில்லை! சாதாரணமாக வியாபாரத்தினிமித்தம் இந்தியாவுக்கு வரும் ஜப்பானிய வியாபாரிகளைப் பார்த்தால் குப்பைத் தொட்டிகளில் உபயோகமற்றதெனக்கருதி விட்டுவிடப்பட்டிருக்கும் அநேக பொருள்களை அதாவது, உடைந்த கண்ணாடி சிம்னிகள், கோழி, இறகுகள், கட்டைகள் முதலியவை போன்றவற்றை அவர்கள் வெகு அக்கரையோடு சேமித்துக்கொண்டு போவதைக்காணலாம்! அவற்றைக்கொண்டு என்ன செய்கின்றார்கள்? அநேக சித்திரசாமான்களையும் சிறு சிறு பொருள்களையும் செய்து அவற்றை விற்றுப் பணமாக்குகின்றார்கள். தங்கள் தேசத்தில் தங்களால் செய்யப்பட்ட பொருளை விற்பனை செய்வான் வேண்டி, முன்பின்னறியாதனவும், பாஷைகள் புரியாதனவுமான, பல தேசங்கட்கு தங்கள் மனைவி மக்களுடன் வந்து விடுகின்றனர். காகிதத் தொழிலில் பேர் பெற்றவர்கள் ஜப்பானியர்களே! காகிதங்களில் பலவித சித்திரப்பொருள்கள் தயாரித்து நல்ல விலையில் விற்று லாபம் அடைகின்றனர்.

ஜப்பான் நாடு மிகச்சிறிய நாடென்று முன்னமே கூறப்பட்டுள்ளது. இச்சிறிய நாட்டிலும் இயற்கை வளப்பங்களேனும் நன்கமைந்திருக்கவில்லை! அடிக்கடி பூகம்பத்தினாலும், எரிமலைகளினாலும் ஜப்பான் அழிக்கப்பட்டது! இத்தகைய நெருக்கடியான ஓர் நாட்டில் ஜப்பானியக் குடிமக்கள் எவ்வளவு ஊக்கத்தோடும் அறிவோடும் ஆண்மையோடும் முன்னேறி வருகின்றனர் என்பது கவனிக்கத்தக்கது! கைத்தொழிலில் மகா கவனம் செலுத்தி வருவதாலும், சிறு பொருளையும் அலட்சியம் செய்யும் மனப்பான்மையுமில்லாததாலும், உடைந்து உபயோகமற்றது என ஒதுக்கப்பட்ட பொருள்களைக்கொண்டும் சிறு சிறு பொருள்களாகச் செய்து விற்று வருவதாலும்; ஜப்பானைவிட பன்மடங்கு பெரிதும், பன்மடங்குஜனத்தொகை கொண்டதுமான இந்தியாவை ஜப்பானின் பொருளை விற்பனை செய்யும் 'கடை' யாக (Market) ஜப்பான் பாவித்து, வேண்டிய பொருள்களை விற்று வருகின்றதென்றால், ஜப்பானியக் கைத்தொழிலின் அபாரமுற்போக்கு தானென்னே! இன்னும் அவர்கள் நாட்டில் சூடம் என்னும் கற்பூரம் அபரிமிதமாகக் கிடைப்பதால் அவற்றை விற்றும் ஏராளமான பொருள் பெருகின்றனர்! நமது நாட்டிலே சிறு சிறு பொருள்களாயிருப்பவை, பென்சில்கள், பேனாக்கள், கத்திகள், ஆணிகள் மற்றும் இவை போன்ற சிறு பொருள்களைப் பார்த்தால் அவை பெரும்பாலும் ஜப்பானில் செய்யப் பட்டவைகளாகவேயிருக்கும்! ஏனெனில் ஜப்பானியர் சிறு பொருள்களைச் செய்வதில் விசேஷ ஊக்கஞ்செலுத்தி அவற்றை மலிவான விலைக்கு விற்று வருவதினால் தான்! இன்னும் இயந்திர சாதனங்களைப் பெருக்குவதில் ஜப்பான் விசேஷ கவனம் செலுத்திவருகின்றது. தக்ளியில் நூல் நூற்றால்தான் சுயராஜ்யம் பெறலாமென்று ஜப்பான் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கவில்லை! துணி நெய்யும் இயந்திரங்கள முதல்கொண்டு, சமீபத்தில் அவர்களால் கண்டுபிடித்துள்ள ஓர் நூதனஇயந்திரம், அதாவது பகைவர்களுடைய ஆகாய யுத்தக்கப்பல் இத்தனை மைல் தூரத்தில் வந்துகொண்டிருக்கிறது என்பதை அளந்து காட்டும் ஓர் கருவியைக் கண்டுபிடிக்கும் வரையிலும் அவர்களது ஆராய்ச்சி அறிவு விசாலமாக போய்க்கொண்டிருக்கிறதென்றால், வேறென்ன விவரித்துக் கூறவேண்டும்? இதுவரையில் அமெரிக்கா, ஜர்மனி, பிரிட்டன் போன்ற வல்லரசுகளும் கண்டுபிடித்தறியாத ஒரு கருவியை ஜப்பானியர் கண்டுபிடித்திருக்கின்றதில் ஆச்சரியப்படத்தக்கதொன்றுமில்லை! காரணம் அன்னார் நம் நாட்டவர்களைப்போல் மடங்கள் கட்டி "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தும்" என்ற கவலையீனமானப் பாடல்களையும் "கொடுக்கிற தெய்வம் கூரையைப்பிய்த்துக்கொண்டு கொடுக்கும்" என்ற சோம்பேரிப் பல்லவியையும் தாளம் போட்டுப் பாடிக்கொண்டிராமல், மேலும்மேலும் தங்கள் அறிவை ஆராய்ச்சித்துறையில் உபயோகப்படுத்தி வந்ததே அவர்களின் முற்போக்குக்குக் காரணமாகும்!

மாதர்கள் முற்போக்கை எடுத்துக் கொண்டால் பெண்கள் சம்பந்தப்படாத ஒருஸ்தாபனமும் ஜப்பானில் இல்லையென்றே கூறலாம்.

உபாத்திமைத்தொழிலில் நூற்றுக்கு தொண்ணூறுபேர்கள் பெண்களாயிருக்கின்றார்கள். இதற்குக் காரணம் கள்ளங்கபடமற்ற பள்ளிச்சிறுவர்களின் உள்ளத்தை மிருதுவான மொழிகளாலும், மேலான குணத்தாலும் அனுசரித்து அவர்களை நல்ல மார்க்கங்களில் திருப்பி கல்வி போதிக்க வல்லவர்கள் பெண்களே யென்பதை அந்நாடு உணர்ந்து கொண்டதினால்தான். குடும்ப வாழ்வில் ஜப்பானியரின் ஒழுங்கு மிகவும் போற்றத்தக்கதாகும்! பூகம்பத்தையும், எரிமலைகளையும் உன்னி ஜப்பானியர்கள் தங்கள் வீடுகளை மிகச்சிறியவைகளாகவே கட்டிக்கொண்டு வாழ்கின்றனர்! ஆனால் அச்சிறு வீடுகளிலுங்கூட ஜப்பானியர் மிகவும் சுகாதாரத்தோடு வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு குடும்பியும் வீடுகளை வைத்துக்கொள்ளவேண்டிய சுகாதார முறைகள் எவை? என்பதை நன்குணர்ந்திருக்கின்றனர். அவர்கள் நாட்டில் தொத்து நோய்களும் மரண விகிதமும் மிகக்குறைவு! ஏற்கனவேபோதிய ஜனத்தொகையற்ற தேசமாகிய ஜப்பான் பன்முறையும் பூகம்பங்களால் அழிக்கப்பட்ட ஜப்பான் இன்று வருஷம் ஒன்றுக்கு எட்டரை லட்சம் ஜனத்தொகையை அதிகப்படுத்திக்கொண்டு அவர்கள் நாட்டில் இடம் போதாமையால் சமீபத்தில் சீனாமீது போர் தொடுத்து மஞ்சூரியாவைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சித்ததென்றால், சிறிய தேசத்தில் பெரிய ஜனத்தொகையை சேர்த்துள்ளதென்றால், சுகாதார விஷயத்தில் எவ்வளவு அபாரஞானம் ஜப்பானுக்கிருக்கவேண்டுமென்பதை உன்னுங்கால், அந்நாட்டு குடும்பத்தலைவிகளாகும் பெண்மக்களுக்கு சமமான கல்வி உரிமையை அளித்துள்ளதே காரணமென்பது தெள்ளிதில் விளங்குகின்றதன்றோ.

மற்றும் கல்வி விஷயத்திலோவெனில் ஜப்பான் விசேஷ கவனம் செலுத்திவருகின்றது. மேலை நாடுகளிலுள்ள ரசாயன சாஸ்திரிகளுடையவும், விஞ்ஞான சாஸ்திரிகளுடையவும், வைத்திய பொருளாதார நிபுணர்களுடையவும் ஆராய்ச்சிக் கிரந்தங்களை தங்கள் தேசபாஷையில் மொழி பெயர்த்து அக்கலைகளை அவர்கள் நாட்டில் பரப்புகின்றனர். அதோடு பலவிதமான ஆராய்ச்சி சாலைகளும் திறக்கப்பட்டு நிபுணர்கள் பலர் அதில்வேலை செய்து வருகின்றனர்.

இன்னும் தேசபாதுகாப்பு விஷயத்தில் ஜப்பானியர் விசேஷகவனம் செலுத்தி வருகின்றனர். ஏற்கனவே அவர்களது விடா முயற்சியால் உலகிலுள்ள வல்லரசுகளில் ஒன்றெனக் கருதப்படுமாறு ஜப்பானியர் தங்கள் நாட்டின் யுத்ததளவாடங்களை அமைத்திருக்கின்றனர். அவர்களது யுத்ததளவாடங்களின் விபரம் நன்கு தெரியவராவிடினும் சமீபத்தில் நடந்த சீன-ஜப்பானியப்போரைக்கொண்டும் சர்வதேச சங்கத்தின் கட்டளைகளையுங்கூட உதாசீனம் பண்ணுவதற்குக் காரணமாயிருந்த தைரியத்தைக்கொண்டும் ஜப்பானியரது யுத்த "முஸ்தீபை" ஒருவாறு அறியலாம்.

தற்போது கிடைத்துள்ள ஒரு சில விவரங்களால் உலகிலேயே மிகவும் வலிமை பொருந்திய கடற்படை ஜப்பானியரிடம் இருக்கிறதென அறியக்கிடக்கிறது. தங்களதுயுத்த

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# இனி நமது வேலை என்ன?

## தியாகமா? உறக்கமா?

(தோழர் அ. பாபுசாமி)

சற்றேறக்குறைய ஒரு வருடமாக மேல் நாட்டில் தனது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு நமது தலைவர் ஈ. வெ. ரா. அவர்கள் அண்மையில் நமது நாட்டிற்குத் திரும்பியிருக்கிறார். தாய்நாடு திரும்பியதும், இயக்கத்தின் கொள்கைகளைப்பரப்புவதற்காக இனி எவ்வித திட்டத்தின் மேல் தலைவர் வேலை செய்யப்போகிறார் என்பதைக் குறித்து நமது இயக்க அன்பர்களும், நமது எதிரிகளும் மிக்க ஆவலுடன் எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் தலைவர்கள் நமது மேல் நாட்டுப் பிரயாணத்திற்குச் சென்ற பின்பு நமது தோழர்கள் நாட்டில் இயக்க சம்பந்தமாகச் செய்துள்ள வேலையைச்சிறிது சிந்தித்துப் பார்ப்பது அவசியம் என்று எண்ணுகிறேன்.

நமது தலைவர்கள் மேல் நாடுசென்றதன் பின்பு அநேகமாக நமது இயக்கம் ஒழிந்து விடுமென்றும், இனிச் சுயமரியாதை இயக்கத்திற்கு இந்நாட்டிலேயே அடியோடு செல்வாக்கு அழிந்து விடுமென்றும் மனப்பால் குடித்த எதிரிகளின் எண்ணத்திற்கு மாறாக தலைவர்கள் நமது இயக்கத் தோழர்களிடம் இயக்கத்தை ஒப்புவித்துப்போன நிலைமையிலும் சிறிது அதிகமாக நாட்டில் இயக்கத்தைப்பரப்பியுள்ளார்கள் என்பதில்ஐயமில்லை.

உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் இயக்கம் ஆரம்பித்து ஆறு ஆண்டுகளாக இம்மாகாணத்தின் தலைநகராகிய சென்னையில் நமது மகாநாடு ஒன்று நடைபெறாதிருந்த குறையை பல பலமான எதிர்ப்புகளுக்குமிடையே சிறப்புடன் நமது மகாநாட்டை நடத்தியதுடன் அங்கேயே ஒரு பெண்கள் மகாநாட்டையும் நடத்தியதும், நமது தோழர்களின் சலியா உழைப்பே காரணமாகும். மேலும் தொடர்ச்சியாக பல ஜில்லாக்களிலும் பல மகாநாடுகளைக்கூட்டியும் தனித்தனியாக ஆங்காங்கே பிரசார மூலயமாகவும் நமது இயக்கக்கொள்கைகளை மக்களிடையே செவ்வனே பரப்பியதோடு மட்டுமல்லாமல் சைவ சமயத்தையே வளர்ப்பதற்காக சைவர்களாகவேகூடிக்கொண்டு, மறைமுகமாகவே நமது இயக்கத்தையும் தூற்றுவதற்காகவே ஆதியிலிருந்தே வேலை செய்து வந்த சைவப் பெரியார்கள் எனப்படுபவர்களால், சைவ சமயம் என்பதையே வளர்க்கப்படுவதற்காக மொழியின் பெயரால் துறையூரில் கூட்டப்பட்ட தமிழ் மகாநாட்டு நடவடிக்கைகளில் நமது தோழர்கள் பெரிதும் பங்கெடுத்துக்கொண்டு சைவ சமயத்தை நிலை நாட்டி மக்களை மீண்டும் படுகுழியில் தள்ளுவதற்கு செய்யப்பட்ட சூழ்ச்சியை நிறைவேற வொட்டாமல் தடுத்து, அவ்வூரிலேயே நமது தோழர்கள் அவ்வூர் மக்களுக்கு நமது இயக்கக் கொள்கைகளையும் விளக்கமாக எடுத்துக் கூறியதுடனல்லாமல் அவ்வூரில் பல கனவான்களைச் சுயமரியாதைக்காரர்களாக்கியுமிருக்கிறதென்றால் நமது இயக்கமே அழிந்துவிடும் என்று எண்ணிய எதிரிகளின் எண்ணத்தினால் மண் விழுந்ததென்பதில் சந்தேகமில்லை.

அதை விட்டு நாட்டில் சமீபத்தில் தோழர் காந்தி அவர்களால் தேசியத்தின் பெயரால் உண்டாக்கப்பட்ட பெரிய கிளர்ச்சியாகிய உண்ணாவிரதத்தின் போது, உண்ணாவிரதத்தின் சூழ்ச்சிகளையும், பொதுத் தொகுதியின் தீங்குகளையும் தாழ்த்தப்பட்டார்களுக்கு தனித்தொகுதி முறையால் உண்டாகும் நன்மைகளையும் நமது தோழர்கள் ஆங்காங்கே கூட்டம் போட்டும் நமது பத்திரிகையினாலும், சகோதரப்பத்திரிகைகள் வாயிலாகவும் விளக்கமாக எடுத்துக்கூறியதுடன், நாட்டு மக்களிடையே தைரியமாகக் கிளர்ச்சி செய்ததின் பயன் தான் தாழ்த்தப்பட்டார்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கப்படுவதையே ஒப்புக்கொள்ளாமலிருந்த தோழர் காந்தியாரும் அவரது சகாக்களும் தாராளமாக அவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கவும் தனித்தொகுதியின் முறையான பூர்வாங்கத் தேர்தல் முறை நடத்தவும் ஒப்புக்கொண்டார்களென்றால் அது மிகையாகாது.

நாம் துவக்கத்திலிருந்து கூறிவந்தது போலவே நாடு உண்மையாக விடுதலையடைய வேண்டுமென்றால் நமது நாட்டு மக்கள் சமூக மதக் கட்டுப்பாடுகளினின்றும் விலகி, சமூக சுதந்திரமடையும்வரைக்கும் இந்நாட்டிற்கு எந்த விதமான அரசியல் சீர்திருத்தங்கள் கிடைத்தாலும் ஏழை மக்களுக்கு அது எவ்விதத்திலும் பயன்தராது என்பதும் பணக்காரர்களுக்கும், வைதீகர்களுக்குமே ஆதிக்கமளிக்கும் என்பதும் சமூக விடுதலையடையவேண்டுமென்றால் சட்டபூர்வமாக ஏதாவது வேலை செய்தால் மட்டுமே வேற்றுமைகள் ஒழியுமேயல்லாமல் மற்றபடி எத்தனை காந்திகள் உண்ணாவிரதமிருந்தாலும், எத்தனை மாளவியாக்கள் தங்கள் கோயில்களைத்திறந்து விட்டாலும், எத்தனை ஆச்சாரிகள் பத்திரிகைகளில் நிறைய அறிக்கைகள் விடுத்தாலும், எத்தனை தேசபக்தர்கள் சமபந்தி என்று சொன்னாலும், எத்தனை கேளப்பர்கள் எலும்புக்கூடுகளானாலும் அது வெறும் விளம்பரம் என்ற முறையில்தான் முடியுமே தவிர உண்மையான விடுதலையொன்றும் பெறமுடியாது என்பது நிச்சயம்.

இதற்கு உதாரணமாக பூனா ஒப்பந்தத்திற்குப்பின் வடநாட்டில் பல கோவில்கள் தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்காக திறந்து விடப்பட்டிருக்கிறதென்று பத்திரிக்கைகளில் சில தினங்கள் வரை கொட்டை எழுத்துகளில் பிரசுரித்தும் கொண்டிருந்தார்கள். இப்போது அந்த நிரூபர்கள் எல்லாம் அடங்கி விட்டார்கள் போலும். குட்டிகாந்தி என்று சொல்லப்படுகிற திரு. ஆச்சாரியார் அவர்களாலும் வடநாட்டில் பெரிய தேசிய வாதி என்று கருதப்படுகிற திரு. பாபுராஜேந்திர பிரசாத் அவர்களும் இத்தென்னாட்டில் ஊர் ஊராகச்சென்று தங்கள் பூரண செல்வாக்கையும் உபயோகித்து, பல பொதுக்கூட்டங்கள் கூட்டிப்பேசியும் தர்ம கர்த்தாக்களைக் கெஞ்சியும், வைதீகர்களாலேயே மகாத்மா என்று புகழப்படும் தோழர் காந்தியவர்களால் தமிழ் நாட்டிற்கென்றே தமிழ் கை எழுத்துடனே வே ஸ்பெஷலாக ஒரு அறிக்கை விடுத்தும் பார்த்தார்கள். இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள் நடந்தும் இந்நாட்டுக் கும்பகோணங்கள் அடியோடு தீண்டப்படாதாரைக் கோவிலுக்குள் அநுமதிப்பது சாஸ்திர விரோதம் என்று மறுத்துவிட்டதோடல்லாமல் எதிர் சத்தியாக்கிரகம் செய்யவும், உண்ணாவிரதம் ஆரம்பிப்பதாகவும் செனெட் பட்டதாரிகளும், வடமொழி சாஸ்திரிகளும், ஆங்கிலம் கற்ற வக்கீல்களுமடங்கிய வைதீகக் கூட்டம் கூட்டங்கள் கூடித்தீர்மானித்தும் அதன் பலமான எதிர்ப்புகளை வைஸ்ராய்க்கும், கவர்னர்களுக்கும், மகஜர்கள் மூலமாகவும், தந்திகள் மூலமாகவும் தெரிவிக்கின்றன.

இந்த முடிவை நாம் முன்னமேயே தெரிந்து நாட்டு மக்களிடை கூறியபொழுது நம்மை ஏளனம் செய்த நண்பர்களையும் நாம் அறிவோம். இன்று அவர்கள் நாம் கூறியது உண்மையாகவே முடிந்ததென்று மூக்கின் மேல் விரலை வைத்து யோசிக்கிறார்கள். இந்த நிலைமையில் நாட்டு மக்கள் பெருத்த குழப்பத்துடனிருக்கும்பொழுது, நமது தலைவர் வந்ததும் நாம் எந்த திட்டத்தின்மேல் வேலை செய்யப்போகிறோம் என்பதையறிவதற்கு பலர் ஆசைப் படுகிறார்கள் என்றால் அது ஆச்சரியமல்ல. ஏழைமக்கள் பட்டினி கிடப்பதற்கும், பணக்கார ஆதிக்கம் நாட்டில் மலிவதற்கும் மதம்தான் அடிப்படையான காரணம். ஆகையினால் ஏழைத்தொழிலாளி மதத்தைப்பற்றியோ, மதத்தால் கூறப்படுகிற கடவுள்களைப்பற்றியோ கவலைப்படுவதால் தொழிலாளியின் பசிப்பிணி அதிகரிக்குமேயொழிய ஒரு நாளும் குறையாதாகையால், இந்தக் கவலைகளை எல்லாம் ஒழித்து தாங்கள் பட்டினி இல்லாது வாழ்வதற்கு வாழ்க்கை முறையில் சிறந்த திட்டங்களை வகுத்து வேலை செய்தாலொழிய ஏழைத்தொழிலாளிக்கு விமோசனமில்லை.

எனவே, நமது, தோழர்கள், நமது தலைவர்களின் பிரயாணத்திற்குப் பின், சென்ற பத்துமாதங்களாகப் பிரசாரம் செய்துவந்தது போலவே ஏழைத்தொழிலாளிகள் முன்னேறுவதற்கு, முதலில் செய்யப்படவேண்டிய வேலை: மதங்களையும், மதக்கட்டுப்பாடுகளையும் உடைத்தெறிய வேண்டியதே யாகும்.

இப்படி நாம் செய்து கொண்டு போகும் தொண்டில், பலவிதமான இடையூறுகளை, நாம் எதிர்பார்க்கிறோம். மதங்களை, ஒழித்து விடுவதற்கு, சுலபமான வேலைகளால் முடியும் என்று கூறுவதற்கு, நமது நாடு அவ்வளவு, பக்குவமான நிலைமையில் இல்லை. என்பதை நாம் அறிந்தே இருக்கிறோம். ஆகையால் வைதீகர்கள் கூப்பாடு எங்கு நோக்கினும் அதிகமாகவே கிளம்பும் என்பதில் சந்தேகமே இல்லை. அவர்களை ஒரு புறமாகத்தள்ளிவிட்டு நமது, வேலையைத்துடங்குவோமானால் பணக்காரனும், அவனுக்கு ஆதரவளிக்கும் தேசியப் போர்வையும் தான் நமது பாதையில் பாரத்துடன் குறுக்கே நிற்கும், தேசீயத்தின் சூழ்ச்சிகளை இன்னும் பழய வழிகளிலேயே பின்பற்றி பாமரமக்களை ஏமாற்ற நினைத்தால் தேசீய வாதிகள், என்பவர்கள் ஏமாற்ற மடைவார்கள் என்பது நிச்சயமே. தேசியத்தின் பேரில் ஏமாற்றப்படும், விபரங்களை நாட்டு மக்களுக்கு நாம் ஒவ்வொரு, எழுத்தாக எடுத்துப்போதிக்கிறோம்? ஆகையினால் அதன் செல்வாக்கு குறைந்தேவரும் என்பது சகஜமே,

இந்த எதிரிகளுக்கெல்லாம் நாம் தப்பி, மேலே வேலையைத்துடங்குவோமானால், மதத்தின் பெயரால் நடைபெறும் அரசாங்கமும், குறுக்கே நிற்கும் என்றும் சந்தேகப்படுகிறோம். அப்படி அதுவும் தடைசெய்ய முன்வருமேயானால், நாம், தியாகம் செய்தாலொழிய, நமது வேலையில் வெற்றிகாண முடியாது. என்பது உறுதி.

நமது இயக்கம், ஏழாண்டுகளாக பிரசாரத்தினாலேயே நாற்பத்தேழு வருடங்களாக பாடுபட்ட இயக்கத்தாலும், செய்யமுடியாத பலஅரிய வேலைகளை சமூகத்தில், நாம் செய்து வெற்றி பெற்றிருக்கிறோம். என்பதை நமது எதிரிகளும் வெளியில் சொல்லாவிட்டாலும்கூட ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# மதப்பாதுகாப்பாளர்கள்

மதமானது பரிசோதித்தறியக் கூடாத சித்தாந்தங்களடங்கியதாக மட்டும் இருந்திருக்குமானால் அதனைப்பற்றிய பரிசீலனைகளைத் தத்துவ ஞானிகளிடத்திலாவது, மெய்ஞ்ஞானிகளென்போரிடத்திலாவது விட்டுவிடலாம். ஆனால் ஒவ்வொரு மதத்திலும் —மிக்க பரிசுத்தமானதென்றும் உயர்ந்த தத்துவ ரீதியானதென்றும், ஆதியில் போதிக்கப்பட்டதென்றும் கூறப்படும், மதத்திலும் கூட—அம்மதத்தைக்காப்பாற்றும் பொருட்டு ஏற்பட்டுள்ள ஒரு தனித்த கூட்டத்தார் இருக்கின்றனரென்பதைச் சாதாரண மனிதரும் அறிந்து கொள்ளலாம். அந்தக் கூட்டத்தார் ஒரு தொழிலும் செய்யாத சோம்பேரிகளாகவும், ஜனசமூகத்தின் பொருளாதாரத்திற்கொரு சிறிதும் பிரயோஜனமற்றவர்களாகவும் இருப்பதோடு; மாந்தரின் முன்னேற்றத்தைத் தடுத்து, அவர்களுடைய மனோகாயங்களுக்கு விலங்கிட்டு விட்டார்கள்.

இவ்விதமாக ஒரு பெரிய கூட்டத்தார் ஒவ்வொரு மதத்திலும் பெருகி; அவ்வவற்றின் சட்டதிட்டங்களையே பெருத்த பேராசையோடு கண்காணித்து வருகின்றனர். கிறிஸ்தவ மதத்திலே போப்பு, பிஷப்பு, பாதிரிகள், கன்னிகா ஸ்திரீகளெனப்படுவோரும்; இஸ்லாமிய மதத்திலே, உயர்ந்த குருக்கள், மௌல்வி, காஜி, பக்கிரிகளெனப்படுவோரும், இந்து மதத்திலேசங்கராச்சாரியார்கள், மகந்துக்கள், குருமார்கள், சாதுக்கள், சந்நியாசிகள், இன்னும் பல்வேறு பிக்ஷாடன மூர்த்திகளாகத் திரியும் பக்தர்களும் இருக்கின்றனர். இவர்களைத்தவிர வேறு மதத்தில்உள்ள திருக்கூட்டத்தார்களும், ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு ஜனசமூகத்திலும் இருந்துகொண்டு, அவரவர் முன்னேற்றத்தையே முதன்மையாகக்கொண்ட சுயநலப்புலிகளாக விளங்குவதோடு, அதற்காக அவர்களைப் பின்பற்றுவோர்களின் மனோபுத்திகளை விலங்கிட்டார் போல் தடுப்பதிலேயே. கண்ணுங்கருத்துமாயிருந்து காலங்கழித்து வருகின்றார்கள்.

அந்த மதத்தை ஆதியில் ஸ்தாபித்த அவதார புருஷர்கள், பொருளைச் சேகரித்தல் கூடாதென்றும், லௌகிக ஆபாசங்களில் மூழ்காமலிருக்கவேண்டுமென்றும், ஐயந்திரிபறப் படிப்படியாகப் பறைசாற்றிச் சென்றிருக்கின்றனர்; இருந்தும், அவர்கள் மறைந்த சில வருடங்களுக்குள்ளாகவே, அந்தந்த மதப்பாது காப்பாளர்கள், மேற்கூறிய கோட்பாடுகளை முற்றிலும் மறந்து, அவ்விதப் புருஷ சிரேஷ்டர்களின் பெயர்களை நாவினால் சதா உச்சரித்துக்கொண்டிருந்த போதிலும், மௌடீகமாய் அவர்களின் நோக்கங்களுக்கு முற்றிலும் மாறாக நடப்பதையே முதன்மையாகக்கொண்ட தங்கள் கூட்டத்தாரை ஸ்தாபித்துக்கொண்டிருக்கின்றனர்.

எல்லாத் தேசங்களிலும், இவ்வித மத குருக்கள் அடங்கிய திருக்கூட்டத்தார், இருந்துகொண்டு மனிதர்களைத்தங்கள் வசப்படுத்தி, அவர்களைத்தங்களிஷ்டப்படி நடத்துவதற்கான சகல தந்திரங்களையும் உபயோகிப்பதையே கடமையாகக்கொண்டிருக்கின்றனர். கிறிஸ்துநாதரானவர்,—தனவந்தர்களைவிட, ஏழைகளே எளிதில் தேவலோகம் சேரமுடியுமாதலின், — தரித்திரதசையே பிரதானமென முடிவு கட்டிச்சென்றிருக்கையில்; அவரைப்பின்பற்றும் திருக்கூட்டத்தார் மதத்தின் பெயரால், ஏராளமான சொத்தை சேகரித்து வருகின்றனர்!

ஸ்பெயின் (Spain) தேசத்தின். மூன்றிலொருபாகம் கிறிஸ்துவ மாதா கோவிலின் (Church) பங்கிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தியாவை எடுத்துக்கொண்டோமானால் ஆதி சங்கராச்சாரியார் ஒரு ஏழையே; ஆனால் அவருடைய சித்தாந்தங்களைக் கடைப்பிடித்தொழுகும், அவருக்குப் பின்னால் வந்த மடாதிபதிகள்—சொத்து விஷயமாகவும், மடங்களின் பெயருக்குப் பிறரால் தானமாக (மான்யமாக) விடப்பட்ட பொருள்களுக்காகவும், ஒருவருக்கொருவர் சதா கோர்ட்டு விவகாரங்களில் போராடிக்கொண்டேயிருக்கின்றனர். இம்மாதிரியான விவகாரங்கள் இந்தியாவிலே உள்ள மற்ற மதப்பிரதிநிதிகளிடையேயுமிருக்கக் காணலாம். சொத்தைப்பற்றிய சச்சரவுகளுக்காக மதத்தின் பெயரால், மதத்தலைவர்களுடைய மண்டைகள் உருளுவதும் இல்லாமலில்லை.

மதங்களை ஆதியில் ஏற்படுத்தியோர் மிகவும் சாதாரண எளிய வாழ்க்கையையே நடத்திக்காட்டியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் தற்காலத்தில் உள்ள, அந்தமதத்தலைவர்களோ, தங்களிடத்தில் அகப்பட்ட திரவியங்களை விலை மதிக்கப்பெற்ற உடைகளிலும், தங்கச் சிலுவைகளிலும், இரத்தினங்களிழைக்கப்பெற்ற நகைகளிலும் செலவு செய்து வேஷதாரிகளாக நடித்துக் கொண்டிருக்கின்றனர்.

மதத்தலைவர்கள் தங்கள் வயப்பட்ட பக்தர்களிடமிருந்து பணத்தை எவ்வாறு கறக்கின்றனரென்பதை ஒரு சாதாரணமான உதாரணத்தால் விளக்கிக்காட்டுகிறேன். எனது கிராமத்திற்குப் பக்கத்தில் உள்ள ஓர் கிராமத்திற்கு, ஒரு சங்கராச்சாரியமடாதிபதி கிருபை பாலித்து விஜயம் செய்திருந்தனர். அவர் தனது சிஷ்யர்களில் சிலரை என்னிடம் அனுப்பி, அவருடைய பாதங்களைக் கழுவிப்பாத பூசை செய்யும் புண்ணிய கைங்கரியம் செய்வதற்கு ஓர் சந்தர்ப்பமளிப்பதற்காக, எனது ஊருக்கு வரத் திருவுளமிரங்குவதால், அதற்காக என்னுடைய அனுமதியைக் கேட்டனர், அதன் பொருட்டு என்ன செலவாகுமென நான் கேட்டபோது, ஒரு நீண்ட செலவுப்பட்டியைக் காண்பித்ததோடு—பல்லக்கில் வந்தால், ஒரு கட்டணமும்; யானையே காணாத அக்கிராமத்தின் பொருட்டு யானை மீதூர்ந்துவரின், அதற்காக அதிகக்கட்டணமும் — செலுத்தவேண்டுமெனக் கூறினர். அவ்விதமான, அதிகிருபையோடு திருவுளமிரங்கிய, ஸ்வாமிகளின் விஜயத்தை நான் மறுத்தேன் என்பதைக்கூற வேண்டியதில்லை.

மேனாடுகளில், கடவுள் பிரார்த்தனை செய்து பிரசாதம் பெறுவதற்குக்கூட, கட்டணம் விதிக்கப்பட்டது என்ற விஷயம் ஐரோப்பிய சரித்திரம் வாசித்தவர்களுக்கு நன்கு தெரியும். கத்தோலிக்க மதம் பரவியுள்ள நாடுகளில் இறந்தவர்களுக்குச் செய்யப்படும் பூஜை (Masses) களுக்காகக்கட்டணங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலே, புண்ய க்ஷேத்திரமெனும்காசி, கயா (Gaya] வுக்குச் சென்று கங்கா நதியில் ஏதோ சில சடங்குகள் செய்வதால் இறந்தோரின் ஆத்மா நற்கதியடைவதாக ஹிந்துக்களால் கருதப்படுகின்றது. அங்குள்ள மகந்துக்கள் அல்லது பிரதம குருக்கள் எனப்படும் குட்டித்தேவதைகள் அவ்விடத்திற்கு வருகின்ற மூடாத்துமாக்களின் மூடபக்தியையே! ஆதாரமாகக் கொண்டு, சில சமயங்களில் அவர்களுடைய நிலைமையைக் கூடச் சிந்தித்துப்பாராமல்,— குரு சந்நிதானம் அந்த இடத்திற்குத்தனது டாம்பீக விருதுகளோடு பிரசன்னமாகி, "உனது பாட்டன், பூட்டன்களெனும் சகல பிதுர்க்களும் தேவலோகம் செல்வார்களாக" எனத்திருவாய் மலர்ந்தருளுவதற்கு முன்பே—பெருத்த தொகையை ரொக்கமாகப் பகற்கொள்ளையடித்து விடுகின்றனர்!

தங்களைப் பின்பற்றுவோர்களுடைய நம்பிக்கை பிறழாதிருக்கும் பொருட்டு, அந்தந்த மத குருக்களால் கையாளப்படும் எண்ணிறந்த தந்திரங்களிலே,—மாண்டுபோன அல்லது தற்காலத்தில் உலக வழக்கிலில்லாத, ஏதோ ஒரு பாஷையை அவர்கள் பிரயோகிப்பதும் ஒன்றாகும். அவ்வித பரிபாஷைகளில், அர்த்தத்தைத்தவிர அவற்றின் உச்சரிப்பிலேயே ஏதோ ஓர் தெய்வ சக்தியிருப்பதாகவும் அவர்கள் கருதுகின்றனர். ஒரு காலத்திலே, இந்தியாவில் வேதங்களெனப்படும் புத்தகங்கள் மிக்க புனிதமாகவும், அதனைப்பார்ப்பனனொருவன் பாராயணம் பண்ணும் போது, தாழ்ந்த சாதிகளில் பிறந்த ஒருவன் கேட்கவும் அருகனல்லவென்பதாகவும்; தப்பித்தவறிக்கேட்டு விட்டாலோ அவனது காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டுமென்றதாக [மனுதர்ம] விதிகள் ஏற்பட்டிருந்தன. ரோமன் கத்தோலிக்க (கிறிஸ்தவ) நாடுகளிலே, சாதாரண ஜனங்களால் அறிந்துணர முடியாத லத்தீன் (Latin) பாஷையிலேயே அம்மதத்தினர் தோத்திரங்களை ஜபித்து வருகின்றனர். கிரீஸ் நாட்டிலே புதிய ஏற்பாடு (New Testament) இப்போதும், பழைய கிரேக்க பாஷையிலேயே உபயோகப்படுகின்றதே ஒழிய, தற்கால வழக்கத்திலிருக்கும் கிரேக்க (Greek) பாஷையில் கையாளப் படுவதில்லை, ஏனெனில் அது மத சம்பிரதாயத்திற்கு விரோதமாம். இன்னும் இங்கிலாந்து தேசத்திலே பிராட்டெஸ்டன்ட் [Protestant] கிறிஸ்தவர்கள், சுமார் முன்னூறு வருஷங்களுக்கு முன்னர் பேசப்பட்டு, தற்கால வழக்கி

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

# இராம ராஜ்யத்தில் பெண்கள் நிலை.

(செய்கோன் அறிவானந்தன்)

ஐனைத்தொகையில் சரிபாகம் பெற்றிருக்கும் சகோதரிகளே! இஞ்ஞான்று இந்தியாவிற்கு காங்கிரசும், அதன் கர்த்தாக்களுமான காந்தியாருள்ளிட்ட அவரது தோழர்களும் கேட்கும் "பூரண சுயேச்சை" என்னும் இராம ராஜ்யத்தில், உங்கள் கதி யென்னவெனச் சற்று ஆலோசித்தீர்களா?

பண்டைய இராம ராஜ்யத்தில், உங்கள் கூட்டத்தவர்கள் பட்டபாடு இன்னும் உங்கள் கண்முன் தோன்றி உங்களை நடுக்குறச் செய்யவில்லையா! பெண் மக்களாகிய உங்களின் கைகளிலும், கால்களிலும் தளையிட்டு அறிவிலும், ஆண்மையிலும் அணை போட்டுக் கண்காட்சிசாலையில், காட்சிக்காக மிருகங்களை அடைத்து வைத்திருப்பது போல், உங்களையும் அடைத்து வைத்திருந்த இராம ராஜ்யத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர, ஒரு சில கூட்டத்தார்கள் பாடுபட்டு வருகின்றார்கள், இது உங்கட்குச் சம்மதந்தானா! இல்லையேல் அதற்கென வேண்டுவன செய்து உங்கள் வாழ்க்கைக்கு மீண்டும் தளையிடவரும் கொலைகார இராம ராஜ்யத்தை ஒழித்து மண்ணோடு மண்ணாக்காது விடுவீர்களானால், உலக மாதர்கள் உங்களை எள்ளி நகையாடுவதோடு, நீங்களும் மக்கள் கூட்டத்திலிருந்து மாக்கள் கூட்டத்துக்கு செல்லப்படுவீர்களல்லவா! சுத்த இரத்தம் ஓடக்கூடிய ஒவ்வொரு மாதர்களும், இத்தகைய கொலைகார ராஜ்யத்தை (இராம ராஜ்யத்தை) எதிர்த்துப் போராடவேண்டியது கடமையல்லவா!

காலச்சக்கரம், அன்றுக்கு இன்று மேல் நோக்கிச் சென்று கொண்டு தினேதினம் பலவித மாறுதல்களையடைந்து, இந்திய நாட்டைத்தவிர்த்த ஏனைய உலக மாதர்கள் சமசுதந்திரத்தையடைந்து, நாங்களும் உலக காரியங்களில் சரிபாதியை அடையக் கூடியவர்கள் தான், நாங்களும் எந்த முறையிலும் உங்கட்குக் கீழ்பட்டவர்களல்லவென்றும், நாங்களும் எதைச் செய்யவும் கடமைப்பட்டவர்கள் தானென்றும், மார்தட்டிக் கூறி அம்மாதிரியே செய்கையிலுங்காட்டி, அவ்வாறு காட்டுவதில் ஆண்களோடு நியாய வழியில் போட்டி போட்டு அநேக விஷயங்களில் ஆண்களைக் காட்டிலும் முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் இக்காலத்தில், சகோதரிகளே! நீங்கள் மாத்திரம், ஒருவரை யொருவர் மிதித்துக்கொல்லும், ஒருவரை யொருவர் மேல் கீழாக்கி நசித்துக்கொல்லும், ஒருவரை ஒருவர் அடக்கிக்கொல்லும், பண்டைய காட்டுமிராண்டிக் கொள்கைக்கு மீண்டும் அடிமைப்படுவீர்களானால், ஆண்டு உங்கள் கெதி என்னவாகும், சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!!

இதுகாலை உலக நிகழ்ச்சி ஒருவனையொருவன் எதிர்பார்க்காமல், எதையும் அவனவன் சொந்த முயற்சியைக்கொண்டே அவனவனும் தன்தன் நலத்தைத் தேடிக்கொள்வதை விடுத்து, பிறனொருவன் உதவியினால் நாம் நன்மை பெறுவோமென்பது இலவு காத்த கிளியைப் போன்று ஏமாற்றமடைய வேண்டியதே யொழிய, பின் ஒருவித பயனுங்கிட்டாதென்பது திண்ணம்! திண்ணம்!!

தோழர் காந்தி கூட்டத்தார் கேட்கும், "பூரண சுயேச்சை" என்னும் இராமராஜியத்தை சற்றே அலசிப் பாருங்கள். மேற்படி கூட்டத்தார் கேட்கும் இராமராஜ்ஜியம் இந்தியாவுக்கு கிடைக்குமேல் அதுகாலை மதத்தில் நடுநிலைமை வகிக்கப்படுமென்று கூறப்படுகின்றன. அதாவது அவரவர் மத சம்பிரதாயங்களும் பாதிக்கப்படாதவாறு அவரவர் மதக் கோட்பாடுகளும் அவ்வாறே ஆமோதிக்கப்படுமென்றும் தக்கபாதுகாப்பு அளிக்கப்படுமென்றும் சொல்லப்படுகின்றன. அப்படியாயின் அக்காலத்தில் நம் இந்து மதமும் அதன் சாஸ்வதக்கொள்கைகளும் அவ்வாறே ஆதிக்கம் பெறுமென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. அஞ்ஞான்று உங்களின் கெதி என்னவாகுமென்று சற்றே சிந்தித்துப்பாருங்கள், சிந்திப்பின் உங்கள் நெஞ்சங் குமுறவில்லையா! அங்கம் பதறவில்லையா!!

பழய காட்டுமிராண்டிக் காலத்தில் அமுலிலிருந்த இராமராஜியமும் அதன் துணைபற்றி மங்களை அடக்கியாண்டுவந்த இந்து மதமும் உங்களை எவ்வாறு மதித்து நசித்துக்கொண்டு வந்தனவென்பது இற்றைக்கும் உங்கள் கண்முன் காணவில்லையா! அக்காலத்தில் இந்து மதம் உங்களை ஒரு மனிதப்பொம்மைகளாகவும், பிள்ளை பெறும் தொழிற்சாலையாகவும், ஏவல் செய்யும் பணியாளர்களாகவுமன்றோ கருதி அதன்படியே செய்கையிலும் நடத்திவந்திருக்கின்றன. அக்கால இராமராஜியத்தில் உங்களை நடத்தி வந்த கொடுமைகளை இன்று கேவலம் மிருகத்தினுங் கூடவன்றோ காணமுடியாது. உங்கட்கு சுயேச்சையுண்டா! சுதந்திரமுண்டா!! சுகமென்பது தானுண்டா!!! இல்லையே! உண்ணல், உடுத்தல், சுகித்தல், படுத்தல் இவைகளிலேனும் உங்கட்கு சுதந்திர முண்டா! அதுவும் இல்லையே!! உண்டி சுருங்குதல் பெண்டிற்கழகு "பெண்டிற் கழகெதிர் பேசாதிருத்தல்" "கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை" பின் தூங்கி முன்னெழுவாள் பெண்" என்னும் காட்டுமிராண்டிச் சட்டங்கட்கன்றோ நீங்கள் அடிமைப்படுத்தப் பட்டிருந்தீர்கள். இத்தகைய மானங்கெட்ட மிருகத்திலுங்காணாத ஒரு கொடிய சட்டத்தை இன்று எத்தேயத்திலுங்காண முடியுமா!

சகோதரிகளே! மீண்டும் நம் இந்தியாவில் காந்தி கூட்டத்தார் கேட்கும் இராம ராஜ்யம் உதயமாகுமேல், ஆண்டு நீங்கள் அடுப்பங்கரைப்பொம்மைகளாகவும், ஆண்களின் விளையாட்டுக்கருவிகளாகவும், காக்ஷிசாலை மிருகங்களாகவுமன்றோ கருதப்படுவீர்கள். மீண்டும் உங்களிடை காதற்றுக்-கண் கெட்டுக்காலொடிந்திருந்தாலும், அவன் விருப்பப்படி அவனை தாசி வீட்டிற்குத்தலையில் சுமந்து கொண்டுபோக வேண்டும், ஆடவன் இறந்து விட்டால் அவனுடன் உங்களையும் பொசுக்க வேண்டும், நொண்டியானாலும்-மூடமானாலும், சண்டியானாலும்—சதிகாரனானாலும், உங்கள் முன்னோர்களால் குறிக்கப்படுபவனே உங்கட்குக்கணவனென்றும், அவன் சொற்படி நடப்பதே உங்கள் கடமையென்றும், இத்தகைய கர்ன கொடூரக்கடுஞ் சட்டமன்றோ உங்களிடையே அமுல்செய்யப்படும். அக்காலை உங்கள் கெதி என்ன வாகுமென்று சற்று ஆழ்ந்து, யோசியுங்கள்.

அன்பார்ந்த சகோதரிகளே! கண் விழியுங்கள், கவனியுங்கள். விமான உலகத்தில் கீர்த்தி வாய்ந்த திருமதி ஆமி ஜான், உங்கள் போன்றவொரு பெண்ணல்லவா! சீன செப்பான்யுத்தத்தில் போர்க்கோலம் பூண்டு போர் முனைக்குச்சென்ற சீனமாது, உங்கள் போன்ற ஒரு பெண்ணல்லவா! பிரஞ்சுதேசத்துக்கு புத்துயிரளித்துக்காத்த மாதரசி ஜோன் ஆர்க், உங்கள் போன்றவொரு பெண்ணல்லவா! இன்னும்மேல் நாட்டுப்பெண்மணிகள் எத்தகைய அபூர்வச்செய்கைகளைச்செய்கின்றார்கள் என்பதை சற்றே கவனியுங்கள். கவனிப்பின் உங்கள் மனம் நாணவில்லையா! சமீபத்தில் நம் நாட்டிற்கு வந்து போன மிஸ் மேயோ, உங்களைப்பார்த்து எள்ளி நகையாடவில்லையா! ஏன் அவர்களும் உங்களைப்போன்ற பெண்கள் தானே நீங்கள் மாத்திரம் ஏன் இப்படி மானமிழந்து மதியிழந்து, ஆண்மையற்று, கோழைகளாக, பொம்மைகளாக வாழவேண்டும்! உங்கட்கு வெட்கமில்லையா! மானமில்லையா, வீரமில்லையா! இருப்பின் வீரத்தோடு வெளிவாருங்கள், வேண்டுவ செய்யுங்கள். மேல் நாட்டார் உயர்ந்தும் நீங்கள் தாழ்ந்தும் இருப்பதற்கு காரணமென்ன வெனக் காணுங்கள். மேல் நாட்டில் நம் நாட்டைப்போல் பெண்களுக்கு அடக்குமுறைச் சட்டங்கள் கிடையா. ஆண்டு ஆடவருக்கும் பெண்களுக்கும் ஒரேசட்டம், ஒரே நீதி, ஆண்டு பெண்களை பிள்ளை விளையும் நிலமாகவும், பொங்கல் செய்யும் குக்கராகவும் கருதுவது கிடையாது. ஆதலால் தான் ஆண்டுள்ள பெண்மக்கள் அறிவுத்திரம்பெற்று, ஆண்மை வலிபெற்று ஆடவரோடு சமத்துவ வாழ்க்கை நடத்துகின்றார்கள், நீங்களோ கேவலம் மிருகத்திலுங்கேடாக் விடுகின்றீர்கள். உங்கட்கு வெட்கமில்லையா, ஏன் நாம் இம்மாதிரியான கேவல நிலைமைக்கு வந்தோமெனச் சற்று உன்னுங்கள். உங்கட்கும் மேல் நாட்டைப்போல் சமநீதி, சம சுதந்திரம், சமவாழ்க்கை கிடைப்பின் ஏன் நீங்கள் விமானம் ஓட்டக்கூடாது! வெற்றிவாள் தாங்கிப்போர் முகஞ் செல்ல முடியாது! நீங்களும் ஆண்களைப்போல் எதையும் எவ்விடத்தும் செய்யலாம். பாழும் இந்துமதம் உங்கட்கு அத்தகைய சுதந்திரத்தைக் கொடுத்திருக்கின்றனவா வென்று ஆலோசியுங்கள். நீங்கள் எதற்கும் அருகதை யுடையவர்களன்றென்றோ, நமது இந்துமத சித்தாந்தம் இத்தகைய பேய்ச்சட்டம் கொண்ட இந்து மதத்தை நிலை நிறுத்தும் இராமராஜ்யமன்றோ, இன்று நமது காந்தி கூட்டத்தார் கேட்கின்றனர். இதை நீங்கள் கொஞ்சமும் சிந்தியாது வீணே காலத்தைக்கழிப்பின் உங்களைப்போன்ற பயித்தியக்காரர்கள் இல்லையென்று தான் சொல்ல வேண்டும்.

சகோதரிகளே! எழுங்கள் எழுங்கள். வீணே காலத்தைக்கடத்திப் பின்வரு கொலைகார ராஜ்யத்தில் மாண்டு மடியாதீர்கள். "மானங்கெட்டு உயிர்வாழாமை முன்னினிது" என்னும் வீர உரைக்குச் செவிசாயுங்கள். உங்கள்பால் மீண்டும் அமுல்செய்ய வரும் இராமராஜ்யத்தை எதிர்த்து, சின்னா பின்னப்படுத்துங்கள். "தன்கையே தனக்கு உதவி" என்னும் வாக்கியத்தைக் கடைப்பிடித்தொழுகுங்கள். வீணே பிறரை நம்பி மோசம் போகாதீர்கள உங்கட்கு அறிவு உண்டு, ஆற்றல் உண்டு, வீரம் உண்டு, தீரம் உண்டு, எதற்கும் அஞ்சாதீர்கள். அடுப்பே சொர்க்கம், ஆம்படையானே தெய்வம், என்று வீட்டுப்பதுமைகளாக விளையாட்டுப் பொம்மைகளாக இன்னமும் காலத்தைக்கழிக்காதீர்கள். நாங்களும் மனிதர்கள், எங்களுக்கும் உங்களைப்போல் சர்வபாத்தியதையும் உண்டு, என்று வீர முழக்கஞ்செய்யுங்கள். அதற்கெனவேண்டுவனசெய்யுங்கள். இல்லையேல் பின்வரும் சந்ததியாரைக் கொலை செய்தவராவீர்கள். காலத்தைக்கடத்தாதீர்கள். உங்களைக் கொலைசெய்ய வரும் இராம ராஜ்யத்தில் உள்ளகொடுமைகளை, உங்கள் சகோதரிகள் பால் தெற்றென விளக்கி, ஆங்காங்கு மாதர் மகாநாடு கூட்டி, இராம ராஜ்யத்தைக் கண்டித்து, எங்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

# "கல் மழை" உண்டாகும் விதம்.

## கேள்விக்கு விடை.

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,].

ஒரு வக்கீல் நண்பர் சில தினத்திற்கு முன் என்னை கோர்ட்டில் சந்தித்தபோது நமது "திராவிடனில்" கற்கள் மழையாகப் பெய்ததாகவும், அக்கம் பக்கங்களில் யாரும் அக்கற்களை வீசி எறியவில்லை என்றும் "அதன் காரணத்தை தோழர் சிங்காரவேலு தெரிவிப்பாரா?" என்று எழுதியிருப்பதாகத் தெரிவித்தார்.

கற்கள் மழையாகப்பெய்த சம்பவம் ஆச்சரியப்படத்தக்கதல்ல. மனிதனால் கற்கள் எறியப்பட்டாலும் படலாம், அல்லது சுழல் காற்றால் கற்கள் ஆகாயத்தில் கொண்டு போகப்பட்டு அங்கிருந்து கீழே விழுந்தாலும் விழலாம். சில இடங்களில் "மீன் மழை" பெய்ததாகச் சொல்லப்படுகிறது, இன்னுஞ் சில இடங்களில் உப்பு ஜலம் மழையாகப்பெய்ததாக கூறப்படுகிறது. 'ரத்தமழை' பெய்ததாகவும், கேள்விப்படுகின்றோம். இந்த சம்பவங்கள் சாதாரண சம்பவங்கள் அல்லாவிடினும், ஏதோ சில காரணங்களால் அபூர்வமாக (Rare) இவைபோன்ற சம்பவங்கள் நிகழ்கின்றன.

கோடை காலங்களில் தெருக்களிலாகிலும், மைதானங்களிலாகிலும் சுழல்காற்று (Whirl wind) உண்டாகின்றதை சாதாரணமாகப் பார்க்கலாம். அதிக உஷ்ணத்தால் (Heat) காற்று மேலெழும். மேலெழும் காற்று விசையாக எழுமாயின் சுழல்காற்றாக மேலே எழுகின்றது. மேலெழும் காற்று சுழலுங்காலை அக்கம்பக்கங்களிலிருக்கும் தும்பு, தூசு, மணல், கற்கள் முதலியவைகளை சுழலும் காற்றோடு மேலே கொண்டு போகப்படும். கடலோரங்களில் வசிப்பவர்கள் கடல்மேல் சிலவேளையில் (Water spronts) என்று கூறும் சுழல் ஜலம் மேலெழுவதையும் பார்க்கலாம். இந்தக்காட்சியும் சுழல் காற்றால் கடல்மேல் நிகழ்கின்றது. சுழல் காற்று சுழன்றுகொண்டு கடல் மேலெழும்போது கடல் ஜலத்தையும் மேலே கொண்டுபோகின்றது. இவ்விதமாகக்கொண்டு போன ஜலம் சுழல் அடங்கினவுடன் கடலின் பேரிலோ அல்லது நிலத்தின் பேரிலோ, மழையாகப்பெய்யும். இந்த சம்பவத்தின் உண்மை உணராமல் மேகம் நீர் குடிக்கின்றது என்று நமது சாஸ்திரிகள் எண்ணி வந்தார்கள். இன்றைக்கும் நமது கோடான கோடி மக்கள் மேகம் தண்ணீர் குடித்து மழை பெய்வதாக எண்ணுகின்றார்கள். சில ஏரி, மடுக்களில் தண்ணீர் வத்திப்போகும் வேளையில் சுழல் காற்று அவ்விடங்களின் மேல் உண்டானால் அதிலிருக்கும் சேரும், தண்ணீரும், அதில் வாழும் மீன்களும் மேலே கொண்டு போகப்படும். சுழலின் விசை அடங்கியதும் மேல்கொண்டு போகப்பட்ட மீன்கள் கீழே விழும், இவ்விதமாக விழும் மீன்களை "மீன் மழை" என்று கூறலாம். இவ்விதமாகவே கீழே விழும் கற்களை "கல்மழை" என்றுங் கூறலாம். ஆனால் உண்மையான கல்மழை என்று வழங்கும் சம்பவத்தை ஜலம் பனியாக உறைந்து சிறுசிறு பனிக்கட்டிகளாக விழுவதை (Rain or Hoar Frost) அதாவது கல்மழை என்று கூறுவர். இது குளிர்ந்த தேசங்களில் சாதாரணமாக உண்டாவதைப்பார்க்கலாம்.

"ரத்தமழை" பெய்தது என்று சிலர் கூறுகின்றார்கள். இந்தக்காட்சியைக் கண்ட மெஞ்ஞானிகள் பெய்தது மெய்யான ரத்தமல்ல மழையாக விழுந்த தண்ணீரே சிவப்பு வர்ணமாக இருந்தபடியால் அதனை பாமர ஜனங்கள் ரத்தமென்று தவறாக எண்ணி இருக்கலாமென்று தெரிவிக்கின்றார்கள். மழை எப்படி சிவப்பு வர்ணத்தை பெற்றிருக்கலாம்? என்று கேட்கலாம். சிவப்பு வர்ணங்கொண்ட தூசுகள், ஆகாயத்தில் நிறைந்து இருக்கலாம். அவ்விடத்தில் மழை உண்டாகவும் அத்தூசுகள் மழைத்தண்ணீரோடு கலந்து கீழே விழுந்திருக்கலாம், அத்தூசுகள் மழைத்தண்ணீரோடு கரைந்து விழுவதால் தண்ணீர் சிவப்பு வர்ணமடைந்திருக்கும் இவ்வித மழைத்தண்ணீரை வடிகட்டிப் பார்த்தால் கரைந்த சிவப்புத்தூசுகளைப் பார்க்கலாம். இத்தூசுகள் எங்கிருந்து மேலே வந்திருக்கக்கூடும்? சுழல் காற்றால் சிவப்பு தூசுகள் மேலே கொண்டு போகப்பட்டிருக்கலாம். சிறு தூசுகளாய் இருந்தால் கீழே விழாமல் ஆகாயத்தில் காற்றோடு கலந்திருக்கக்கூடும். அல்லது எரிமலைகளில் தூசுகள் மேலே எறியப்படும். அத்தூசுகளும் கீழே விழாமல் ஆகாயத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் (Suspended) அங்கே மழையுண்டானால் மழைத்தண்ணீரோடு தூசுகளும் கலந்து கொண்டு வரக்கூடும். அத்தூசுகள் செகப்பாய் இருந்தால் மழையும் சிவப்பு வர்ணத்தை அடைந்துவரும். இதைத்தான் சில இடங்களில் "ரத்தமழை" பெய்ததாகவும் நினைப்பதுண்டு. இந்த காட்சியைக்கொண்டு பாமர ஜனங்களை மயக்க ராட்சசர்கள் மேலே சண்டை செய்வதாகவும் அவர்கள் ரத்தம்தான் மழையாகப்பெய்வதாகவும் கதைகட்டி விடுகின்றார்கள். 'கல்மழை பெய்தால்" கடவுளின் கோபத்தால் இவ்விதமான மழை பெய்வதாகவும் மூடத்தனமாக எண்ணுவதுமுண்டு. அக்கிரமம் அதிகமாய் விட்டபடியால் மழையை கல்லாக்கி விட்டார் சாமி, என்பார் சில மூடமக்கள். இவ்வித மூட எண்ணங்கள் விசாரணை செய்ய மனமில்லாதவர்களிடம் எழுவது சாதாரண சம்பவம்.

சில நாட்டுப் புறங்களில் "கல் மழை" பெய்தாலும் அல்லது "ரத்த மழை பெய்தாலும் பூசை, கும்பம், காவு முதலியவைகொண்டு தெய்வங்களை திருப்தி செய்கின்றார்கள். ஆனால் மீன்மழை பெய்தால் அம்மீன்களை என்ன செய்வார்கள் என்று கேட்கின்றோம்?

கதைகட்டும் மனப்பான்மையே (Myth Making Tendency) எல்லாவித மூடநம்பிக்கைகளுக்கும் காரணம். இந்த மனப்பான்மையால் உலகில் சிருஷ்டித்த முப்பத்து மூக்கோடி கடவுள்களும் தெய்வங்களும், பேய் பிசாசுகளும், இருளன், வீரன், காட்டேரிகளும், பச்சை அம்மன், பேயாண்டி அம்மன்களும், கின்னரர், கிம்புருடர்களும் அவர்களுக்கு கொடுக்கும் நைவேதனங்களும், பூசை, காவு, பிரார்த்தனைகளும் உண்டானவை என அறிக. இவைகள் யாவையும் மெஞ்ஞான முறைப்படி விசாரிக்குமளவில் இவைகள் வெறுஞ்சொற்களேயொழிய பார்க்கக் கூடிய பொருள்கள் அல்லவென விளங்குமெனவும் அறிக.

# கொழும்பில் ஈ. வெ. இராமசாமி.

## ஆதிதிராவிட அபிவிர்த்தி சங்கத்தார் வரவேற்பு.

### பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவு.

திரு. எஸ். ஆர். முத்தையா அவர்களை அக்கிராசனராகக்கொண்டு கடந்த 22-10-32ந் தேதி கும்பனித்தெரு வி. எம். எஸ். பாடசாலையில் மேற்கண்ட சங்கத்தின் ஆதரவில் ஓர் வரவேற்பு உபசாரணைக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் திரளான ஜனங்கள் குழுமியிருந்தனர்.

ஏற்கனவே பிரஸ்தாபக்கூட்டம் இரட்சணியசேனை மண்டபத்தில் நடை பெருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. ஆனால் எதிர்பாராவண்ணம் கூட்டம் அங்கு கூட முடியாது போயிற்று.

முதலாவதாக அக்கிராசனர் உயர்திரு. ராமசாமிப்பெரியாரை சபையாருக்கு அறிமுகப்படுத்தி, பெரியார் உழைத்து வரும் முக்கிய நோக்கங்களைப்பற்றியும், அன்னவர் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கத்தின் லட்சியங்களைப்பற்றியும் கூறினார்.

அப்பால் பெரியார்க்கு, திரு. ஆ. ஏசுதாசன் (கௌரவஉபஅக்கிராசனர்) அவர்களால் பூமாலைச்சூட்டப்பட்டு, அதின்பின் பெரியார் பெருத்த கரகோஷத்தினூடே எழுந்து பேசியதின் சாராம்சமாவது:—

அன்பார்ந்த சகோதரர்களே! சகோதரிகளே!! அக்கிராசனரவர்கள் எம்மைப்பற்றி அதிக புகழ்ச்சியாகக் கூறிவிட்டார்கள். நான் அவைகளுக்கு அருகதையுடையவனல்ல என்றாலும், நமது மக்கள் தங்களது பகுத்தறிவைக்கொண்டு நமது சுயமரியாதை இயக்கக்கொள்கைகளை ஒப்புக்கொள்கிறது ஒன்றே எமக்கு திருப்திகரமாவிருக்கிறது. "தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடேறும் வழி" என்பதாக என்னை பேசும்படி கேள்க்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி வியாக்கியானம் அதிகம் செய்யவேண்டியதில்லை என்றே கருதுகிறேன். ஏனெனில் பாஷாபிமானம், தேசாபிமானம், மதாபிமானம், குலாபிமானம் என்பவைகளின் உட்கருத்தை ஊன்றி கவனித்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடேறும் வழிதானாகவே தோன்றும். எப்படி எனில் குறிப்பிட்ட எந்தவிதமான அபிமானத்தை எடுத்துக்கொண்டபோதிலும், அநேகமாக அந்த அபிமானத்தின் பேரால் ஏமாற்றுகளே நடைபெறுகின்றன. தாழ்த்தப்பட்டமக்களின் தலைவராகவுள்ளவர்கள் இவைகளை ஊன்றிக்கவனித்து —அலசிப் பார்த்து—உரைகல்லில் வைத்து உரசிப்பார்க்க வேண்டும். அவ்வாறு அவர்கள் பார்ப்பார்களேயானால் வால்தபத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் ஈடேறும் வழியை எளிதில் கண்டு கொள்வதற்கு ஏது சரமாக

(தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

குடி அரசு.

ஈரோடு 1932 நவம்பர்மீ 6-உ

# கத்தோலிக்கப் பெரியார்கள்.

—:0:—

சுயமரியாதை இயக்கமும், குடி அரசும் "கடவுள்" என்று சொல்லப்படும் ஒன்றை ஒழிப்பதற்கு என்றோ, அல்லது அது இல்லை யென்று நிலை நாட்டுவதற்கென்றோ, அல்லது உண்டு என்று நிலை நாட்டுவதற்கென்றோ தோன்றியவைகள் அல்ல; குறிப்பிட்ட எந்த ஒரு மதத்தின்மீதும் துவேஷம் கொண்டு அதை ஒழிப்பதற்குப் புறப்பட்டவையுமல்ல. ஆனால், ஜாதியின் பேராலோ, அல்லது மதத்தின் பேராலோ, அல்லது சாஸ்திரங்களின் பேராலோ மற்ற எதன் பேராலோ ஜன சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் எந்தவிதமான உயர்வு தாழ்வுகளையும் ஒழித்து மக்களுக்குள் சமத்துவத்தை உண்டாககவே இவ்வியக்கம் ஏற்பட்டதாகும். மனிதர்களை மனிதர்கள் பலவகையான அர்த்தமற்ற காரணங்களைச் சொல்லிப் பரம்பரையாகக் கொடுமைப்படுத்திவரும் அக்கிரமத்தை—அது எந்த வகையான பரிசுத்தமான பெயரால் நடைபெற்றுவந்தாலும் அதை—ஒழிக்கவே இவ்வியக்கம் தோன்றியதாகும். இவ்வியக்கத்தின் உண்மைக் கருத்தை உணர்வோர் இதை ஒரு "ஜீவரக்ஷக அறிவியக்கம்" என்று ஒப்புக்கொள்ளாமல் போகமாட்டார்கள்.

ஆனால் மக்களுடைய சமவுரிமைக்கு விரோதமாகவும், அவர்களைக் கொடுமைக்கு உட்படுத்துவதாகவும், அவர்களுடைய அறிவையும், சுதந்திரத்தையும் தடை செய்வதாகவும் உள்ளவை எவையானாலும், அவை, கடவுளோ, மதமோ, சாஸ்திரமோ, ஜாதியோ, அரசாங்கமோ, மற்று எவையோ அவைகளை யெல்லாம் அடியோடு அழிப்பதற்கு இவ்வியக்கம் சிறிதும் பின் வாங்காது.

ஆகையால் இவ்வியக்கத்தைக் கண்டு, மக்கள் அனைவரும் சமவுரிமை பெறவேண்டும் என்று விரும்புகின்ற எவரும்—மனிதர்களின் கையில் அகப்பட்டுப்பரம்பரையாகக்கொடுமையனுபவித்து வருகிற மக்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நினைக்கின்ற எவரும்—ஜாதிக் கொடுமையினின்றும், மதக்கொடுமையினின்றும் மக்கள் விடுபடவேண்டும் என்று விரும்புகின்ற எவரும்—சிறிதும் பயப்படவேண்டிய அவசியமே இல்லை. ஆனால், மதத்தினாலோ, ஜாதியினாலோ, மூடச்சடங்குகளினாலோ, சாத்திரங்களினாலோ ஏழை மக்களை அடக்கி வைத்துத் தாமே ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்று நினைக்கின்ற வன்னெஞ்சர்கள் அனைவரும் பயப்பட்டுத்தான் ஆகவேண்டும். இத்தகைய வன்னெஞ்சகச்சுயநலப்பிரியர்களின் ஜீவாதார உரிமைகளை வேரோடு அறுக்க முனைந்து நிற்பதில் சுயமரியாதை இயக்கத்திற்கு ஒப்பாக வேறொன்றையும் கூற முடியாது.

இந்த உண்மையான காரணத்தை உணர்ந்தே, இப்பொழுது இவ்வியக்கத்தைப் பல மதத்தைச்சேர்ந்தவர்களும், பலஜாதியைச் சேர்ந்தவர்களும், பல கொள்கைகளையுடையவர்களும் ஆதரித்து வருகின்றார்கள். நமது இயக்கத்தில் "கடவுள் இல்லை" என்று சொல்வோரும் இருக்கின்றார்கள்; கடவுள் உண்டு என்று சொல்லுவோரும் நம்புவோரும் இருக்கின்றார்கள். இவ்விஷயம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட அபிப்பிராயமாகும். ஆனால் இயக்கத்திற்குக் கடவுளைப்பற்றிய கவலையே இல்லை.

இந்த நிலையில், இப்பொழுது நமது இயக்கத்தைப் பகிரங்கமாக எதிர்க்கப் புறப்பட்டிருக்கின்றவர்கள் கத்தோலிக்கக் கிறிஸ்தவப் பாதிரிமார்களேயாவார்கள். இவர்கள் நமது இயக்கத்தைக் கண்டு பயந்து, இப்பொழுது நமது இயக்கத்தையும், குடி அரசையும் எதிர்க்கப் புறப்பட்டிருப்பதன் காரணம் நமக்கு விளங்கவில்லை. ஏழை மக்களைச் சுதந்தரமின்றிக் கட்டுப்படுத்திக் கொடுமைப்படுத்துங் கூட்டத்தார்க்கு நமது இயக்கமும், குடி அரசும் விரோதமாகத்தான் காணப்படும் என்ற உண்மையை வைத்துப் பார்க்கும்போது, இந்த கத்தோலிக்க மதப் பாதிரிமார்கள் சுயமரியாதை இயக்கத்தின் விரோதத்திற்கு இலக்கானவர்களாயிருக்கலாமோஎன்ற சந்தேகம் தோன்றுவது இயல்பேயாகும்.

கத்தோலிக்க மதத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்புக் கிறிஸ்தவர்களின் நிலையை எடுத்துக்கொண்டால், அவர்கள் படும் கஷ்டத்திற்கும், இந்து மதத்தைச்சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்கள் படும் கஷ்டத்திற்கும் ஒன்றும் வித்தியாசமில்லை என்றே சொல்லலாம். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கிறிஸ்துவர்களுக்கு உயர்குலக்கிறிஸ்துவர்கள் செல்லும் மாதா கோயில்களுக்குட் சென்று அவர்களுடன் சமமாக இருந்து வணங்குவதற்கு உரிமையில்லை. கிறிஸ்துமத சம்பந்தமாக வைக்கப்பட்டிருக்கும் கலாசாலைகளிலும் சாப்பாட்டு விடுதிகளிலும், உயர்குலக்கிறிஸ்துவர்களுக்குச்செய்து கொடுக்கப்படும் சௌகரியங்கள் தாழ்த்தப்பட்ட சமூகக்கிறிஸ்தவர்களுக்குச் செய்து கொடுக்கப்படுவதில்லை; இன்னும் இவைபோன்ற பல புகார்கள் நீண்ட நாட்களாக இருந்து வருகின்றன. ஆனால், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச்சேர்ந்த கிறிஸ்துவர்களின் வீடுகளில் நடைபெறும் நன்மை தீமை ஆகிய விசேஷங்களில், பாதிரி மார்களுக்கும் கோயில்களுக்கும் சேரவேண்டிய பொருளை மாத்திரம் வாங்குவதில் தவறுவதில்லை. இவ்விஷயங்களெல்லாம் தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவர்கள் மகாநாடுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இக்காரணங்களால் இப்பொழுது கிறிஸ்துவர்களில் பலர், பாதிரிமார்களைப் பகிஷ்கரித்துச் சுயமரியாதை முறைப்படி கல்யாணம் முதலிய காரியங்களைத்தாங்களே செய்து கொள்ளத்தொடங்கிவிட்டார்கள். இம்முறையில் திருச்சி ஜில்லாவில் மாத்திரம் சுமார் 150 கல்யாணங்கள் வரையிலும் பாதிரிமார்களை நீக்கி நடைபெற்றிருக்கின்றன என்று தெரிகின்றது. இதற்கு ஒருவகையில் சுயமரியாதை இயக்கமும் குடி அரசும் காரணமாகும் என்பதை அவர்கள் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். இக்காரணத்தால்தான் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்கப் புறப்பட்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

அவர்கள், இவ்வியக்கத்தால், தமது மதத்தில் கட்டுண்டு, தமது சொற்களுக்கு அடங்கி நடந்து கொண்டுவரும் பாமரமக்கள் அனைவரும் விழிப்படைந்து விடுவார்கள் என்பதை அறிந்து கொண்டு, தமது முழு அதிகாரத்தையும் செலுத்திக் கத்தோலிக்கக் கிறிஸ்துவர்கள் மத்தியில் சுயமரியாதை இயக்கத்தை பரவாமல் தடுக்க முயலுகிறார்கள். சமீபத்தில் கோயம் புத்தூர் ஜில்லாவில் உள்ள கத்தோலிக்கர்களுக்கெல்லாம், அந்த மதகுருவாகிய "மேற்றிராணியார்" என்பவர் "குடி அரசிலும், சுயமரியாதை இயக்கத்திலும் யாரும் சம்பந்தம்வைத்துக்கொள்ளக் கூடாது, "குடி அரசு" வரவழைத்துப் படிப்பவர்கள் 15 நாட்களுக்குள் அதை நிறுத்திவிட வேண்டும்" என்று ஒரு சுற்றுத்தரவு அனுப்பி, 15 நாட்களில் குடி அரசை நிறுத்தாதவர்களை ஜாதிப்பிரஷ்டம் செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

சென்ற 30—10—32 ல் திருச்சியில் நடந்த கத்தோலிக்கவாலிபர் மகாநாட்டில், சுயமரியாதை இயக்கத்தைக் கண்டிப்பதாகவும், வாசகசாலைகளிலும், பொதுமேடைகளிலும், பத்திரிகைகளிலும் இவ்வியக்கத்தை எதிர்த்துப்பிரசாரம் பண்ண வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கின்றார்கள்.

இவ்வாறு, பாதிரிமார்களும், அவர்களுடைய பக்தர்கள் சிலரும் செய்யும் வீண் மிரட்டலைக்கண்டு நமது இயக்கமோ, குடி அரசோ சிறிதும் அஞ்சப்போவதில்லை. ஆனால் ஜன சமூகத்திற்கு நன்மையை உண்டாக்குவதற்கெனத்தோன்றிய இவ்வியக்கத்தைக் கண்டு நடுங்கும் கத்தோலிக்க குருமார்களுக்கும், அவர்களுடைய சீடர்களுக்கும் சிலவிஷயங்களைச் சொல்ல விரும்புகின்றோம்.

கத்தோலிக்க மதத்தில் உள்ள மக்கள், கத்தோலிக்க குருமார்களைப்பகிஷ்கரிக்க ஆரம்பித்திருப்பதற்கும், பாதிரிமார்களின் கட்டுப்பாடுகளை மீற ஆரம்பித்திருப்பதற்கும் சுயமரியாதை இயக்கமே முழுதும் காரணமல்ல; மதத்தினாலும், மத குருமார்களின் நடத்தைகளாலும், கட்டுப்பாடுகளாலும், அந்த மக்களுக்கு உண்டாகி இருக்கும் கஷ்டமே காரணமாகும், ஆகையால் மக்களின் சௌகரியத்திற்கு ஏற்றபடி மதக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதும் மதக்கொள்கைகளைத் திருத்தி அமைப்பதுமே மக்களைத்திருப்திப்படுத்தக் கூடிய செய்கைகளாகும். இதை விட்டு, மக்களுடைய அறிவையும், சுதந்தரத்தையும் சமத்துவத்தையும், வளர்க்க முன்வந்துள்ள சுயமரியாதை இயக்கத்தை ஒழித்து விடுவதென்றால் அது ஒருக்காலும் முடியாத காரியம்.

மத குருமார்கள் சொல்லுவதையெல்லாம் உண்மையென்று நம்பி அவர்களுக்கு அடிமையாக இருக்கும் காலம் மறைந்து வருகிறது. மக்கள் வரவர அறிவு வளர்ச்சிபெற்று வருகின்றனர். "நாமும் மனிதர்" என்ற உணர்ச்சி எல்லா மனிதர்களிடமும் உண்டாகிக்கொண்டு வருகிறது. ஜாதி வித்தியாசங்கள் எல்லாம் பெயரள

வில் இருந்தாலும், சில அறிவில்லாதவர்கள், விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தாலும், உண்மையில் அது தானாகவே அழிந்து கொண்டே வருகிறது.

மதங்களும், தற்பொழுது புரோகிதக் கூட்டத்தாரின் வயிற்றுப்பிழைப்புக்காக மாத்திரம் அவர்களால் இருப்பதாகச்சொல்லப்பட்டு வருகின்றதே ஒழிய, பொதுஜனங்கள் அவற்றைச்சிறிதும் லட்சியம் பண்ணுவதில்லை. பெயரளவில் மதங்கள் உலவி வருகின்றனவேயொழிய உண்மையில் அவைகள் இல்லவேயில்லை; மதக்கட்டளைகளும், மத சாஸ்திரங்களும் பாமரமக்களை ஏமாற்றுவதற்காக மத குருமார்களால் வாயளவில் சொல்லவும் படிக்கவும் மாத்திரம் உபயோகப் படுகின்றனவேயன்றி, அவைகளின்படி நடப்பவர்கள் யாருமில்லை; அவைகள் தாமாகவே அழிந்து கொண்டுதான் வருகின்றன. இன்னும் ஜன சமூகங்களின் பழக்க வழக்கங்களிலும், அதிதீவிரமாக மாறுதல் அடைந்து கொண்டே வருகின்றன. இந்த மாறுதல்களை இனி எவராலும் தடுக்க முடியாது. இன்னும் சில ஆண்டுகளில் இம்மாறுதல் காரணமாக, மதங்களும், ஜாதிகளும், சடங்குகளும், புரோகிதக்கூட்டங்களும் கட்டாயம் அடியோடு அழிந்தே போகும். இந்த மாறுதலை ஒட்டியே சுயமரியாதை இயக்கமும் சீர்திருத்தம் செய்ய உழைத்து வருகிறது. ஆகையால் இவ்வியக்கத்தை அடக்கிவிடலாம் எனக்கனவு காண்பதில் ஒன்றும் அர்த்தமில்லை என்று கூற விரும்புகின்றோம்.

சுயமரியாதை இயக்கத்தை எதிர்த்து எவ்வளவு பிரசாரம் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து பார்த்தாகி விட்டது. சைவப் பெரியார்கள் செய்த எதிர்ப்பிரசாரத்தைவிட, வைணவப் பெரியார்கள் செய்த எதிர்ப்பிரசாரத்தைவிட, காங்கிரஸ் பெரியார்கள் செய்த எதிர்ப்பிரசாரத்தைவிட கத்தோலிக்கப் பெரியார்கள் ஒன்றும் அதிகமான எதிர்ப்பிரசாரம் பண்ணிவிடப் போவதில்லை. அன்றியும், சுயமரியாதை இயக்கமும், குடி அரசும், எப்பொழுதும் எதிர்ப்பிரசாரத்தைச் சந்தோஷத்தோடு வரவேற்குமே யொழிய அதைக்கண்டு அஞ்சுகின்ற வழக்கமில்லை என்பதை இச்சமயத்தில் நினைப்பூட்ட விரும்புகின்றோம்.

ஏனெனில், இதுவரையில் எதிர்ப்பிரசாரத்தினால் இவ்வியக்கமும் குடி அரசும் செல்வாக்கும், வளர்ச்சியும், வலுவும் பெற்றனவே ஒழிய சிறிதும் குறைவடையவில்லை. ஆகையால், கத்தோலிக்கர்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்தால், இப்பொழுது, தமிழ் நாடு, மலேயா, பர்மா, சிலோன் முதலிய இடங்களில் நன்றாக வேரூன்றியிருக்கும் சுயமரியாதை இயக்கமும், குடி அரசும் மற்ற யதேசங்களிலும் சென்று பரவும் என்பதில் ஐயமில்லை. ஆகையால், தாராளமாகக் கத்தோலிக்கப்பெரியார்கள் எதிர்ப்பிரசாரம் செய்ய முன்வரட்டும் என்று அறைகூவி அழைக்கின்றோம்.

ஆனால் உண்மை எப்பொழுதாவது வெளிப்பட்டுத்தான் தீரும். உண்மையை எப்பொழுதும் பின்பற்ற மக்கள் தயாராகத்தான் இருப்பார்கள். பொய்யான கட்டுப்பாடுகளும், மக்களை ஏமாற்றுவதற்கு—அடிமைப் படுத்துவதற்கு என்று ஏற்படுத்தி வைத்துள்ள மதக்கட்டுகளும் இனி நிலைத்து நிற்க முடியாது; அழிந்துதான் தீரும் என்று மாத்திரம் கடைசியாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அன்றியும், தங்கள், கொள்கைகளும் செய்கைகளும், நடத்தைகளும், வார்த்தைகளும், பரிசுத்தமானவை; உண்மையானவை; அழிய முடியாத "தெய்வீகத்" தன்மை பொருந்தியவை என்ற உண்மையான நம்பிக்கையுடையவர்களாயிருந்தால் அவர்கள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. "உண்மையான—அழியாத—"தெய்வீக"த்தன்மை பொருந்திய மதத்தைச் சுயமரியாதை இயக்கமோ, மற்ற எதுவோ அழித்துவிட முடியாது. ஆதலால், கத்தோலிக்கப்பெரியார்கள் தங்கள் மதத்திலும்; தங்களுடைய கட்டுப்பாடுகளிலும், பழக்க வழக்கங்களிலும் உண்மையான நம்பிக்கையுடையவர்களாய் இருந்தால் ஏன் சுயமரியாதை இயக்கத்தையும் குடி அரசையும் கண்டு நடுநடுங்கவேண்டும் என்று கேட்கின்றோம்? ஆகவே, அவர்களுடைய கொள்கையில் அவர்களுக்கே நம்பிக்கையில்லையா என்று கேட்கின்றோம்.

மதக் கட்டுப்பாடுகளினாலும், மதகுருமார்களாலும், தங்கள் அறிவும், சுதந்தரமும், செல்வமும் பாழாகின்றன என்ற உணர்ச்சி பெற்றமக்களை, "சுயமரியாதை இயக்கத்தோடு சம்பந்தம் வைத்துக் கொள்ளக்கூடாதுஎன்றுசொல்லுவதனாலோ, "குடி அரசைப்படிக்கக்கூடாது" என்று கூறுவதனாலோ அடக்கிவிட முடியாதுஎன்று எச்சரிக்கின்றோம். நாலா பக்கமும், அறிவு வெள்ளமும், சுதந்தரவெள்ளமும், சமத்துவ வெள்ளமும் பெருக்கெடுத்து வந்து பெரிய பெரிய அலைகளுடன் மோதும்போது நடுவில் உள்ள மூடப்பழக்க வழக்கம், அர்த்தமற்ற பயங்கரமானகட்டுப்பாடுகள், அறிவுக்குப் பொருந்தாத கோட்பாடுகள் ஆகியவைகள் சேர்ந்த மணல் முட்டு எப்படி நிலைத்து நிற்கும்? என்று யோசனை செய்து பார்க்க வேண்டுகிறோம்.

ஆகையால் இனி, எந்த விதமான பிரசாரம் செய்தாலும், ஜாதிப் பகிஷ்காரம், மதப்பகிஷ்காரம் போன்ற பூச்சாண்டிகளைக் காட்டினாலும் பகுத்தறிவுடைய மக்களை பயமுறுத்த முடியாது. ஜாதியும் வேண்டாம், மதமும் வேண்டாம், என்று சொல்லும், சுயமரியாதை இயக்கத்தோடு சம்பந்தப்பட்டவர்கள், குடி அரசைப்படிப்பவர்கள், ஜாதிப்பிரஷ்டத்திற்கும், மதப்பிரஷ்டத்திற்கும் அஞ்சுவார்களா? ஆகையால் கத்தோலிக்கப் பெரியார்களின் மிரட்டலும், ஆர்ப்பாட்டமும் வீண் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகின்றோம்.

---

## பரோடாவில் ஆலயப்பிரவேசம்.

---

சுதேச சமஸ்தானங்களில் முற்போக்கான காரியங்களை முதன்மையாகச்செய்து வரும் சமஸ்தானம் பரோடா சமஸ்தானம் ஒன்றேயென்பதை நாம் கூறவேண்டியதில்லை. அதிலும் தாழ்த்தப்பட்டவர்கள் விஷயத்தில், பரோடா அரசாங்கம் மிகவும் அனுதாபங்கொண்டு அவர்களுக்குப்பல நன்மைகளைச் செய்து கொண்டு வருகின்றது. தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிள்ளைகளை எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் ஆக்ஷேபணையின்றிச் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனச் சென்ற வருஷத்தில் பரோடா அரசாங்கத்தார் உத்தரவு பிறப்பித்தனர். இவ்வுத்தரவை அகங்காரம்பிடித்த உயர்ஜாதிஇந்துக்கள் எவ்வளவோ எதிர்த்தனர்; பள்ளிக்கூடங்களில் சேரவந்த தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிள்ளைகளுக்கு எவ்வளவோ கஷ்டங்களை உண்டாக்கினார்கள். தங்கள் பிள்ளைகளை ஜாதி இந்துக்களின் பிள்ளைகள் வாசிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிய தாழ்த்தப்பட்ட வகுப்புக் குடும்பத்தினரின் குடிசைகளை நெருப்புக்கிரையாக்கினர்; அவர்கள் தண்ணீர் எடுக்கும் கிணறுகளில் மண்ணெண்ணையை ஊற்றிக் குடிதண்ணீருக்குத் திண்டாட விட்டனர். இவ்வாறு உயர்ஜாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சகிக்க முடியாத கொடுமைகளைச் செய்தாலும், அவர்கள் அரசாங்கத்தார் தமக்குக்கொடுத்த சுதந்தரத்தை உபயோகிக்காமல் விட்டுவிடவில்லை. அரசாங்கத்தாரும், தாம் பிறப்பித்த உத்தரவை மாற்றாமல், பிடிவாதமாகவே நிறைவேற்றினார்கள். இவ்வகையில் அரசாங்கம் கொண்டிருந்த உறுதியை தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்பால் அனுதாபம் உள்ள எவரும் பாராட்டாமலிருக்க முடியாது.

இப்பொழுது இன்னும் சிறந்த துணிகரமான காரியமாக, தாழ்த்தப்பட்டார் அனைவரும் கோவிலுக்குள் செல்ல உரிமையுண்டு என்றும் உத்தரவு பிறப்பித்ததை நாம் பாராட்டுகிறோம். இதற்கு முன் "போர்" சமஸ்தானத்திலும் இவ்வாறே தாழ்த்தப்பட்ட சமூகத்தார்க்குக் கோயில் பிரவேசம் அளித்திருக்கின்றனர். அதைப் பின்பற்றி பரோடாவும் தைரியத்தோடு வைதீகர்களின் எதிர்ப்பைச் சிறிதும் பொருட்படுத்தாமல் இக்காரியத்தைச்செய்ததைப் பாராட்டுகிறோம்.

இப்பொழுதுதான் சென்னைச் சட்டசபையில், "தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கோயில் பிரவேசம் அளிக்கத்தக்க சட்டத்தை ஏற்படுத்துமாறு அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்வதாக" த்தீர்மானம் நிறைவேறியிருக்கின்றது. சென்னை அரசாங்கத்தார், இத்தீர்மானத்தை அனுசரித்தும், "பரோடா" "போர்" முதலிய சமஸ்தானங்கள் செய்திருக்கும் உத்தரவுகளைப் பார்த்தும், தாமதமில்லாமல் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கோயில் பிரவேசம் அளிக்கத் தகுந்த சட்டத்தை நிறைவேற்ற முன்வருமா? என்று கேட்கின்றோம். சுதேச சமஸ்தானங்கள் இக்காரியத்தைச் செய்தபின்னும், சென்னைமாகாணப் பொது ஜனங்களின் பிரதிநிதியாகிய சட்டசபை இக்காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சிபார்சு செய்தபிறகும் சென்னை அரசாங்கம் மௌனஞ்சாதித்துக் கொண்டு வாளாவிருக்குமாயின் அது நேர்மையும் ஒழுங்கும் ஆகாது என்பதைச்சொல்ல விரும்புகிறோம். அரசாங்கத்தின் நோக்கம் எல்லா வகுப்பினருக்கும் சமத்துவமளிப்பதும், எல்லா வகுப்பினர்க்கும் நீதி புரிவதும் அல்லவென்று பொதுஜனங்கள் நினைக்கும்படி இருக்கும். ஆகை

யால், சென்னை அரசாங்கம் சிறிதும் தாமதம் இல்லாமல், பரோடா போர் முதலிய சமஸ்தானங்கள் செய்ததுபோலத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கு ஆலயங்களில் சம உரிமை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறுகின்றோம்.

## சென்னை நகர சபைத்தலைவர்.

செட்டி நாட்டுக் குமாரராஜா திரு. எம். ஏ. முத்தையா அவர்கள் சென்னை நகரசபையின் தலைவராக ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டதை நாம் பாராட்டுகிறோம். குறைந்த வயதுள்ள வாலிபர் ஒருவர் ஏகமனதாக நகரசபையின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டது இதுவே முதன்முறையாகும். இதைக்கொண்டே குமாரராஜா அவர்களுக்கு இருக்கும் செல்வாக்கையும், அவர் நடத்தையிலும், திறமையிலும், நகரசபையின் அங்கத்தினர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும், மதிப்பையும், நன்கு தெரிந்துகொள்ளலாம். குமாரராஜா அவர்களுடைய நிர்வாக காலத்திலாவது சென்னை நகர சபையைச் சிறிதும் பார்ப்பனியத்திற்கு இடமாக்காமல் பொது ஜன நன்மைக்கே முழுதும் இடமாக்குவார்களென்று எதிர்பார்க்கின்றோம். அதாவது இதற்கு முன் நகர சபையில் சங்கராச்சாரியாருக்கு வரவேற்பளிப்பதாகவும் பிள்ளையார் கோவிலுக்கு நிலம் கொடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டவை போன்ற விஷயங்களுக்கு இடமில்லாமல் ஏழை மக்களின் சௌகரியத்திற்கான தீர்மானங்களுக்கே இடமளிக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்வார் என்று நம்புகின்றோம்.

உதாரணமாகத் தலைவரைத் தேர்ந்தெடுத்த சமயத்தில் அவரைப்பாராட்டிப் பேசிய திரு. சுந்தரராவ் நாயுடு அவர்கள் குறிப்பிட்டதுபோல ஆதிதிராவிடர்களுக்குக்காலனிகள் ஏற்படுத்தி இலவசமாக வழங்குவது போன்ற சிறந்த காரியங்கள் நடைபெறுமென எதிர்பார்க்கின்றோம்.

வயதில் இளையவராயிருந்தும் பலஸ்தாபனங்களில் சம்பந்தப்பட்டு அவைகளையெல்லாம் திறமையோடும், ஒழுங்கோடும் நடத்திப்பெரும் புகழும் பெற்ற திரு. முத்தையா அவர்கள் சென்னை நகர்சபையின் தலைவரானதைப் பற்றி நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம். வைதீக மனப்பான்மையையுடைய முதியவர்களைக்காட்டிலும் களங்கமற்ற அறிவுபடைத்த இளைஞர்களே பொதுஜன ஸ்தாபனங்களை நிர்வகித்து உண்மையில் பொது ஜனங்களுக்கெல்லாம் நன்மை செய்யும் திறமை படைத்தவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவது செட்டி நாட்டுக் குமாரராஜா அவர்களின் கடமையென்பதைக் கடைசியாக நினைப்பூட்டுகிறோம்.

## ஈ. வெ. ராமசாமிக்கு வரவேற்பு.

### ஈரோடு தாலூகா போர்டார் தீர்மானம்.

சென்ற 29-10-32ந்தேதி ஈரோடு தாலூகா போர்டின் சாதாரணக்கூட்டம் ராவ்பதூர், நல்லதம்பிச்சக்கரை மன்றாடியார் அவர்கள் தலைமையில் கூடியது. அதுசமயம்,

"வெகுகாலம் தாலூகா ஜில்லா போர்டு மெம்பராயிருந்தவரும், சமூகமுன்னேற்றத்துக்கு உழைத்து வருபவருமான திரு. ஈ. வி. ராமசாமி அவர்கள் மேல்நாட்டுச்சுற்றுப்பிரயாணம் செய்துதிரும்புவதால், ஷையாருக்குஒருவரவேற்புப்பத்திரம்வாசித்துக்கொடுக்கவேண்டும்"

என்ற தீர்மானத்தைத் திரு. எம். பி. குப்புசாமிக் கவுண்டர் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு, திருவாளர்களான எஸ். கே. ராமசாமி முதலியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, வி. எஸ்- ராஜாக்கவுண்டர் அவர்களால் ஆதரிக்கப்பட்டு, ஏகமனதாய் நிறைவேறிற்று.

## மதிப்புரைகள்.

### 'சன்மார்க்க போதகர்.'

சன்மார்க்க போதகர் என்னும் பெயருடன். முகம்மது நபி அவர்களின் சரிதம் எழுதப்பட்டிருக்கும் இச்சிறு புத்தகத்தை நாம் படித்துப் பார்த்தோம். நபிகள் நாயகத்தின் சரிதத்தை அறியாதவர்கள், இதை ஒரு முறை படித்தாலே அவருடைய சரிதமுழுவதையும் தெளிவாகவும், சுருக்கமாகவும் உணர்ந்து கொள்ளலாம். யாவரும் படித்துணரத்தக்க எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும். 26 பக்கங்கள் கொண்ட இச்சிறுபுத்தகத்தின் விலை இரண்டணாவாகும். முஸ்லிம் சங்கங்களுக்கும், "குடி அரசு" அபிமானமுள்ள சங்கங்களுக்கும் புத்தகம் இனமாய் அனுப்பப்படும். இது திருச்சி முனிசிபல் ஸ்கூல் உபாத்தியாயர், திரு. கே. ஏ. அப்தல் ஹமீத் சாஹிப் அவர்களால் எழுதப்பட்டு, திருச்சி ஹமிதியா புத்தகசாலையாரால் வெளிடப்பட்டது. வேண்டுவோர், பத்திராதிபர், இந்திய ஒளி ஆபீஸ் திருச்சிறுப்பள்ளி, என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

### பிற சமயங்களுக்கு இஸ்லாத்தின் செய்தி.

இப்பெயர் கொண்ட சிறுபுத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இது, கான் சாஹிப், ஜி. எஸ். அப்துல் கரீம் சாஹிப் அவர்கள். எம். பி. இ. ஆங்கிலத்தில் செய்த ஒரு பிரசங்கத்தின் மொழி பெயர்ப்பாகும். இதன்மொழிபெயர்ப்பாசிரியர், அபிராமநத்தும், முஸ்லிம் நேயர் சங்கத்தின் கௌரவகாரியதரிசி, திரு. விஜயன் எம். அப்துல் கனி அவர்கள். இதைப்படிப்போர் முஸ்லீம் மார்க்கத்தின் உண்மையான கொள்கைகளையும், அது பிற சமயங்களிடம், எவ்வளவு சகிப்புத் தன்மை காட்டுகிறதென்பதையும் உணர்ந்து கொள்ளலாம். "முஸ்லிம் மார்க்கம் பிற சமயங்களிடம் துவேஷம் பாராட்டுகிறது" என்று அறியாமல் கூறுவோர்க்கு இது ஒரு அறிவுச்சுடர் போல விளங்குகிறது. 16 பக்கங்கள் கொண்ட இச்சிறு புத்தகத்தின் விலை தெரியவில்லை இப்புத்தகம், அபிராமநத்தம் முஸ்லிம் நேயர் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. வேண்டுவோர் ஷை சங்கக் காரியதரிசிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

# பொப்பிலிராஜா வெற்றி.

## முதன் மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

சென்ற 3-11-32 தேதி சென்னை அரசாங்க மூன்றுமந்திரிகளும் தங்கள்பதவிகளை ராஜீனமாச்செய்தனர்.

மறுநாள் 4. 11. 32 தேதி மேன்மை தங்கிய சென்னைகவர்னர் அவர்கள் பார்ப்பனரல்லாத கட்சியின் தற்போதய தலைவரான கனம் பொப்லி ராஜா அவர்களுக்குப் பேட்டி கொடுத்துப் பேசிய போது கனம் பொப்லி ராஜா அவர்களை பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டருப்பதாயும், அவரே மந்திரி சபையை அமைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதிற்கிணங்க கனம் பொப்பிலிராஜா அவர்கள் கனம் பி. டி. ராஜன் அவர்களையே இரண்டாம் மந்திரியாகவும், கனம் குமாரசாமி ரெட்டியார் அவர்களை மூன்றும் மந்திரியாகவும் நியமித்து எழுத்து மூலமாய் கவர்னர் அவர்களுக்கு தெரிவித்தார்.

கவர்னர் அவர்கள் இதை ஒப்புக் கொண்ட தோடு 5-11-32 தேதி முதல் ஷை மந்திரிகள் தங்கள் உத்தியோகத்தை ஏற்பார்கள்.

## செனட் தேர்தல்.

கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள முனிசி பாலிட்டிகளினுல் தேர்ந்தெடுக்கப் படிவேண்டிய செனெட் அங்கத்தினர் பதவிக்கு ஈரோடு முனிசிபல் வைஸ் சேர்மென். திரு. ஈ. வி. நஞ்சப்பசெட்டியார் பி. ஏ. அவர்கள் ஓர் அபேக்ஷகராக நிற்கிறார்.

(ஒரு நிருபர்)

## சென்னை கார்ப்பொரேஷன் தலைவர் தேர்தல்.

### குமாரராஜா முத்தையா வெற்றி.

கடந்த 3-11-32ந்தேதி சென்னை கார்ப்பொரேஷன் அங்கத்தினர்களின் கூட்டமொன்று தலைவர் தேர்தல் நிமித்தம் கூடிற்று. அநேகமாய் எல்லா அங்கத்தினர்களும் விஜயம்செய்திருந்தனர்.

செட்டி நாட்டுக்குமாரராஜா முத்தைய்ய செட்டியார் அவர்களைத்தலைவராக திரு வி. சக்கரைசெட்டியார் அவர்கள் பிரரேபிக்க, திரு சுந்தரராவ்நாயடு அவர்களால் ஆமோதிக்கப்பட்டது. வேறு எவர் பெயரும் பிரரேபிக்கப்படாமையால் குமாரராஜா அவர்கள்ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் பல பிரபல அங்கத்தினர்கள் புதியதலைவரைப்பற்றிப்புகழ்ந்தும் சந்தோஷித்தும் சொற்பொழிவு நிகழ்த்தினர். தலைவரது பதிலுக்குப்பின்னர் கூட்டம் முடிந்தது.

## நாகர் கோவில் சமபந்தி போஜன சங்கம்:—

நாகர்கோவில் சமபந்தி போஜனச் சங்கம் என்ற பெயருடன் ஒரு சங்கம் நிறுவியுள்ளார்கள். இச்சங்கத்திற்கு இந்நகர் சுயமரியாதை வீரரும், வக்கீலுமான எம். பரமேஸ்வரன் எம். ஏ., பி. எல். அவர்களை தலைவராகவும், உபத்தலைவராக பி. முத்துகருப்பபிள்ளை முனிசிபல் கவுன்சிலர் அவர்களையும், நியமிக்கப்பட்டிருக்கிறது, காரியதரிசியாகிய டாக்டர் கே. ஏ., நாரயணபிள்ளை அவர்களையும் திரு. ஈ. ராமசாமி அவர்களையும், நியமிக்கப்பட்டிருக்கிறது. என ஒரு நிருபர் எழுதுகிறார்,

# கத்தோலிக்க வாலிபர் மகாநாடு.

## திருச்சியில் கூட்டம்.

### சுயமரியாதை கண்டு நடுக்கம்.

தென்னிந்தியா கத்தோலிக் வாலிபர் மகாநாடு 30-10-32 தேதி மாலை திருச்சி முனிசிபல் நாடகக் கொட்டகையில் கூடியது. திரு. ஜோஸப் பேட்டா எம். ஏ; எம். எல். ஸி தலைமை வகித்தார்.

வரவேற்புக்கமிட்டித் தலைவர் திரு. ஏ. எம். ஜே. தனசாமி தலைவருக்கு ஒரு வரவேற்பு பத்திரம் வாசித்துக் கொடுத்தார்.

திரு. ஜோஸப் பேட்டா என்பவரைத் தலைவராகத் தெரிந்தெடுத்த பிறகு அவர் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் பின் வருமாறு:—

"நாம் வசிக்கும் காலம் மிகவும் நெருக்கடியாக விருக்கிறது. வாலிபர்கள் பேரில் பெரும்பாரம் ஏற்பட்டிருக்கிறது. ராஜீய, பொது ஜன சமூக பொருப்பாட்சி மிகவும் வேகமாகவே வந்து கொண்டிருக்கிறது. ஜாதி மதம் ஒழிந்துவருகிறது. பழைய வழக்கங்களும் பழக்கங்களும் வெகு சீக்கிரமாக மறைந்து வருகின்றன. ஒவ்வொருதினமும் பல விஷயங்களில் முன்னேற்றம் அபரிமிதமாக நடந்து வருகிறது. நூற்றாண்டுகளில் நடக்கும் விஷயம் பல வருஷங்களில் நடக்கிறது. சமூகமாறுதல்களும் சொத்து வார்சு விஷயத்திலும், கலியாண சட்டங்களிலும், மற்ற சமூக விஷயங்களிலும் மிகவும் வேகமாக மாறுதல்கள் நடைபெற்று வருகின்றன. இது நடப்பதற்கு காரணம் மேல் நாட்டிலிருந்து நாம் விஷயங்களை கவனிப்பதுதான். மேற்கே மலையாளப் பிராமண குலத்திலும் கூட மிகதீவிரமாக மாறுதல்கள் நடைபெற்று வருகின்றன. வித்தியா இலாகாவிலும் சுவாமியை அப்புறப் படுத்திவிட்டார்கள். ஸ்வாமியும் நடத்தையும் இல்லாததாகப் படிப்பு ஆய்விட்டது. இந்தியாவில் விஷயங்கள் எல்லாம் பானையில் வேகுவது போலிருக்கிறது. எப்படி பெரிய சாமான்களை ஒரு சின்ன இரும்பு தூக்குகிறதோ அதுபோலவே 30 கோடி ஜனங்களை கொஞ்ச சங்கையாக உள்ள கிறிஸ்தவ வாலிபர்தான் தூக்க வேண்டும். தேசிய சமூக விஷயங்களிலும் சீர்திருத்தத்திலும் உங்கள் பொறுப்பு அதிகம்.

கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்திற்கு அன்னியரைச் சேர்த்துக்கொள்வதன் தத்வம் என்னவெனில் அவர்கள் சுகப்படுவதைப்பலருக்கும் கொடுத்து அவர்களுடன் சுகப்படுவதற்காகவே. பிறகு அவர் ஒற்றுமை விசேஷத்தை எடுத்து சொல்லி எல்லா சங்கங்களும் சேர்ந்து வேலை செய்ய வேண்டினர்.

மீண்டும் வாலி மண்டபத்தில் மறுநாள் காலை மகாநாடு கூடி தங்கள் பெடரேஷனை வலுவாக்கும் விஷயமாக 8 தீர்மானங்கள் நிறைவேறின.

#### சுயமரியாதைமீது கோபம்.

தஞ்சாவூர் செல்வராயர் "தெய்வமில்லை என்னும் கிறிஸ்தவக்கொள்கைக்கு விரோதமான சுயமரியாதை இயக்கத்தை இந்த மகாநாடு பலமாக கண்டித்து அந்த இயக்கத்தைக் கண்டிக்க, வாசிக்கும் கிளப்புகளிலும் மேடைகளிலும், பத்திரிகைகளிலும் பிரசாரம் செய்யத் தீவிர முயற்சி எடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது" என்ற தீர்மானத்தை பிரேரேபித்தார். அப்போது அவர் இந்த இயக்கம் எப்படி திரு. ஈ. வி. ராமசாமியால் ஆரம்பிக்கப்பட்ட தென்றும் தமிழ் நாடு மாத்திரம் நிற்காமல் பர்மா, மலாய் நாடுகளிலும் அது பரவி விட்டது என்றும் சொன்னார். இப்போது தெலுங்கு ஜில்லாக்களிலும் பிரசாரம் செய்ய விசேஷ ஏற்பாடு நடக்கிறது. குடி அரசு, போர்முரசு, புதுவை முரசு என்ற பத்திரிகைகள் மிகவும் விஷமமான பிரசாரங்களைச் செய்து வருகின்றன, இயக்கம் ஆரம்பித்தபோது இந்து மதத்தில் இருக்க ஊழல்களை திருத்தத்தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்த நோக்கம் இல்லாமல் இந்த பத்திரிகைகளில் பல தேதிகளில் எழுதிய வியாசங்களைத் தேதிகளுடன் குறிப்பிட்டுச் சொன்னார். இந்த ஜில்லாவில் இந்த இயக்கம் பரவி சுமார் 150 கலியாணங்கள் கத்தோலிக்கரில் குருக்கமார் இல்லாமலே நடந்திருக்கிறது. எல்லா கத்தோலிக்கரும் இந்த விஷமமான இயக்கத்திலிருந்து ஒதுங்கியிருப்பதோடு எல்லாக் கூட்டங்களிலும், கிளப்புகளிலும் இதைப்பற்றி எடுத்துச் சொல்லி, கத்தோலிக் சத்திய பத்திரிகையிலும் எதிர் பிரசாரம் செய்ய வேண்டுமென்று சொன்னார். அப்போது தங்களுக்கும், தங்கள் குலத்திற்கும் உலகத்திற்கே நன்மை செய்தவர்களாவர் என்று சொன்னார்.

தீர்மானத்தை ஆமோதித்த பிற்பாடு ஈரோடு வக்கீல் அற்புதசாமி கோயமுத்தூர் ஜில்லாவில் மேற்றிராணியார் குடி அரசு, சுயமரியாதை இயக்கத்தில் யாதொரு சம்பந்தமும் கூடாதென்று சுற்றுக் கடிதம் விடுத்ததாயும் 15 நாள் கெடுவு கொடுத்து அதற்குள் குடி அரசு நிறுத்தாதவர்களை ஜாதி பிரஷ்டம் செய்ததாகவும் சொன்னார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

விருக்கும். மக்களது முன்னேற்றத்திற்கு தடைகல்லாக விருக்கும் காரியங்கள் எதுவுண்டோ அவைகளை தகர்த்தெறிய வேண்டும். வீணாக—ஆடம்பரமாக நாங்களும் தலைவர்கள் தான் என்று வீரம்பேசிக் கொள்வதில் பயனில்லை. நமக்குப்பகுத்தறிவு இருக்கிறது. அப்பகுத்தறிவின் பயனால் இடையூறாக இருக்கும் காரியங்களை மனோதிடத்துடன் தகர்த்தெறிய முன்வரவேண்டும். அன்றே முன்னேற—ஈடேற வழி ஏற்படுமென்பதில் சிறிதும் ஐயமில்லை என்று குறிப்பிட்டார்.

இதற்கடுத்தபடியாக தோழர் நடராஜன் அவர்கள் சிறிது நேரம்பேசி முடியவே, தோழர் அ. இராகவன் அவர்கள் "சுயமரியாதை என்றால் என்ன"? என்பதை பொருளாகக் கொண்டு சபையார் ஆனந்தபரவசமடையத்தக்கவாறு சொற்பொழிவு நிகழ்த்தினர். அப்பால் திரு. எஸ். எம். சாமி அவர்கள் பெரியார் ராமசாமி அவர்களது தொண்டைக்குறித்து சிறிது நேரம் பேசி முடியவே, சங்கைக்குரிய ஜே. வி. தானியேல் ஐயர் அவர்கள் பெரியார் ராமசாமியாரை தாம் பார்க்கவேண்டுமென்று அவா அதிகமாகக் கொண்டிருந்ததாவும், அதற்கேற்ப இன்று தாம் கண்டு சந்தித்து அன்னவரின் சொற்பொழிவைக் கேட்டானந்திக்கச் சந்தர்ப்பங்கிடைத்ததற்காக தாம் மகிழ்ச்சியடைவதாகவும், அப்பெரியாரின் ஊழியம் மிகவும் மெச்சத்தக்கதென்றும், அதிலும் விசேஷமாக அன்னவர் நடத்திவரும் "குடி அரசு" பத்திரிகையை ஒவ்வொருவரும் படிக்க வேண்டுமென்றும், இன்று பெரியார் பேசும் விஷயங்களை அநேகமாக கவனித்து, அப்பெரியாரின் உள்ளான கருத்து என்னென்பதை ஆழ்ந்து சிந்திக்கவேண்டுமென்றும் திரு. இராகவன் அவர்கள் மிகவும் தெளிவாக எடுத்து கூறியதை பாராட்டுகிறேன் என்றும் பேசினர்.

திரு. பி. அருணாசலம் அவர்களால் பெரியார் ராமசாமிக்கு சங்கத்தின் பேரால் வந்தனங்கூறப்பட்டது.

இறுதியாக அக்கிராசனரவர்கள் முடிவுரையில் பெரியாரது கருத்துகளை விளக்கிகாட்டியதின் பின்னர், அக்கிராசனருக்கும், சபையாருக்கும் வந்தனோபசாரங்கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

கட்கு இத்தகைய கொலைகார ராஜ்யம். வேண்டாம், வேண்டாம் என்று வீரமுழக்கஞ்செய்யுங்கள். எங்கட்கும் சுயராஜ்யம் வேண்டுந்தான், யாங்களும் மனிதர்களோடு மனிதராக வாழவேண்டுந்தான், ஆனால் எத்தகைய ராஜ்யம்! மதமொழிந்த ராஜ்யம்,—மக்கள் சுயராஜ்யம், ஜாதி பொழிந்த ராஜ்யம்—சமத்துவ சுயராஜ்யம் வேண்டும் வேண்டும் என்று வீரகர்ச்சனைசெய்து வெற்றிகொடி ஏந்தி வெளிவாருங்கள். அதற்கெனவேண்டுவன செய்யும் —உழைக்கும் 'சுயமரியாதை இயக்கத்தில்" ஈடுபட்டு உங்கள் நலனைத்தேடிக்கொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் வாழுவெல்லாம் வீணாகி, நீங்களும் கெட்டு உங்கள் சந்ததியாரும் கெட்டு, உலகமக்கள் சிறிப்புக்கும் ஆளாவீர்களென்பது திண்ணம்! திண்ணம்.

## இருநகர் திராவிட முன்னேற்ற சங்கம்.

இருநகர் திராவிட முன்னேற்ற சங்க வாராந்திரக் கூட்டமொன்று 23-10-32- தேதி மாலை, 7மணிக்கு, சங்கவாசகசாலைக்கட்டடத்தில் தோழர் எஸ். கருப்பண்ணன் தலைமையில் கூடிற்று. தோழர் என். கருப்பண்ணன் சுயமரியாதை கீதம்பாடினர். தோழர் என் ஆறுமுகம் கல்வி யென்னும் விஷயத்தைப்பற்றி சொற்பொழி வாற்றினர். இவரை ஆதரித்து தோழர்களான சி நாராயணசாமி, கெ. கஞ்சப்பன் இவர்கள் பேசினர்கள். பிறகு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டபின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

## திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

### 1932-ஞ S. C. No. 486.

அவனாசி தாலூகா கஸ்பா சேவூரிலிருக்கும் ராமகிருஷ்ணனுடைய மகன் அப்புச்சாமி என்கிற செல்லமுத்துக்கவுண்டன்—வாதி.

ஷை தாலூகா பாப்பாங்குளம் கிராமம் மஜரா வலைய பாளையத்திலிருக்கும் அங்கண்ண கவுண்டன் மகன் கருப்பண்ண கவுண்டன்—பிரதிவாதி.

ஷை கேசில் வாதிக்கு பிரதிவாதி 28-5-29 தேதியில் எழுதிக் கொடுத்திருக்கும் பிராம்சரி நோட்டின் பேரில் அசல் வட்டி உள்பட ரூபாய் 130-0-0-யும் கோர்ட்டு செலவும் கிடைக்கவேணுமாய் தாவா செய்து அது சரய்வதற்கு 11-11-32 தேதி போட்டிருக்கிறது. ஆகையால் ஷை கேசில் யாதாவது ஆக்ஷேபனையிருந்தால் ஷை தேதியில் காலை 10 மணிக்கு ஆஜராய் தெரிவித்துக் கொள்ளவேண்டியது. தவறும் பக்ஷத்தில் உம்மபேரில் ஒருதலைப்பட்சமாய் தீர்மானம் செய்துவிடுவார்கள் என்ற விபரம் அறியவும்.

பி. ஏகாம்பரம் B. A. B. L.
வக்கீல்.

திருப்பூர், 3-11-32.

[7-ம் பக்கத்தொடர்ச்சி]

விருக்கும் மொழிகளுக்கு அநேக விதங்களில் மாறுதலாக இருக்கும் —கர்நாடக இங்கிலீஷிலுள்ள [Bible] வேதத்தின் நடையின் [Sytle] போக்கை வியந்து பாரா கிட்டுன்றனர்! குரான் வேதமானது, இக்காலிலுங்கூட பழைய அராபி பாஷையிலேயே ஓதப்படுகின்றது; ஆனால் இந்தியாவிலும் பெர்ஷியாவிலுமுள்ள மகமதியர் பெரும்பான்மையோருக்கு அராபி பாஷையே தெரியாது!

இந்தியாவிலே, வித்யாபிவிருத்தி யங்கத்தினர்,—எளிய மகமதிய சமூகத்தினருடைய கல்வியை வளர்ப்பதற்காக—பெரு முயற்சிகள் செய்தும், பயன்படாமல் மயங்குவதற்கான காரணங்கள் பலவற்றுள்,—அம்மதத்திய சிறுவர்கள் முதலில் இந்தக் குரான் வேதம் முழுவதையும், பாராமல் பாராயணம் செய்தாக வேண்டியிருத்தலேயே, முதன்மையானதாகக்கூறலாம். சிந்து தேசத்தினர், படிப்பு விஷயத்தில் மத சம்பந்தமான எதிர்ப்புகள் உண்டாகாமலிருப்பதற்காக—முல்லாக்களையும், கிராமமதப் பாதுகாப்பாளர்களையுமே, கலாசாலைகளைக் காப்பாற்றுமாறு பாதுகாவலராக அமைத்திருக்கின்றனர்; அப்படிப்பட்ட முல்லாக்களால் சீமுதாய முன்னேற்ற சம்பந்தமான விஷயங்களைக் கற்பிக்க முடியாதென்பது வெளிப்படை.

ஹிந்துக்களுடைய மத சம்பந்தமான வேத நூற்களெல்லாம், சாதாரண மனிதர்களால் படித்துணர முடியாத சமஸ்கிருத பாஷையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. ஈஸ்வர பிரார்த்தனைகளும், ஏனைய வைதிக சடங்குகளும், இந்தச் சமஸ்கிருத மந்திரங்களைக் கொண்டே நிகழ்த்தப்படுகின்றன. இதில் இன்னொருசிக்கலும் உண்டு. அதாவது, வேதங்கள் எனப்படும் பழைய காலத்திய மத நூற்கள், மிக்க புராதன சமஸ்கிருத நடையில் எழுதப்பட்டிருப்பதால்,—பிரபல மதத்தலைவர்கள் பண்டிதர்கள் எனப்படும்—இவர்களுக்குள்ளேயே அவற்றின் அர்த்த சம்பந்தமான பாஷ்யங்களிலேயே ஒன்றுக்கொன்று மாறுபட்ட அர்த்தங்கள் காணப்படுகின்றன. பிராமண, க்ஷத்திரிய, வைசியர் எனப்படும் இருபிறப்பாளர்களாகிய மேல் மூன்று வருணத்தவர்கள் செய்யும் பூஜா கைங்கரியங்களில் வேத மந்திரங்களும்; சூத்திர வருணத்தைச் சேர்ந்தவர் செய்யும் வைதீகச்சடங்குகளில்—புராண இதிகாசங்களின் நடையைத்தழுவியதும், ஏறக்குறைய தற்கால சமஸ்கிருதத்தை ஒத்ததுமான—புராண யந்திரங்களும், ஓதப்படுகின்றன. ஏதோ சிலராவது அர்த்தம் கண்டு பிடிக்கக்கூடியதாயிருப்பதால் அவ்வித புராண மந்திரங்தான் பலராலும் போற்றப்படும் என்று பிறர் நினைக்கலாம். ஆனால் உண்மை அப்படியன்று. அந்தந்த ஜாதியின் மேன்மை, தாழ்மை அவரவர்கையாளும் மந்திரங்களில் தானிருக்கின்றன. புராண மந்திரங்களிலேயே பிறந்து மணந்து இறந்த சில ஜாதிகள் சென்ற ஐம்பது வருடங்களுக்குள்ளாக வேத மந்திரங்களைக் கையாளும் உரிமை எவ்வாறோ பெற்றுவிட்டதால் அவைகள் தாமாகவே உயர்ந்த ஜாதிகளாக மாறிவிட்டன!

பிராமணர், பிராமணரல்லாதார்களுக்குள் இருக்கும் கலகங்களுக்கு வித்து ஆதியில் பம்பாயிலேயேதான் ஊன்றப்பட்டது. சிவாஜி வம்சத்தைச்சேர்ந்த கோல்பூர் மஹாராஜாவானவர் வேதத்தில் குறிக்கப்பட்ட சடங்குகளில் தனக்கும்பாத்யதை உண்டு என்பதாகத்தனது உரிமையைப்பாராட்டினதே அந்த வித்தாகும். உடனே அந்தமஹாராஜாவுடைய குல குருவானவர் அதனை அங்கீகரிக்க மறுத்ததால் அவருடைய பரம்பரைச் சொத்துக்கள், கட்டளைகள் முதலிய வேதனங்கள் பலவும் பறிமுதல் கொள்ளப்பட்டன. அன்று ஊன்றப்பட்ட அந்தக் கலக வித்தே இன்று இவ்வித இருண்டதுவேஷமாகக் கிளம்பி முதல்தரமான தேசியப்போராட்டங்களாக எங்கும் பரிணமித்துப்பரந்து காண்கின்றது!

சொற்பதொகையில் சகலவேத சாஸ்திரங்களையும் வாங்கி அவற்றிலுள்ள அதி இரகசிய மந்திரங்களையெல்லாம்—ஹிந்துக்களல்லாதார் உட்பட—எவர்வேண்டுமானாலும் எங்கும் படிக்கும் நிலைமைக்கு வந்துள்ள இக்காலத்திலும் கூட மேற்கூறிய வேதம் புராணம் இவைகள் சம்பந்தமான மந்திரச் சடங்கு களைப்பற்றிய விவகாரங்கள் ஒழிந்த பாடில்லையே! வைதீகர்களுக்கும் பகுத்தறிவிற்கும் வெகுதூரம் போலும்!!

மதுரையில்
குடி அரசு கிடைக்குமிடம்.
எம். முத்துசாமி
ஜெனரல் நியூஸ் ஏஜன்சி
கீழவெளிவீதி மதுரை.

## கூத்தூர்.
## வைக்கம் வீரர் இலவச வாசக சாலை இலாட்டரி.

ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக கவர்ன்மெண்டாரால் வாசகசாலைக்கு இலவசமளிக்கப்பட்டிருக்கும் ஸ்தலத்தில் கட்டவும் கட்டுவதற்கும், மூல தனத்திற்காகவும் இலாட்டரி நடத்தப்படுகிறது. இலாட்டரி புத்தகம் வேண்டியவர்கள் கூத்தூர் வைக்கம் வீரர் இலவச வாசகசாலையின் ஸ்தாபகரும், நிர்வாகியுமாகிய திரு. எஸ். முத்துகிருஷ்ணன் அவர்களிடம் நேரிலோ, தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாமென நமது நிருபர் எழுதுகிறார்.

---

வைக்கம்வீரர் இலவசவாசக்சாலையின் ஸ்தாபகராகிய திரு. முத்துகிருஷ்ணன் அவர்கள் கூத்தூர் கைலாஷநாத சுவாமிகோயிலில் தங்கிஇருந்த வேல்சாமிஎன்கிற திருப்புகழ்சாமி என்னும் பிச்சைக்காரரை அடித்து அவரிடம் இருந்த பத்து பவுன் நாணயங்களையும்' ஒருநூறு ரூபாய் நோட்டையும் 26-9-32ல்திருடிக்கொண்டு போய்விட்டதாக டிரஸ்டியால் கி. மே. துவாராவாக கொடுக்கப்பட்ட பொய்பிராதை கீவளூர் போலீஸ் ஸ்டேஷனுபிஸரவர்கள் விசாரனை செய்துபொய்கேசு என்பதாக தள்ளுபடி செய்துவிட்டார்கள். வாசகசாலை மானேஜருக்கு சுமார்ஐம்பதினாயிரம் ரூபாய்பெருமான சொத்துக்கள்இருக்கின்றது. மாஜி ஆக்டிங் கி.மு' வாய் சிலவருஷகாலம் இருந்து இருக்கிறார். ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு வருவதை முன்னிட்டு இவ்வித சம்பவங்களெல்லாம் நிகழ்கின்றன. ஒரு நிருபர்

---

## மரணம்.

வைக்கம் வீரர் இலவச வாசகசாலையின் மானேஜர் இரண்டாவது22வயதுள்ள தங்கையும் 17-10-32ல் மலேரியா ஜுரத்தால் மரணமடைந்துவிட்டார் மேற்படியார் மனைவியார் சுகமடைந்துவிட்டார். என ஒருநிருபர் எழுதுகிறார்

---

டாக்டர்
# சிங்காரம் அவர்களின்
## மஹா சந்தனாதித்தைலம்.
(ரிஜிஸ்டர்டு)

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது
கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்குஇத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்.

கண் எரிச்சல்
கண் சிவப்பு
கண்ணில் நீர்வடிதல்
கண் அரிப்பு
கண் பார்வைக்குறைவு
கண் கூச்சம்
கண்ணில் பீளை சாருதல்
மேக நீர், வெள்ளெழுத்து
ஒருத்தலை நோய்
கை கால் எரிச்சல்
மூலச்சூடு
அஸ்திகாங்கை
வெட்டைச்சூட்டால் உண்டாகும் திரேகக் காந்தல்
காது நோய், காது மந்தம்
மண்டை இடி

பீனிசம்
தலை மயக்கம்
தலைப் பொடுகு
சொரி சிரங்கு
தலைமயிர் உதிர்தல்
நாள்பட்ட தலை நோய்
முதலிய பல வியாதிகளை ஆச்சசரியமாய் குணம் செய்யும். சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கும். ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். பத்தியமில்லை.

24 அவுன்ஸ் டின் ரூ. 4-0-0
12 ,, ,, ரூ. 2-2-0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

# சோதிடமும், சகுனமும்.

டாக்டர் பராஞ்சிபை அவர்கள் எழுதியதின் மொழிபெயர்ப்பு.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

வியாபார நிமித்தமாகத் தங்கள் மூலதனத்தைப் போட்டுச் சரக்குகளைச் சேகரித்து வைத்திருப்பவர்களில் அநேகர், சோதிடத்தை நம்பி நல்ல காலத்திற்காகக் காத்திருந்து மோசம் போகின்றார்கள். சோதிடத்தை விடுத்துத் தங்கள் சுயமதியை நம்பி நடந்திருப்பார்களானால், மிக்க நலமாகவேயிருக்குமென்பதை அவர்கள் அறிகின்றார்கள் இல்லை. ஒரு அறிவாளிக்கு விஞ்ஞான தத்துவங்களெல்லாம் [Scientific truths] வெளிப்படையானவைகளாகவேயிருக்கவேண்டும்; அவற்றுள் ஏதாவது ஒரு சித்தாந்தம் தப்பிதம் என்பதாக நிரூபிக்கப்பட்டு விட்டால் அதனால் என்ன நன்மை நேரிடுவதானாலும் அது தள்ளிவிடப்படுகின்றது. சோதிடமானது வெளிப்படையாக உண்மையானதென்று நிரூபித்துக்காட்டப்பட்டது அல்லவாயினும் அதன் கொள்கைகளின் பிரகாரம் நமது எதிர்காலத்தை முதலிலேயே அறிவதால் நமக்கு இப்போதிருக்கும் நன்மை நிலைமைகளைவிட ஏதாவது அதிகமான நன்மை ஏற்படப் போகிறதா என்பதை நாம் கேட்டுத்தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றோம். இனி என்ன ஏற்படப்போகின்றதோ என்பது நிச்சயிக்க முடியாததாக இருப்பதனால், எதிர்காலத்தைக் கூடிய மட்டும் தனது மனோவலிமையாலும், சமய சாமர்த்தியத்தாலும் வென்று சமாளிப்பதில் தான், வாழ்நாளில் நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஒருவன் தனது ஜாதகத்தைக் கொண்டு தனது ஆயுட்காலத்தில் ஏற்படக்கூடிய ஒவ்வொரு சம்பவங்களையும் முதலிலேயே உணர்ந்து கொள்ளுவானாயின் அவன் தனது கடத்தைகளில் ஒரு சிறிதும் கவனஞ்செலுத்தாமல், தானாக வேறு எந்தக்காரியத்தையும் செய்யமனம் இல்லாதவனாய், சமுதாய வாழ்விற்கோர் முட்டுக்கட்டையாகவே இருப்பான் என்பது திண்ணம்.

சோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கை கொள்வதானது, உயிருக்குயிராய் எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் காத்தளிப்பதாகக்கூறும் ஒரு அழியாத கடவுளின் மேல் வைக்கும் நம்பிக்கைக்கு முற்றும் மாறானதேயாம். மதத்திலே மாறாதபக்தி கொண்டு தங்கள் இஷ்டகாரியாதிகளுக்காக அந்த சர்வ வல்லமையுள்ள கடவுளையே அடிபணிந்து பிரார்த்தித்து, எண்ணிய எண்ணியாங்கெய்துவதாகக்கூறும் பல மதபக்தர்கள்கூட தங்கள் கொள்கைகளுக்கு மாறாக விளங்கும், "நட்சத்திரங்களின் நியதிப் பிரகாரம் விதித்த விதி மாறாது நடக்கின்றது" எனக் கூறும் அந்தச்சோதிடத்தினுட் குறைபாத நம்பிக்கை வைத்திருப்பது எதற்காகவோ அறியோம்.

இம்மாதிரியான ஒன்றுக்கொன்று மாறுபட்ட தன்மையுடையவைகளை நம்பி நடப்பது அவர்கள் தங்களுடைய அறிவை நேர்வழியில் செலுத்தாமையையே விளக்குகின்றது. மதப்பற்றுமிக்குள்ளோருக்கும் பகுத்தறிவிற்கும் வெகு தூரம் போலும்!

நாம் இவ்வளவு அதிகமாகச் சோதிடத்தைப்பற்றி வலியுறுத்தவேண்டியேற்பட்டதனாலெனில், இரசாயனம், பூகோளம் முதலிய சாஸ்திரங்களைப்போல் இதனையும் ஓர் உண்மைச்சாஸ்திரமாகக்கருதி வருவதாலும், இதனை முற்றும் நம்பி மோசம் போகும் மாக்கள் இந்தியாவில் மாத்திரம் அன்றி இன்னும் பிறநாடுகளிலும் ஏராளமாக இருக்கின்றார்கள் என்பதனுமே யாகும். மேற்குறித்த எதிர்ப்புகள் சோதிடம் போன்ற இன்னும் பல போலி சாஸ்திரங்களுக்கும் பொருத்தமானவைகளே. உதாரணமாக மிக்க பிரக்யாதிபெற்றுள்ள இரேகை சாஸ்திரமும் போலியேயாகும். அறிவைக் கையாளுவோருக்கு எதிர்காலத்தையறிவிக்கும் ஓர் குறுக்கு வழி இல்லையென்று கூறலாம்.

நாம் அதைப்பற்றி நம் அநுபவத்திற்கேற்ப ஏதோ உத்தேசித்தல் கூடும்; எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான சமாச்சாரங்கள் நமக்கு எட்டுகின்றனவோ அவைகளுக்கேற்ப நமது உத்தேசமும் உண்மையாக அமைவதற்கானலாம். மானச தத்துவங்களின் விவரங்கள் நமக்கு அதிகமாக விளக்க முறாதிருந்தமையின் தற்காலத்தில் "மனிதன் எதிர்காலத்தை அறிதல் என்பது குதிரைக் கொம்பே"யாம்; ஏனெனில் எல்லா வித மனித முயற்சிகளிலும், எதிர்பாராத சந்தர்ப்பங்களைத் தனது புத்தி சாதுர்யத்தாலும், விடாமுயற்சியாலும் கூடுமானவரையிலும் அடக்கி ஆளலாம். அறிவாளியாக இருக்கின்ற ஒருமனிதன் தனக்கு எதிர்பாராத விஷயங்கள் சேர்ந்து அவை மனித முயற்சிகளுக்கு மேம்பட்டிருப்பின் அவைகளுக்காகக்கடவுளையும் காலத்தையும் நோகாமல் "ஆனது ஆகட்டும்" என அதன் போக்கிலேயே பார்த்து நின்று தனது நிட்சித்தத்தால் சந்தோஷமடைகின்றான்.

---

# தாழ்த்தப்பட்டாருக்கு கோயில் நுழைவு.

சென்னை சட்டசபையில் டாக்டர் சுப்பராயன் முயற்சி.

தீர்மானம் நிறைவேறியது.

தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு கோவில்நுழைவுஉரிமைகொடுக்கவேண்டுமென்பதுபற்றி, "பொதுவான கோயில்களில் தாழ்த்தப்பட்டவர்களையும் ஆலய தெரிசனம் செய்ய அநுமதித்து, மற்ற வகுப்புகளைப் போல் அவர்களுக்கும் நீதிவழங்க வேண்டுமென்றபொதுஜனஉணர்ச்சி அதிகரித்து வருவதை ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும், புறைப்பந்தத்தை அநுகூலமாய்க் கொண்டு எல்லாக் கோவில்களையும் திறந்துவிடவேண்டுமென்றும், இந்த ஆலயநிருவாகத்தில் ஈடுபட்டிருக்கும் தருமகர்த்தாக்கள் முதலியோர்களின் சந்தேகத்தை நிவர்த்திக்கவும், சட்டம்செய்யவேணுமென்று இச்சபை சர்க்காருக்கு சிபார்சு செய்கிறது" என்றடாக்டர் சுப்பராயன் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தைப் பற்றி சென்ற2-11-32ந்தேதி மாலை சென்னை சட்டசபையில் விவாதம் நடைபெற்றது. சி. ஆர். பார்த்தசாரதி அய்யங்கார், நாராயணநம்பியார், யாகுப்ஹுசேன், ராவ்பகதூர் சீனிவாசன், என். சிவராஜ், திருமதி. அலமேலு மங்கைத் தாயாரம்மாள் முதலியோர் தீர்மானத்தை ஆதரித்துப்பேசினர். ஸர். ஏ. பி. பாத்ரோ தீர்மானத்தை எதிர்த்துப் பொதுஜன அபிப்பிராயம் தெரிந்தே சட்டமாக்கவேண்டுமென்று குறிப்பிட்டார். பின்னர் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டதில் சாதகமாக 56 ஓட்டுகள் பெற்றது. 19 பேர் நடுநிலைமை வகித்தனர். சர்க்கார் அங்கத்தினர்கள், காரியதரிசிகள், மந்திரிகள், முதலியோர் நடுநிலைமை வகித்தனர்.

தீர்மானம் நிறைவேறியது.

## கலப்புமணச்சங்கம்.

கலப்பு மணச்சங்கம் என்ற பெயருடன் ஒன்று நாகர் கோவில் நிறுவி அதற்கு சுயமரியாதை வீரர் ஆர். ராமலிங்கம் அவர்கள் தலைவராகவும், எஸ். திருவத்தனன், டி. ஆறுமுகம் ஆகியவர்களை காரியதரிசிகளாகவும், கே. இராமய்யா, திராவிடன் ஏஜண்டு அவர்களை பொக்கிஸ்தாரராகவும் நியமிக்கப்பட்டு தீண்டாமை விலக்கு விஷயத்தில் தீவிர முயற்சி நடைபெற்று வருகிறது. எனக்காரியதரிசி எழுதுகிறார்.

---

[6ம் பக்கத் தொடர்ச்சி]

தேகமில்லை, எனினும், இன்னும் பல பெரிய வேலைகளை நாம் செய்து முடிக்கத்திட்டம் போட்டிருக்கிறபடியால், நமது தலைவர்கள், வந்ததும் நமக்குக் கடுமையானவேலை இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆகையால், எனது, வாலிபத்தோழர்களே! சகோதரர்களே!! மகத்தான பொறுப்பும், தியாகமும், உங்களை, எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது. உங்களுடைய உழைப்பை, நாடு பெரிதும் வேண்டிக்கொண்டிருக்கிறது. ஏழை, எப்பொழுதும் உழைத்துக் கொண்டிருக்கவும், அதன் பலனை பணக்காரன் எப்பொழுதும் அநுபவித்துக்கொண்டிருக்கவும், தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் இன்னும் மலத்திலும் கேவலமாக மதிக்கப்படவும், மதத்தலைவர்களும், உயர்ஜாதிக்காரர் என்பவர்களும் அவர்கள் மேல்சவாரி செய்துகொண்டிருக்கவும், மதத்தின் பேரால் இன்னும் நாட்டு மக்கள் பலகோடி ரூபாய்களை கடவுள்களுக்கென விரையம் செய்துகொண்டிருப்பதையும் இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் பார்த்துக்கொண்டிருக்கப்போகிறீர்கள்? என்னும் கேள்விக்கு நீங்கள்தான் விடைகூறவேண்டும். ஆகையால் தோழர்களே நாம் தியாகம் செய்யத்தயாராகவேண்டும். நமக்கு இது சோதனைக்காலமாகும்.

# இந்தியாவின் வறுமையும், மேல் நாட்டின் செழுமையும்.

(தோழர் சி. ச. சுப்பையா)

எந்த நாடும் ஜனங்களுடைய முயற்சியால்தான் மேன்மைகளை அடையவேண்டும். இதை அறிந்த மேல் நாட்டார்கள் தான் தங்களுடைய முயற்சியால் சகலத்திலும் முன்னேற்றம் அடைந்து வருவதோடு கடவுள் செயல் என்று நாம் சொல்வதை யெல்லாம் அவர்கள் மனிதர்களின் முயற்சியின் செயல்கள் என்று காண்பித்துகொண்டும் வருகிறார்கள்.

மேல் நாட்டார்களுக்கு வருணாச்சிரம தருமச்சங்கடமும், வைதீகத்தடையும், வழக்கம் என்ற அறியாமையும் இல்லாதபடியால் அவர்கள் தங்கள் நாட்டுக்கு வேண்டியதுபோக எந்த நாட்டுச்சந்தைகளில் என்ன சாமான்களைக்கொண்டுபோய் விற்றுப்பணத்தைக்கொண்டு வரலாமென்று ஆராய்ச்சிசெய்து அவைக் கேற்ப தங்கள் நாடுகளில் விவசாயங்களையும், கைத்தொழில்களையும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்தியர்களாகியநாம் வருணாச்சிரம தருமத்தையும், வைதீகத்தையும் வழக்கம் என்பதையும் பிடித்த பிடியோடு எதற்கும் தலைவிதியென்றும், கடவுள் செயல் என்றும் சொல்லிக்கொண்டிருப்பது மூலம் நம்முடைய நாட்டில் விவசாயங்களும், கைத்தொழில்களும் விருத்தியடையாமலிருக்கிறது.

நிலவிரிவிலும், சனத்தொகையிலும் மிகவும் குறைவாகவுள்ள பிரிட்டனில் வருஷத்திற்கு சுமார் விவசாயத்தின்மூலம் 80 கோடி ரூபாயும், கைத்தொழில்மூலம் 800 கோடி ரூபாயும், நிலவிரிவிலும், ஜனத்தொகையிலும் மிகவும் அதிகமான இந்தியாவில் விவசாயத்தின் மூலம் 67 கோடி ரூபாயும், கைத்தொழில் மூலம் 13 கோடி ரூபாயும் கிடைக்கிறது.

இந்தியாவைப்பார்க்கிலும் நிலவிரிவிலும், ஜனத்தொகையிலும் சுமார் ஆறுபங்கு குறைச்சலான பிரிட்டனில் கைத்தொழில் மூலம் வருஷத்தில் 800 கோடி ரூபாய்க்கு சாமான்களை உற்பத்தி செய்வதனாலேதான் அவர்கள் நாட்டுக்கு வேண்டியது போக வெளிநாடுகளுக்குங்கொண்டு போய் விற்றுப் பணத்தைக்கொண்டு போகிறார்கள். இப்படிமேல் நாட்டார்கள் இந்தியாவில் சாமான்களை கொண்டுவந்து விற்றுப்பணத்தைக் கொண்டு போவதினாலும், நாம் நமக்குத் தேவையான சமான்களையாவது செய்து கொள்ளாமல் வெளி நாடுகளிலிருந்து என்னென்ன சாமான்கள் புதிதாக வருகிற தென்றுபார்த்து போட்டி போட்டு வாங்கி அவர்களுக் குப்பணத்தைக் கொடுத்துவாங்கி வறுமையும், அன்னியர் ஆதிக்கமும் நிலைத்திருக்கச்செய்கிறோம்.

இந்தியாவில் விவசாயமும், கைத்தொழிலும் விருத்தி அடையாமலிருப்பதற்கு அரசாங்கந்தான் காரணமென்று சிலர் சொல்கிறார்கள். இந்தியாவில் ஜாதிமதப்பிரிவுகளிருப்பதால் ஒருவரை யொருவர் நம்புதலாகியும், சகசம் பாராட்டியும் வாழ்வதற்கில்லாமல் பொரும்பாலும் பகைத்தும், சண்டையிட்டும் வருவதினாலேதான் பலர்சேர்ந்து பெரிய தொழிற்சாலைகளையும், கூட்டு வர்த்தகத்தையும் செய்ய முடியாமலிருப்ப தோடு ஏதாவது ஆரம்பித்தாலும் பலவித காரணங்களால் சீக்கிரம் நஷ்டமாகி நின்றும் போய் விடுகிறது. விவசாயத்திற்காக நூதனமான வகையைக் கண்டு பிடித்து அதன்படி செய்யவேண்டுமென்ற கவலையும், முயற்சியும் எடுக்கிறதில்லை. இதனால் தான் விவசாய வருமானம் மற்ற நாட்டில் காணுதலைப் பார்க்கிலும் மிகவுங் குறைச்சலாகக் காணுகிறது. இப்படியாக நம்முடைய சாதிமத பேதங்களும், வருணாச்சிரம தருமமும், வைதீகக்கொடுமைகளுந்தான் மற்ற நாட்டார்களை நம்மையும் பூமியில் ஓடவும், தண்ணீரில் மிதக்கவும், ஆகாயத்தில் பறக்கவும் விடாமல் நம்முடைய கண்களைக் கெடுத்தும், கால் கைகளை முறித்தும் வருகிறதேயொழிய அரசாங்கத்தார் பேரில் முழுவதுங்குற்றஞ் சொல்லுவதற்குக்காரணமில்லை.

இந்தியாவிலுள்ள சாதி மத பேதங்களையும், வருணாச்சிரம தருமத்தையும், வைதீகக்கொடுமைகளையும் ஒழித்து, எல்லோரும் ஒற்றுமையடுவதனால் இந்தியாவிலும் விவசாயங்களுக்கும், கைத்தொழிற்சாலைகளுக்கும் விருத்தியாகி வறுமை நீங்கிப்போவதோடு அன்னிய ஆதிக்கத்தால் அடிமைப்படத்தேவையுமில்லையென்பது உண்மை.

## வருந்துகிறேன்.

சீர்த்திருத்தத் தோழரும், சுயமரியாதை இயக்க அன்பரும், எனது தோழருமான, தோழர். ஏ. பி. குமாரசாமி அவர்கள் சில நாட்களாக சுரத்தினால் பீடிக்கப்பட்டிருந்து, சென்ற 27—10—32 ௳ மாலை 2 மணிக்குத் திருச்செங்கோட்டிற்குப் பக்கத்திலுள்ள அனிமூரில் தமதில்லத்தில் உயிர்நீத்தார் என்ற செய்தியைக் கேட்டு வருந்துகிறேன். எனதனுதாபத்தை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேனெனத் திருச்செங்கோடு திரு எஸ்.கே.வரதராஜுலுதெரிவிக்கிறார்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தளவாடங்களைப்பற்றிய விவரங்களை ஜப்பானியர் மிகுந்த ரகசியமாக வேவைத்துக்கொண்டிருக்கின்றனர். ஏற்கனவே அவர்களிடம் முப்பது பெரிய யுத்தக் கப்பல்கள் இருக்கின்றனவாம், அத்துடன் இப்போதும் புதிய நான்கு பெரிய கப்பல்களைக் கட்டிவருகின்றனராம், அக்கப்பல்களில் அமைக்கப்படும் "பீரங்கிகள்" ஒவ்வொன்றும் நிமிடத்திற்கு நூற்றைம்பது குண்டுகளை பிரயோகிக்கும் வலிமை பெற்றனவாம், இதிலிருந்து அந்த பீரங்கிகளின் வலிமை ஒருவாறு வெளியாவதோடு ஜப்பானிய மருந்துகிடங்கில் சேமித்துக்குவிக்கப்பட்டிருக்கும் வெடி மருந்துகளில் அளவும் எவ்வளவு அதிகமானது என்பதும் விளங்கும். மற்றும் ஜப்பானியரின் நீர் மூழ்கிக் கப்பல்கள் ("சப்மரீன்") அபார வலிமையைப்பெற்றிருக்கின்றன. அமெரிக்கக்கப்பல்கள் தன்னாட்டு கடற்கரையை அடுத்து நின்று எதிரிகள் வரவொட்டாது காவல்புரிவனவேயன்றி தூரத்திலுள்ள எதிரிகளின்நாட்டுக்குச் சென்றுபோர்தொடுக்கும் அவ்வளவு ஆற்றலற்றவையாம்! ஆனால் ஜப்பானியக் கப்பல்களோ, எதிரியின் நாட்டிற்கே சென்று போரிட்டு வெற்றி பெறத்தக்க வலிமையுடையனவாம்! சாதாரணமாக ஜப்பானின் மிகத்தாழ்ந்த பலமுடைய ஒரு நீர்மூழ்கிக்கப்பலையும் அமெரிக்காவில் மிகப்பலம் படைத்த ஓர் நீர்மூழ்கிக் கப்பலையும் ஒப்பிட்டுப்பார்த்தால் அமெரிக்கக்கப்பல் அந்த ஜப்பானிய கப்பலுக்கு இணையாகாதாம்! ஆ! என்னே! ஜப்பானிய போர்க்கப்பல்களின் திறம், இவையாவற்றிற்கும் காரணமென்ன? கைத்தொழிலேயன்றோ?

சிறிய தேசமாகிய ஜப்பான், சொற்பஜனத்தை கொண்டதாகிய ஜப்பான்; "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் முதுமொழிக்கு இலக்காக விளங்கி, தனது விடாமுயற்சியின் பயனாய், உலகிலுள்ள வல்லரசுகளின் கவனங்களையெல்லாம் தன்பக்கம் ஈர்த்து எத்துணைமகத்தான கீர்த்தியை அடைந்திருக்கிறதென்பது கவனித்து பின்பற்றற் பாலதாம்! சுருங்கக் கூறுங்கால் கல்வியை இருபாலரிடையும் பரப்பியதாலும், பெண்களுக்குச்சமத்துவஉரிமைகள்அளித்ததாலும் இவையெல்லாவற்றிற்கு மேலாக கைத்தொழிலை கண்ணெனபோற்றிவளர்த்ததாலுமே ஜப்பான் இன்று அதி உன்னத நிலையிலிருக்கின்றது!

எனவே, எனதன்பார்ந்த இந்திய தோழர்கள்! இந்தியாவின் க்ஷேமத்தை நாடும் ஒவ்வொரு இந்தியரும் ஜப்பானைப்பின்பற்றி உழைப்பார்களானால் ஜப்பானைப்போன்று பதின்மடங்குச் சிறப்புடைய நாடாக, இந்தியாவை ஆக்கி விடலாம்! இத்தகைய மகத்தான வேலையில் எத்தனை வீர இந்தியர்கள் முற்படப்போகின்றீர்கள்? வீணே, காங்கிரசுக்கும் கதருக்கும் ஜே! போட்டுக்கொண்டு தக்ளியில் நூல் நூற்று விட்டு, சுதேசியம்! சுயராஜ்யம்!! என்று கத்துவதில் எள்ளளவும் பயனே கிடையாதென்பதையும், எச்சரிக்கின்றேன்.

அபிவிருத்தி யடைந்துவரும் ஜப்பானைப் பின்பற்றி நாட்டின் க்ஷேமத்திற்குழைக்க இந்திய தோழர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்வான் வேண்டியே இக்கட்டுரை எழுத நேர்ந்தது!

## திருமங்கலம்.
### சுயமரியாதைபிரசாரம்

இவ்வூருக்குப்பக்கத்திலுள்ள 'கூளையாபுரம்' என்ற ஆதி திராவிடசேரியில் 30. 10. 32. ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு ஒருசுயமரியாதை பிரசாரக்கூட்டம் தோழர், அண்ணாமலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள், சிங்காரவேல், மணிமாறன், குழந்தைவேல், தங்கையா பாண்டியன், முதலியோர் பேசினார்கள்.

தோழர் ரத்தினம் அவர்கள் சுயமரியாதைக் கீதங்கள் வெகு இனிமையாகப் பாடினார். சேரியிலுள்ள தோழர். பழனியாண்டி அவர்கள் தீண்டாமையால் தாங்கள் படும் துயரைப்பற்றிப் பேசி வந்தனோபசாரம் கூறினார். கூட்டத்திற்கு நூற்றுக்கணக்கான ஆதித் திராவிடர்களும், பெண்களும், கூடியிருந்தனர். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இரவு 8 30 மணிக்கு முடிந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## நாகர் கோவில் சுயமரியாதை இளைஞர் சங்கம்.

இச்சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று கோட்டாறுசுயமரியாதை வாசிப்புச்சாலை கட்டிடத்தில் தோழர் எஸ். சி. முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது அவ்வமயம் இளைஞர் சங்கத்தின் தலைவராகயிருந்த ஏ. பெருமாள் அயலூர் சென்றுவிட்டதின் காரணமாக அதற்கு பதிலாக ஆர்—மாடசுவாமி அவர்களை தலைவராகவும், காரியதரிசியாக இருந்த எஸ். கிருஷ்ணன் தம்பதவியை விட்டு விட்டாதால் எஸ். சி. முத்துவைக்காரியதரிசியாகவும், நியமிக்கப்பட்ட பின்னர், சுயமரியாதை இயக்கம் கூறுவதென்ன என்பது பற்றியும், இளைஞர் கடன் என்பதுப்பற்றியும், திருவாளர்கள் எஸ் கிருஷ்ணன் கே. இராமய்யா, எஸ். முதலிங்கம் ஆர். மாடசுவாமி, வி. சுப்பையா முதலியோர் பேசினார்கள், சங்கத்தின் நான்காவது பொதுக் கூட்டம் குளங்கடையில் நடைபெறுது என கூட்டத்தில் கூறப்பட்டது எனக்காரியதரிசி அறிவிக்கிறார்.

# சவச்சடங்கில் சீர்திருத்தம்.

(மயிலை. சீனி. வேங்கடசாமி)

காணக்கற்ற சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருக்கின்றன. அச்சீர்திருத்தங்களில் சவச்சடங்கைப்பற்றிய சீர்திருத்தமும் ஒன்றாகும். சவச்சடங்கைப்பற்றிய சீர்திருத்தத்தில் ஒருவரும் கவனம் செலுத்தவில்லை. சவச்சடங்கைச் சீர்திருத்த வேண்டுமானால், பகுத்தறிவு சீர்திருத்தக் காரர்களாகிய சுயமரியாதை இயக்கத்தினரால் தான் முடியும். ஏனென்றால், வைதீகர்கள் சீர்திருத்தத்திற்கு உடன் படமாட்டார்கள்; பொது ஜனங்களோ என்றால், பழையவழக்கம் என்றுசொல்லி பழமை பாராட்டுவார்கள்; அரசாங்கத்தாரோ என்றால் சமயசம்பந்தமான விஷயங்களில் தலையிடமாட்டோம் என்று சொல்லிவிடுவார்கள். ஆகவே, இந்தச்சீர்திருத்தப் பொறுப்பு சுயமரியாதை இயக்கத்தின்மேல் விழுகிறது. இனிகூடப்போகிற சுயமரியாதை மகாநாடுகளில் இவ்விஷயத்தைப்பற்றியும் யோசித்து யாதேனும் ஒரு முடிவுக்கு வரும்படி சுயமரியாதை இயக்கத் தோழர்களை வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இனி, சவச்சடங்குகளில் என்ன சீர்திருத்தம் செய்ய வேண்டும், ஏன் செய்யவேண்டும் என்பதைப் பற்றிக் கவனிப்போம்.

கிறிஸ்தவர்கள், முகம்மதியர்கள் முதலியவர்களைத்தவிர, இந்துக்கள் எல்லோரும் தங்கள் பிணங்களை முகத்தைத் திறந்தபடியே வீதிகளின் வழியாக சுடுகாட்டிற்குக் கொண்டு போகிறார்கள். இந்துக்களில் சில வகுப்பார் தங்கள் பிணங்களை உட்காரவைத்து முகத்தைத்திறந்தபடியே வீதிகளின் வழியாகக் கொண்டு போகிறார்கள். இவ்விதபிணங்களை, தெருவில் போகிற ஜனங்கள் பார்க்கும் போது ஒருவித அருவெறுப்பு உண்டாகிறது. பிணங்களின் விகாரமான முகத்தைப் பார்க்க யார்தான் இஷ்டப்படுவார்கள்? பிணத்தின் சொந்தக்காரர்களுக்கு விகாரமாகத் தோன்றாது. ஆனால், மற்ற பொது ஜனங்கள் பிணங்களின் முகத்தை வீதிகளில் காணும்போது அருவெறுப்படைகிறார்கள். அன்றியும் இறந்து போனவர் தொத்து வியாதிகளினால் இறந்திருக்கலாம், அப்படிப்பட்ட பிணங்களை, வீதிகளில் திறந்தபடியே கொண்டு போவது எவ்வளவு மோசமான காரியம் பாருங்கள்.

கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும் தங்கள் பிணங்களைப் பெட்டிகளில் வைத்து துணியினால் மூடிக் கொண்டு போகிறார்கள். அதனால், அப்பிணங்களைப் பார்ப்பதற்கு வெறுப்புண்டாகிறதில்லை. ஆனால், ஒருவித மரியாதை நம்மையறியாமலே உண்டாகிறது. இந்துக்களின் பிணங்கள் தூரத்தில் வரும்போதே, வீதியில் போகிறவர்களுக்கு ஒருவித அருவெறுப்பு தோன்றுகிறது. அருவறுப்பைத்தருகிற பிணத்தைக் கண்ணில் காணுதபடி சந்து வழியாக நுழைந்து போய் விடுகிறோம், சென்னை போன்ற நகரங்களில் இந்த "கண்ராவி"யை, அருவெறுக்கத்தக்க பிணங்களை தினந்தோறும் காணவேண்டியிருக்கிறது. இந்துக்களும், கிறிஸ்தவர் முகம்மதியர்களைப்போல் தங்கள் பிணங்களைப் பெட்டிகளில் அடக்கம் செய்து துணிகளினால் மூடிக்கொண்டு போனால் எவ்வளவு மரியாதையாக இருக்கும் என்பதை வாசகர்கள் யோசித்துப்பார்த்தால் விளங்கும். ஆகவே, இதைப்பற்றிச் சுயமரியாதை மகாநாடுகள் கவனித்து யோசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிணங்களைத்தூக்கிக்கொண்டு வீதிகளின் வழியாய் போகும் போது, வாத்தியங்களை வாசித்துக்கொண்டு போகிறார்கள். அந்த வாத்தியங்களோ கேள்பதற்கு கர்ண கடூரமாக இருக்கின்றன. துக்கரமான சடங்குகளில் எவ்விதமான வாத்தியங்களையும் விலக்கிவைப்பது சுயமரியாதைக்காரர்களின் கொள்கையாயிருக்குமானால் நலமாயிருக்கும் என்று தோன்றுகிறது. ஐரோப்பியர்களும் கிறிஸ்தவர்களும் பிணங்களைக் கொண்டு போகும் போது வாத்தியம் வாசிக்கிறார்களே; நாமும் வாத்தியம் வாசித்தால் என்னதவறு என்று சிலர் கேட்கலாம். கிறிஸ்தவர்கள் சவச்சடங்கில் வாத்தியம்வாசிப்பதற்கும்நம்மவர் வாத்தியம் வாசிப்பதற்கு வித்தியாசம் உண்டு. அதாவது, கிறிஸ்தவர்கள் சவச்சடங்கில் வாசிக்கும் ராகம் விசனகரமான ராகம்; கலியாணம் முதலிய சுபகாரியங்களில் வாசிக்கும் ராகம் சந்தோஷகரமானதாயிருக்கும். ஆனால், நம்மவரின் சங்கு திருச்சின்னம், சேமக்கலம் முதலிய வாத்தியங்களை வாசிக்கும்ராகம் சாவிலும் வாழ்விலும் ஒரே ராகந்தானே? கலியாண காலத்தில் வாசிக்கும்மாதிரியாகத்தான் இழவுகாலத்தில் வாத்தியம் வாசிக்கிறான். ஆகையால், சுபகாலங்களில் வாசிப்பதற்கு ஒரு ராகமும் அசுபகாலங்களில் வாசிப்பதற்குவேறு வகை ராகமும் ஏற்படுகிறவரையில், சுயமரியாதைக் காரர்கள் துக்ககரமான சடங்குகளில் வாத்தியங்களை நிறுத்தி வைப்பது உத்தமம் என்று தோன்றுகிறது.

இனி, பொறி இறைத்தல், வாய்க்கரிசி இடுதல், குடம் உடைத்தல் முதலிய மூடச்சடங்குகள் அனாவசியம் என்பது சொல்லாமலேயமையும்.

கடைசியாக, சுயமரியாதைக்காரர்களின் கொள்கை பிணங்களைக் கொளுத்துவதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஏனெனில் பிணங்களைப் புதைப்பதால் அவை பூமிக்குள் அழுகி நைந்து போய்விடுகிறது. அப்போது, மழை பெய்தால், மழைத்தண்ணீர் பூமியில் ஊறி குளம், கிணறு, ஆறு முதலியவைகள் பக்கத்தில் இருந்தால் அவற்றுடன் கலக்கிறது. அவ்விதம் கலக்கும் போது, பிணத்துடன் ஊறி சுறக்கிற தண்ணீராகையால், அத்தண்ணீரை உபயோகிப்பவர்களுக்குப் பலவித நோய்கள் உண்டாகக்காரணமாயிருக்கிறது. ஆகையால், பிணங்களைப் புதைக்காமல் கொளுத்திவிடுவது நலம். பிணங்களைக்கொளுத்தினால், அதனால் உண்டாகும் புகை காற்றுடன் கலந்து ஜனங்களுக்குத் தீமையுண்டாக்கும் என்று சிலர் சொல்லக்கூடும். ஆனால், கொளுத்துவதனால் ஏற்படும் தீமையைவிட புதைப்பதனால் உண்டாகும் கெடுதி அதிகமாகையால் கொளுத்துவதே சிறந்த முறையென்று தோன்றுகிறது.

சவச்சடங்குசம்பந்தமான இந்தச் சீர்திருத்தம் சீக்கிரமாகச்செய்யப்பட வேண்டிய ஒரு விஷயம். ஆகையால் அன்பர்கள் அனைவரும் திரயோசிக்க வேண்டுகிறேன்.

---


## ஹிமகிரி தைலம்.

### ஸ்நானத்திற்கு ஏற்றது.



உடம்பையும், கண்களையும், மூளையையும் ஆச்சரியப்படத்தக் கவிதமாய் குளிர்ச்சி செய்கிறது. சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. தலைவலிக்கு சிறந்த மருந்து அபிப்பிராயம்:- ஆர். எஸ், மூட்டனிஜு பி. இ. எலக்டிரிக்பவர் ஹவுஸ் உதகமண்டலம். கடந்த ஆறுமாத காலமாக தங்கள் தைலத்தை நான் உபயோகிக்கிறேன் எல்லாத்தைலங்களைவிட தங்கள் தைலம் சிறந்து விளங்குவதோடு குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் தரத்தக்கதாயிருக்கிறது. உள்நாட்டு மூலிகைகளைக் கொண்டு செய்யப்பட்ட, விலை சகாயமான தைலம் இதுவே. நல்ல பலந்தரக் கூடியதாயிருக்கிறது. பொது ஜனங்களுக்கு இதை சிபார்சு செய்கிறேன்.

விலை 1—0—0, 0—8—0.

## ரத்னமிஸ்ரி ஹல்வா.

மூளையையும், உடலையும், பலப்படுத்துவது.

பலவீனம், ஜீரணக்குறைவு, சோம்பல், இந்திரிய ஸ்கலிதம் முதலியவற்றை நீக்கவல்லது. தாதுவிர்த்திக்கேற்றது. விலை 2—8—0, 1—1—0.

நற்சாட்சி பத்திரங்களும், தங்கமெடல்களும் பரிசுபெற்றது.

கிடைக்குமிடம்:—

எம். பெருமாள் நாயுடு,
மளிகை ஈரோடு,

மெடிகல் எம்போரியம், ஈரோடு.

சோல் ஏஜண்ட்,
அனந்தகிருஷ்ண பிளவர் மில்ஸ்,
பெங்களூர்சிட்டி.

[[illegible]-ம் பக்கத்தொடர்ச்சி]

தர்ம வாதியின் கண்கள் எதைக் காண்கின்றன. காதுகள் எதைக் கேட்கின்றன?

மனிதர்களாகப் பிறந்தகோடிக்கணக்கான மக்களின் பசிப்பிணியைசமதர்ம வாதியின் கண்கள் காண்கின்றன! கோடிக்கணக்கான மக்கள், ஒருவேளை உணவும், ஒரு முழத் துணியும், ஒரு முழக்குடிலுமற்று, கன்னங்கள் ஒட்டி, கண்கள் குழிவிழுந்து பிடரியை நோக்கிப்பிரயாணம்போய், வயிறுஒட்டி, கூன் விழுந்து, எலும்பெலும்பாய், நடக்கச்சக்தியற்று, நடைப்பிணங்கள் போன்று காலங் கழிப்பதை அவன் கண்கள் காண்கின்றன!

போதிய சுகாதாரவசதியில்லாமல் கொடிய நோய்களுக்காளாகி வருடந்தோறும் கோடான கோடி மக்கள் உயிரிழப்பதைச்சமதர்ம வாதியின் கண்கள் காண்கின்றன!

"ஐயோ! பசி! ஐயையோ! பசி! பசி!!" என்னும் கூட்டுக்குரல்சமதர்ம வாதியின் செவிகளைப்பிய்த்துக் கொண்டுபோகின்றது!

இக்கண்ருவிகளைத்தான் ஒவ்வொரு சமதர்ம வாதியும் இந்நாட்டில் காண்கிருன். அதேநேரத்தில், மதத்தின் பேரால்,—மதக்கட்டுப் பாட்டுகளின் பேரால், நாட்டில் லட்சக்கணக்கான கோவில்களும், கோவில்கள் எல்லாவற்றிலும் கோடிக்கணக்கான குழவிக்கல்லுகளும், இருப்பதையும், அவற்றிற்கு வாகனங்களென்றும், ஆபரணங்களென்றும் பட்டாடைகளென்றும், லக்ஷக்கணக்கான பணம் செலவு செய்யப்படுவதையும், தேர் என்றும், திருவிழா என்றும், கும்பாபிஷேக மென்றும், கோடிக்கணக்கான பணங்களும், அபிஷேக மென்றும், ஆராதனையென்றும், ஆறுகால, பன்னிருகாலப் பூஜையென்றும், வாத்தியமென்றும், நாட்டிய மென்றும் கோடிக்கணக்கான பணம் வீணுவதையும் சமதர்மவாதி காண்கிருன்!

"இவ்வாறெல்லாம் செய்வது மதக் கட்டுப்பாடுகள். இவை யெல்லாம் மோக்ஷ சாதனங்கள்" என வைதிகர்கள் கூறும் வார்த்தைகளைச்சமதர்ம வாதியின் காதுகள் கேட்கின்றன!

நாட்டில் கோடிக்கணக்கான ஏழை மக்கள் படும் பாட்டையும், இந்த வைதீக மதாச்சாரங்களையும் அவன் காணும்போது அவன், "மதங்கள் இவ்வறிய ஏழைமக்களை ஏடுபெடுத்துப்பார்க்குமா? மதக்கட்டுப்பாடுகள் இந்தகோடிக்கணக்கான மக்களின் வறுமையைப் போக்குமா? இவர்களுக்கு ஒருவேளைச் சோறுகிலும் போடுமா? இவர்களின் அறியாமையைப் போக்குமா? சுகாதாரவசதியளிக்குமா? என்று உரத்தகுரலில் கேட்கிருன். ஏனெனில் அவன் கண்ணெதிரில் இந்த வறுமைத்தோற்றந்தான் தெரிகிறது. தேவலோக சாயுஜ்யவாழ்க்கை அவன் கண்களுக்குக்காணப்படவில்லை!

எனவே சமதர்மவாதி "ஏழைமக்களின் பசியைப் போக்குபவை எவையாயினும், அவை இருக்கட்டும்; அப்படியல்லாதவை அழிந்தொழியட்டும்" என்று கூறிவாளை ஓங்குகிருன். மதக்கட்டுப்பாடுகள், வயிற்றுப்பசிக்குச்சோறு தருவதாக உறுதிகூறவில்லையாதலின் அவனது வாள்வீச்சு, மதங்களின் மேல்தானுகவே விழுகிறது.

கண்ணுக்குத்தொரியாததும், அறிவிற்கும் அனுபவத்திற்கும் பொருத்தமற்றதும், நம்பிக்கைக்கிடமற்றதுமான ஒன்றில் செத்தபின் போய் சுகமனுபவிப்போம் என்பதற்காக இன்று பட்டினிகிடத்தலென்பதை சமதர்மவாதி ஒத்துக்கொள்ள மறுக்கிருன்.

எனவே, இன்றுபசியாலும், நோயாலும்வாடும் ஏழைகளுக்கு வேண்டியது, வயிற்றுக்குச் சாப்பாடே தவிற, வேறு, சாலோப, சாரூப. சாமீப, சாயுஜ்ய பதவியாவது, அங்கிருப்பதாகப்பிதற்றப்படும் காமதேனு கற்பக விருட்சமாவதல்ல! மேலும், இந்த மதக்கட்டுப்பாடுகளாலும், கடவுள்பெயராலும்,

## கோழுப்பது யார்?

என்று பாருங்கள். குருக்கள், ஜீயர்கள், மடாதிபதிகள்; தர்மகர்த்தாக்கள், பண்டார சன்னிதிகள், மகந்துக்கள்; பாதிரிமார்கள், பிஷப்புக்கள், முல்லாக்கள், ஆலிம்கள், ஆகியவர்களின் வயிறு புடைப்பதைத்தவிற அல்லும் பகலும், இரத்த வியர்வை சிந்தப்பாடு படும் ஏழையின் கதி என்ன? அந்த ஏழைகளுக்கு இம்மதக்கட்டுப்பாடுகள் என்னபயனை அளித்தன? இதுதானே நமது கேள்வி?

இவர்கள், இந்த ஏழைகளிடம் மறு உலக ஆசைகாட்டுவதும், கர்மம் பிராப்தம், என்று கூறுவதும் எதனுல்? இவர்களது பாழும் வயிறு வாடாதிருப்பதால் அல்லவா? எங்கே? மறு உலகப்பதவிக்கு மக்கள் வழி தேடும்படி அவர்களுக்கு உபதேசிப்பது புண்ணியமான தொழில்தான் ஆகையால் இந்த பிஷப்புகள், முல்லாக்கள், ஆலிம்கள் மடாதிபதிகள், மகந்துக்கள் ஆகியவர்களெல்லோரும் தங்கள் வயிற்றை வாடப் போட்டுக் கொண்டு, கால் நடையாய் பாதி நிர்வாணத்துடன் சுற்றி பரலோக உபதேசம் செய்யட்டுமே பார்க்கலாம்! இந்த புண்ணியமான உத்தியோகத்திற்கு எத்தனை போதகர்கள் தயாராயிருக்கிருர்கள்? பல்லக்குகளென்ன! யானை; குதிரை, ஒட்டகைகளென்ன! மோட்டார்களென்ன! ரெயில்வண்டிகள், புகைக் கப்பல்கள், ஆகாயவிமானங்களென்ன! விதவிதமான ஆடைகளென்ன! விதவிதமான சாப்பாடென்ன! இவையெல்லாம் இவர்களுக்கு எதற்கு? பரலோகத்தில் போய் சுகமாகச் சாப்பிடலாமே! "உனக்கு மட்டில் இத்தனைவகை வாகனங்களையும், ஆடையாபரணங்களையும், விதவிதமான சாப்பாடுகளையும் கொடுத்த இந்த மதக்கட்டுப்பாடுகள் எனக்கு ஏன் வயிற்றுக்கு உணவு கொடுக்கவில்லை? என்றுதான் ஏழைத்தொழிலாளி கேட்கிருன்! இதற்கு இந்த குருக்கள் கூட்டம் பதிலிறுத்தாக வேண்டும். சும்மா உறுமுவதில் பயனில்லை.

எனவே, மதக்கட்டுப்பாடுகளும், கடவுள் பக்தியும், கண்களுக்கெதிரில் மனிதன் படும் பாட்டை நீக்குவனவாயில்லை. முட்டுக்கட்டையிடவே செய்கின்றன. இவற்றை நன்கு அறியும் நிலைக்குத் தொழிலாளி வரும்போதுதான் தலைகீழ்ப் புரட்சி ஏற்படுகிறது. மதமும், குருக்கள் கூட்டமும் ஓடி மறைகின்றன!

பொதுவாக, மதங்கள் பலவும், பற்பல இடங்களில், பற்பல சமயங்களில், மக்களின் நலன்கருதி உண்டு பண்ணப்பட்டனவே தவிற எந்தக் கடவுளும் ஆகாயத்திலிருந்து கட்டிச் சுருட்டி அனுப்பி விடவில்லை. இதனுல் இன்று உலகில் பலமதங்கள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் எந்தெந்தக் காலத்தில், யார் யாரால், எப்படி எப்படி, எந்த எந்தக்கருத்துக் கொண்டு உண்டுபண்ணப்பட்டனவென விவரித்துக் கொண்டு செல்லநாம் விரும்பவில்லை. ஆனுல், இந்த பலவேறுபட்ட மதங்களும், உலகில் மக்களுக்கு என்ன சுகங்களைக் கொடுத்தன என்றுதான் அறியவிரும்புகிருேம்.

ஒருமதம் தோன்றிற்று; அதுஒரு கட்டுப்பாட்டை உண்டு பண்ணிற்று; ஆனுல், தன்னம்பிக்கையற்ற தன்மையையும், சோம்பேறித்தனத்தையும் கூடவேவளர்த்தது. வஞ்சகர்களின் வயிறு கொழுக்கத் தக்க வழிகளைத்தனது அடிமடியில் கட்டிக் கொண்டு ஆவலாதியடைகின்றது!

இன்ஞெரு மதம் வந்தது. அது எல்லோரிடமும் அன்பாயிருங்கள்; எல்லோருக்கும் நன்மையே செய்யுங்கள் என்று போதித்தது. ஆனுல் அதுவும் தன்னுடன் மூடநம்பிக்கைகளையும், காணுத ஒன்றை நம்பிக் கருத்தழியும்படியும், அதன் பேரால் ஓர் கூட்டம் வயிறு நிறப்பவும் வழியைக் கொண்டுவந்தது.!

பிறகு, இன்ஞெருமதம் வந்தது. அது, ஆன்மாவுமில்லை, மோக்ஷ நரகமுமில்லை; எல்லோரையும் நேசி, எல்லோரிடத்தும் அன்பாயிரு என்று போதித்தது. ஆனுல் பின்னர் அதுவும் வஞ்சகர்களால் கவரப்பட்டு மூடநம்பிக்கைகளைக் கொண்டதாக இன்று காணப்படுகிறது!

பிறகு வேஞெரு மதம் தோன்றிற்று. அது, பெண்பிள்ளைகள் பூமியில் உயிருடன் புதைக்கப்படுவதைத் தடுத்தது. எல்லோரும் ஒழுக்கமாயிருக்கவேண்டும் என்று போதித்தது. ஆனுல் அதுவும், மறுஉலகத்தையும் ஆண்டவனையும், அங்கு சுகபோகத்தையும், இங்கு மூடநம்பிக்கையையும் கொண்டுவந்தது!

இத்தியாதி மதங்கள் ஒவ்வொன்றும் தங்களுக்குள் ஏற்பட்ட சாதி வேற்றுமைகளைச் சிருஷ்டித்துக் கொண்டன. ஆனுல் இந்த மதங்களும், சாதிகளும், இன்றையவரையில் ஏழையின் பசியைப் போக்க என்ன செய்தது? என்பதுதான் நமது கேள்வி.

அவ்வாறு ஒன்றும் செய்யவில்லை என்றவரையில் வைத்துக் கொண்டு, பின்னும் பின்னும் அவற்றைக்கட்டியழுது மாரடிப்பதைவிட, கழுதைகளை உதறித்தள்ளி விட்டு, எல்லோர் வயிறும் நிறம்பும் வழி எதுவென்று தேடுவதுதான் புத்திசாலித்தனமாகும் என்றுதான் சமதர்மவாதி கூறுகிருன். "வயிறுபசியாமல் சாப்பிடுதல்" என்பதுதான் அவர்களது மதமாயிருக்கும். இந்தக் கொள்கை அவர்கள் வயிற்றுக்கு உணவளிக்கும். அது எது? சமதர்மம் ஒன்றுதான் அவ்வழியாகும்.

---

## திருச்செங்கோடு வாலிப சகவாச சங்கம்.

அக்டோபர் 30 உ ஞாயிறு மாலை 5 மணிக்கு வாலிப சகவாச சங்கக் கட்டிடத்தில் வாராந்திரக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. கூட்டத்திற்குத் தோழர். ந. பழனிசாமியவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் எஸ். கே. வரதராஜுலு, டி. ஜி. அர்த்தனுரி, கே. சீனிவாசன், எம். ஏ.விருத்ரம், டி. ஏ கைலாசம் முதலாயினோர் "பெண்மக்கள் நிலையும், அவர்களின் முன்னேற்றமும்," என்னும் விஷயம் பற்றி உருக்கமாய்ப் பல மேற்கோள்களுடன் பாமரமக்கள் மனதில் பதியுமாறு பேசினுர்களென காரியதரிசி எழுதுகிருர்.

---

ANANGARANGABATIKA.

(*Enjoyment Pill*)

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of failure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**
***Chandanpur,***
**(Khulna) E. B. R.**

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 6. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... | 0—4—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—C |
| 8. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.


### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**


## 3 ரூபாய்க்கு 3 கடியாரங்களும் 90 சாமான்களும் இனும்.



வாசனையிற் சிறந்தது ஓட்டோ மோட்டியாவே. இது புஷ்பங்களின் சத்து. ஒரே தடவையில் 3 ரூபாய்க்கு 6 பாட்டில்கள் வாங்கு வோருக்கு, கோல்ட் கில்ட் டம்மிரிஸ்ட் வாட்ச் ஒன்றும், 5 வருஷ உத்திரவாதமுள்ள ஜெர்மன் 'பி' டைம்பீஸ் 1-ம், ரயில்வே டைம் டம்மிபாக்கட் வாட்ச் 1-ம், பவுண்டன் பேனு 1-ம், இன்னும் 90 சாமான்களும் இனுமாய் கொடுக்கப்படும். இனும் சாமான்கள் சேர்த்து விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.

General Trading Agency
15/1 Joymitter St., Hatkhola P. O., Calcutta.


## கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.


## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.


கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

## ரூபா 3-6-0 க்கு 3-கடிகாரங்களும் இதர வெகுமதிகளும்.

சத்தேகமில்லை, ஆச்சரியமில்லை, உண்மை!

ஆட்டோ சுகந்தராஜ் (இந்து பூத்த புஷ்பங்களின் சத்து) மணம் மிகுந்தது. 3-நாள் உபயோகத்துக்குரிய புட்டி3-அணு. படைமருந்து 12



மணி நேரத்தில் பரிபூரண குணம் டப்பி 1-க்கு 3அணு. மேற்படி 2-தினுசுகளும் சேர்ந்தாவது தனித் தனியாவது 18-புட்டிகள் ரூபா 3-6-0 க்கு ஆர்டர் செய்தால், கோல்ட் நிப் பௌண்டன் பேனு 1. 500-கஜம் வரை வெளிச்சம்தரும் பாட்டரி லாம்ப் 1, நூதன கைக்கெடியாரம் 1, பர்மா டைம்பீஸ் அல்லது ரயில்வே மெயில்கார்ட் லீவர் பாக்கெட்வாச் 1-ம், இனுமாக அனுப்பப்படும். ஒவ்வொரு கடிகாரமும் 10 வருடம் உத்தரவாதம். சாமான்கள் பிடித்தமில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும். பாக்கிங் தபால் செலவு தனி.

விலாசம்:—Sharma Brothers & Co.,
Post Box No. 2412, Section 90,
Calcutta.

---

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனூர் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு.

இம்பீரியல் பிரஸ், மாயவரம்.


---

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும். இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம், மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன. இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்).

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சித்தாராமையாவும், என்' எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.